# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 76 தை 28ஆம் நாள் சனிக்கிழமை 10 பெப்ரவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### வாக்குச் சாவடிக்குள் வந்த பாம்பால் பெரும் பரபரப்பு

யாழ்ப்பாணம், பெப்.10
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்குச் சாவடியொன்றுக்குள் பெரும் நச்சுப் பாம்பு புகுந்து சாவகாசமாகப் படுத்துக் கொண்டது. அங்கிருந்த அலுவலர்கள் அதை » 06

# யாழ். பல்கலை. ஆசிரியர் சங்கம் உள்நோக்கோடு பொய் கூறுகிறது

யாழ்ப்பாணம், பெப். 10
அரசியல் உள்நோக்கத்துடன் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டுள்ளது என்று யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியத்தின் பொருளாளர் நா.இராசநாயகம் குற்றம் சுமத்தியுள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் 2015ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சமூக நலத்திட்டங்களை மக்களுக்கு மேற்கொண்டு வருவது யாவரும்அறிந்ததே.எமதுதிட்டத்துக்கு அமைவாகக் கடந்த 7ஆம் திகதி தொடர்பு சாதனங்கள் ஊடாக அறிக்கை வெளியிட்டிருந்தோம். இந்தக் காலகட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது மிக முக்கியமானது.
அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தலைவரும், செயலரும் ஒப்பமிட்டு விதிகளுக்கமைவாக அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தனர். பல் » 06

# தமிழர் தங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல் இன்று

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10
தமிழ் மக்கள் தமது தலைவிதியை தீர்மானிக்கும், தீர்க்கமான தேர்தலுக்கு இன்று முகம்கொடுக் கின்றார்கள். தமிழ் மக்கள் நீண்ட நெடிய போராட்டத்தில் பல்வேறு தேர்தல்களைச் சந்தித்திருந்தாலும், மிக முக்கியமான கால கட்டத்தில், தருணத்தில் இன்றைய தேர்தலை எதிர்கொள்கின்றார்கள்.
உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைத் தீர்மானிக்கின்ற தேர்தலாக உள்ள போதும், இன்றைய தேர்தலில் வாக்களிப்பு தேசிய ரீதியாகவும், பன்னாட்டு ரீதியாகவும் உற்று நோக்கப்படுகின்ற ஒன்றாக உள்ளது. 41 ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுதி அடிப்படையிலான தேர்தலாக இது நடைபெறுகின்றது. இலங்கை அரசியல் வரலாற் » 06



## எங்கள் பிள்ளைகளுக்குச் சதி செய்தோர் நிச்சயம் அழிவர்

### தேடி அலையும் தாய்மார் தேங்காய் உடைத்து சாபம்

வவுனியா, பெப்.10
காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், வெளிப்படுத்தவும் வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்திவரும் அவர்களது உறவினர்கள் நேற்றுத் தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். ஆலயத்தில் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். » 06

## காலையிலேயே வாக்குரிமையை பயன்படுத்துக!

கொழும்பு, பெப். 10
இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ள அனைத்து வாக்காளர்களும் காலை வேளையில் சென்று தமது கடமைகளை நிறைவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார். » 06



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இன்று நடக்கவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுப் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன

see more news in
newuthayan.com

## வாக்காளர் அட்டைகளை சென்று வாங்கிய மக்கள்

### வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியும்

யாழ்ப்பாணம், பெப். 10
வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தபால் நிலையங்களில் பெருமளவு பொதுமக்கள் நேற்றுக் காலை கூடியிருந்ததை அவதானிக்க முடிந்தது.
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை வழங்கலை தபால் திணைக்களம் மேற் » 06

## வாக்காளர் அட்டைகளுடன் முல்லைத்தீவில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, பெப்.10
முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பிரதேசத்தில் வேட்பாளர் ஒருவர் தனது கடையில் 10க்கும் மேற்பட்ட வாக்காளர் அட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுக் கைது செய்யப்பட்டார். » 06

வடக்கில்

## 6,747 பேரில் இன்று 726 பேர் தெரிவாவர்

### 8 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், பெப். 10
வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 726 பேரைத் தெரிவு செய்வதற்காக 6 ஆயிரத்து 747 பேர் போட்டியிடுகின்றனர். அவர்க » 06

## கேப்பாபிலவுப் போராட்டம் சமாதானத்துக்குக் குந்தகமாம்

முள்ளியவளைப் பொலிஸார் வழக்குப் பதிவு » 06

தமிழர்களை அச்சுறுத்திய

## பிரிகேடியருக்கு வக்காலத்து வாங்குவதை ஏற்க முடியாது

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10
தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடும் வகையில் நடந்து கொண்ட பிரிகேடியருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படாது என்று இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோர் தெரிவித்த கருத்து கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
பிரிட்டனில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்த தமிழ் மக்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் » 06

## இராணுவத்தின் கைகளில் பாடசாலை தேவையில்லை

### கல்வி அமைச்சிடம் ஒப்படைக்குமாறு ஐ.நா. குழுவொன்று வலியுறுத்துகின்றது

கொழும்பு, பெப். 10
இலங்கை இராணுவத்தால் நடத்தப்படும் அனைத்துப் பாடசாலைகளையும் கல்வி அமைச்சிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் குழுவொன்று இலங்கை » 06

## இராணுவத்தின் மனநிலை அம்பலத்துக்கு வந்துள்ளது

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10
பிரிட்டன் தூதரகத்தின் இராணுவ ஆலோசகரான பிரிகேடியர் நடந்து கொண்ட விதம், போரின் இறுதியில் இராணுவம் எப்படியாகச் செயற்பட்டது என்ற மனநிலையை வெளிப்படுத்தியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
"பிரிகேடியர் பெர்னாண்டோ » 06

# அவசரப்பட்டதால் அம்பலப்பட்ட பல்கலை ஆசிரியர் சங்கச் செயலர்




இது உதயன் பத்திரிகையில் 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அப்போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு இது வெளியிடப்பட்டிருந்தது. இதனை இப்போது பிரசுரிப்பது, தேர்தல் பரப்புரை நோக்கம் கொண்டது அல்ல. கல்வியியலாளர் ஒன்றியம் என்ற அமைப்பு 2015ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது என்பதையும், அந்த அமைப்பு முன்னரும் இவ்வாறான அறிக்கை வெளியிட்டிருந்தது என்பதையும் வாசகர்களுக்கு தெரியப்படுத்துவதற்காகவே வெளியிடப்படுகின்றது.




இது கல்வியியலாளர் ஒன்றியம் இல்லை என்று நேற்று செய்தி வெளியிட்ட உள்ளூர் பத்திரிகையில், அதே கல்வியியலாளர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி பிரசுரமானது.

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாண கல்வியாளர் ஒன்றியம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து செயற்படுவதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெரிவித்திருக்கவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடன் 'தொடர்பு இருப்பதாகவும் கூறவில்லை. இவ்வாறானதொரு நிலையில், அந்த ஒன்றியம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்செயற்படவில்லைஎன்றும், அதற்கும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்துக்கும் தொடர்பு இல்லை என்றும் அறிக்கை வெளியிட வேண்டிய தேவை, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலருக்கு ஏன் வந்தது?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கை முழுமையாக வெளியிடப்படுகின்றது.

'கடந்த 8 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் என்ற பெயரில் வெளிவந்த அறிக்கைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் அவ்வாறு எந்தவொரு அமைப்பும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இல்லையென்றும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இவ்வாறான அறிக்கைகள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சமூகப்பொறுப்பின் அடிப்படையில் இதனை மக்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் 2015ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. அந்த அமைப்பு 2015ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகின்றமைக்கு ஆதாரமாக, 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வெளியான உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ள அந்த அமைப்பின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மற்றும், ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையைப் பிரசுரித்த உள்ளூர் பத்திரிகை என்பன மௌனமாக இருந்தன.

யாழ்ப்பாண கல்வியாளர் ஒன்றியத்தின் அறிக்கையை இப்போது, இந்தத் தேர்தல் நேரத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் அவசரமாக மறுப்பு அறிக்கை வெளியிடவும், உள்ளூர் பத்திரிகை அதனைப் பிரசுரிக்கவும் என்ன அவசியம் ஏற்பட்டது என்று 'உதயன்' வினா எழுப்புகின்றான்.

**(1) கல்வியாளர் ஒன்றியம் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையை உதயன் பத்திரிகை பிரசுரித்திருந்தது. இந்த அறிக்கை வெளியானபோதோ, அல்லது அதன் பின்னரான கடந்த இரண்டு ஆண்டுகள் காலத்திலோ இந்த ஒன்றியத்துக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும் தொடர்பு இல்லை என்று எந்தவொரு மறுப்பு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.**

**(2) கல்வியாளர் ஒன்றியம் இல்லை என்று செய்தி பிரசுரித்த உள்ளூர் ஊடகத்தில், 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி, யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியத்தின் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அந்த ஒன்றியத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று இப்போது மறுக்கும் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் அந்தச் சமயத்தில் ஏன் மறுப்பு வெளியிடவில்லை.**

**(3) ஒன்றியம் இல்லை என்று செய்தி பிரசுரித்த உள்ளூர் ஊடகத்தில், தமது ஒன்றியம் நடத்திய கல்விக் கருத்தரங்குகள் தொடர்பான விளம்பரம் மற்றும் செய்திகள் இலவசமாக பிரசுரிக்கப்பட்டதாக கல்வியாளர் ஒன்றியத்தின் தலைவர் கூறுகின்றார். அத்தகைய விளம்பரங்கள் மற்றும் செய்திகள் வெளியிடப்பட்ட போது, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் எந்த மறுப்பும் வெளியிட்டிருக்கவில்லை.**

**(4) இவ்வாறானதொரு நிலையில், கல்வியாளர் ஒன்றியம் இப்போது வெளியிட்ட அறிக்கை தொடர்பில் மாத்திரம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை வெளியிடவேண்டியதன் தேவை ஏன் எழுந்தது.**

**(5) கல்வியாளர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயோ அல்லது உதயன் பத்திரிகையில் பிரசுரமான செய்தியிலேயோ, யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு இருப்பதாக எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில், அதனை மறுதலிப்பதற்கான தேவை ஆசிரியர் சங்கச் செயலருக்கு ஏன் எழுந்தது ?**

**(6) யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கிய நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் இல்லாமல் (அவர்கள் யாழ்ப்பாண நகரத்தில் தங்கியுள்ள நிலையில்) அவசர அவசரமாக செயலருக்கு கூட்டத்தைக் கூட்ட வேண்டியதன் தேவை ஏன் ஏற்பட்டது ?**

**(7) நிர்வாக உறுப்பினர்களாக 20பேர் வரையில் உள்ள நிலையில் 7 பேருடன் (பெரும்பான்மையும் இல்லாமல்) கூட்டத்தைக் கூட்டி அறிக்கை தயாரித்ததில், செயலர் ஏன் அவசரம் காண்பித்தார் ?**

**(8) ஆசிரியர் சங்கச் செயலர் ந.பிரதீபராஜா அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்துக்கும் கல்வியாளர் ஒன்றியத்துக்கும் தொடர்பில்லை என்று குறிப்பிட்டதற்கு மேலதிகமாக 'இவ்வாறான அறிக்கைகள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்குமாறும்' தெரிவித்துள்ளார். கல்வியாளர் ஒன்றியத்தின் அறிக்கை தொடர்பில், ஆசிரியர் சங்கச் செயலர் மக்களை விழிப்பாக இருக்குமாறு தெரிவித்ததன் ஊடாக ஏதோ ஒரு அரசியல் தரப்பை திருப்திப்படுத்த முனைந்துள்ளமை அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கின்றது.**

**(8) யாரோ ஒரு தரப்பினரைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர்களது வேண்டுகோளை ஏற்றே ஆசிரியர் சங்கத்தின் இந்த அறிக்கை வெளியிட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.**

*யாழ். பல்கலை*

## ஆசிரிய சங்கச் செயலருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாண கல்வியாளர் ஒன்றியம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல், தங்களது பெயர் குறிப்பிட்டு உள்ளூர் ஊடகத்தில் நேற்று வெளியாகியுள்ளது. எமது ஒன்றியம் தொடர்பில் உண்மையான தகவலை வெளியிடத் தவறினால், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் 'சங்கச் செயலர் ந. பிரதீபராஜாவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு யாழ்ப்பாண கல்வியாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.ரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ந.பிரதீபராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ள தாவது,

யாழ்ப்பாண கல்வியாளர் ஒன்றியம் நீண்ட காலமாக சேவைகளை வழங்கி வருகின்றது. சேவையின் ஒரு பகுதியாக வழமைபோன்று யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டது. இந்த அமைப்பின் தலைவர், செயலர் கையெழுத்திட்டு சட்டரீதியாக அனுப்பப்பட்டிருந்தது. உள்ளூர் ஊடகத்தில் 'கல்வியாளர் ஒன்றியம் எதுவும் இல்லை' என்று தாங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளீர்கள். இது உண்மைக்கு மாறானது.

எமது ஒன்றியத்தின் ஊடாக கடந்த காலத்தில், கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

தேர்தல் காலங்களில் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது போன்று பல்வேறு நடவடிக்கைகள் எமது அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் தனித்துவமானது. அது எந்தவொரு அமைப்பிலும் தங்கியிருக்கவில்லை. எந்த அமைப்பினதும் பெயரையும் பாவிக்கவில்லை.

உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். உள்ளூர் பத்திரிகையில் வெளியான அறிக்கையில், ஆசிரியர் சங்கச் செயலர் என்று குறிப்பிடப்பட்டுள் ளது. இவ்வாறான அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர், பொதுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள நிலையில் அவரது அங்கீகாரமின்றி அல்லது அவரது தலைமைத்துவம் இன்றி கூட்டம் நடைபெற்றுள்ளது. இதன் காரணமாக நீங்கள் வெளியிட்ட அறிக்கையை தனிப்பட்ட அறிக்கையாகவே பார்க்கின்றோம். உண்மை நிலையை பத்திரிகையில் நீங்கள் வெளியிடாவிட்டால், தங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க உள்ளோம் என்பதையும், இழப்பீடு கோர உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (5)

## பிரதீபராஜா வெளியிட்ட அறிக்கைக்கும் ஆசிரியர் சங்கத்துக்கும் தொடர்பில்லை

*பல்கலை. ஆசிரியர் சங்கத் தலைவர்*

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் செயலர் ந.பிரதீபராஜாவின் பெயரில் உள்ளூர் ஊடகத்தில் வெளியான செய்திக்கும், யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்துக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. இவ்வாறு சங்கத்தின் தலைவர் எஸ்.விஜயகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் கடிதத் தலைப்பில் அதன் செயலர் என்.பிரதீபராஜா மாத்திரம் கையெழுத்திட்டு ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் குறித்து அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தலைவரின் கையெழுத்து அறிக்கையில் காணப்படவில்லை. இது தொடர்பில் தொடர்புகொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் கடந்த சில தினங்களுக்குள் கூட்டப்படவில்லை. அதற்கான அறிவித்தலை நாம் விடுக்கவில்லை. இவ்வாறான நிலையில் தனியே செயலர் ஒருவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்புக்கு எமது சங்கம் பொறுப்பேற்க மாட்டாது.

இவ்வாறான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ஊடகம் வாயிலாகவே நான் அறிந்தேன். இது தொடர்பாக ஏனைய நிர்வாக உறுப்பினர்களிடம் நான் கேட்ட போது அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று பலர் என்னிடம் கூறினர்.

இந்த நிலையில் ஒரு சிலர் மட்டும் அவசரமாகக் கூடி தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளுக்கும் அறிக்கைகளுக்கும் நாம் பொறுப்பேற்க மாட்டோம் - என்றார். (5)

# தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறைவு

முல்லைத்தீவு, பெப்.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமுக மான முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் நேற்றுக் காலை மாவட்டச்செயலகத்தில் நடைபற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. 41 வட்டாரங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. 134 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான பெட்டிகள் மற்றும் அதனோடு இணைந்த அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

70 வாக்கு எண்ணும் நிலையங்களும் 41 பெறுபேறுகளை அறிவிக்கும் நிலையங்களும் உள்ளன.

பொலிஸாரின் சுற்று பாதுகாப்பு என்பன உட்பட இன்றைய தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

**மன்னார்**

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று மன்னார் மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் இன்று இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. இந்த முறை மன்னார் மாவட்டத்தில் சுமார் 86 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் கடமைக்காக சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 94 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 47 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 47 நிலைய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயிரம் அரச உத்தியோகஸ்தர்களும், பொலிஸ் அதிகாரிகளும் தேர்தல் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சரியான முறையில் அமைதியாக தேர்தல் நடவடிக்கைகளை எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

**நுவரெலியா**

இன்று நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. 504 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லல் மற்றும் அதிகாரிகளை அனுப்பும் பணிகள் 100 வீதம் பூர்த்தியாகியுள்ளன என்று நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்டச் செயலருமான ஆர்.எம்.பி.புஸ்பகுமார தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்தின் பல வாக்களிப்பு நிலையங்களுக்கு வான் போன்ற வாகனங்களை ஈடுபடுத்த முடியாமலிருக்கிறது. அங்குள்ள வீதிகளின் நிலை காரணமாக கப் மற்றும் ஜீப் வண்டிகளை பணியில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. அந்த வாகனங்களுக்கான தட்டுப்பாடு உள்ளது.

கொழும்பில் நாங்கள் கோரியிருந்த போதிலும் தேவையான வாகனங்கள் வழங்கப்படாத காரணத்தால் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளையும், அதிகாரிகளையும் அழைத்துச் செல்லும் பணி சற்றுத் தாமதமாகியது.

சில அரச நிறுவனங்களில் இருந்து வாகனங்கள் வரும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், எமக்கு அவை கிடைக்கவில்லை. இதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளோம். என்றார்.

(ற-ரி3,56)

## தங்க பிஸ்கட்டுடன் பெண் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.10

100கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்களை சட்டவிரோதமாக இந்தியாவுக்குக் கொண்டு செல்ல முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் நேற்று கட்டுநாயக்க விமானநிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண், கண்டி பேராதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை சுங்க பிரிவு அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (றரி5)

## மணல் அகழ்ந்தோர் கைது

பூநகரி,பெப்.10

கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்ல முற்பட்ட 9 பேர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 9 பேரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மணலை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட பாரவூர்தி, டிப்பர் ரக வாகனம் மற்றும் உழவு இயந்திரம் என்பன பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2-9)



## விபத்தில் இளைஞர் காயம்

வவுனியா, பெப்.10

வவுனியா ஓமந்தை பகுதியில் நேற்று நடந்த விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை ஏற்றிச்சென்ற வாகனம் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, பெப்.9

சாலையின் குறுக்கே ஓடிய நாய்களுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

பூநகரி பள்ளிக்குடாவில் இடம்பெற்ற விபத்தில் இதே இடத்தைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் நிரோஜன் (வயது25) என்பவரும், மீசாலையில் இடம்பெற்ற விபத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த பரமசாமி சுமத்திரன் (வயது 38) மீசாலை மேற்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் சதீஸ் (வயது33) ஆகியோரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2,9)



## விபத்தில் இருவர் காயம்

ஹற்றன்,பெப்.10

திம்புள்ள பத்தனை ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கனரக பாரவூர்தி வீதியை விட்டு விலகியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனைப் பகுதியிலிருந்து தேயிலைத் தூள் பக்கற்றுக்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு பகுதிக்கு சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

விபத்துக்குள்ளான சாரதியும் உதவியாளரும் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## காய்ச்சலால் சிறுமி உயிரிழப்பு

மட்டக்களப்பு,பெப்.10

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதியில் சிறுமி, ஒருவர் நேற்று காய்ச்சலால் உயிரிழந்துள்ளார். ராசா ஆலீம் வீதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமி ஒருவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சில தினங்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த சிறுமி, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2)

## தேர்தலை முன்னிட்டு பூங்காவுக்குப் பூட்டு

கொழும்பு,பெப்.10

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்கா நேற்று முதல் நாளைவரை இரவு நேரங்களில் மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் இதனை அறிவித்தது.

தேசிய விலங்கியல் பூங்கா அதிகாரிகள் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ளமையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதன் பணிப்பாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் 8.30 முதல் மாலை 6 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## ஒரு மணித்தியாலத்தில் விபத்துகளில் 9 பேர் காயம்

சாவகச்சேரி, பெப். 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று ஒரு மணி நேரத்தில் நடைபெற்ற சாலை விபத்துக்களில் சிக்கி இரு பெண்கள் உட்பட ஒன்பது பேர் காயமடைந்தனர். தாயும் மகளுமான இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கள் நேற்று மாலை 4.30 மணிக்கும் 5.30 மணிக்குமிடையில் இடம்பெற்றுள்ளன.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் சாலை வளைவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த நடராசா சுதாமதி (வயது 53) மகளான நடராசா சரண்ஜா ( வயது (16) ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் விபத்தில் காயமடைந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை கிளிமக்கலன் (வயது 28), வரதராசா தவநிக்ஸன் (வயது 17) ஆகியோரும் காயமடைந்தனர்.

மீசாலையில் நடைபெற்ற சாலைவிபத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த கிட்டினன் நற்குணம்( வயது 47), அசோகநாதன் கோபிதன் ஆகியோரும் காயமடைந்தனர். சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் விடத்தற்பளையைச் சேர்ந்த ஜெயராசா சிவபோஜனன் ( வயது 23) சங்கத்தானையைச் சேர்ந்த கணேசலிங்கம் சிவான்சன் ( வயது 24 ) ஆகியோரும் காயமடைந்தனர். கல்வயலில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் 28 வயதுடைய மற்றொருவரும் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4,9)

# நெல் அறுவடையான பின் உப உணவு உற்பத்திகள்

## கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் கோருகின்றனர்

அளவெட்டி, பெப்.10

வலி.வடக்கு கமத்தொழில் விவசாய பெரும்பாகப் பிரிவுக்குட்பட்ட காலபோக நெல் அறுவடை செய்யப்பட்ட விளைநிலங்களில் தற்போது உப உணவு உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் பிரதேச மக்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

"கட்டாக்காலி மாடுகள், மற்றும் கால்நடைகளைக் கட்டி வளர்ப்போர் வயல் நிலங்களில் மேய விடுவதால் தமது உப உணவுப் பயிர்கள் சேதமடைகின்றன.

இப்பகுதி விவசாய சம்மேளனங்கள் தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போருக்கு பல முறை எச்சரிக்கை செய்து ஒலிபெருக்கி மூலம் கால்நடைகளை விளைபயிர்களுக்கு அருகாமையில் மேய விட வேண்டாம் என அறிவுறுத்தியும் அவற்றைப் பொருட்படுத்தாது தமது கால்நடைகளை கட்டியும், அவிழ்த்து விட்டும் மேய்த்து வருவது கவலையளிப்பதாக உள்ளது" அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஏ-36-17)



# இறையியல் பட்டதாரிகள் மதிப்பளிப்பு

கொழும்புத்துறை, பெப்.10

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்படும் தூய யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியின் முதலாவது அணி, இறையியல் டிப்ளோமா பட்டதாரிகள் மதிப்பளிப்பு நிகழ்வும், புதிய கல்வியாண்டு மாணவர்கள் வரவேற்பு நிகழ்வும் கல்லூரி இயக்குநர் அருட்பணி.எம்.வி.ஈ.இரவிச்சந்திரன் அடிகள் தலைமையில் மறைக்கல்வி மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றன.

உரோமாபுரி ஊர்பானியா பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரியில் இருந்து வெளியேறும் முதலாவது அணியின் 10 பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது. அவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வில் யாழ்ப்பாண ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பதக்கங்களை அணிவித்தார்.

பரீட்சையில் சித்தி பெற்ற 2ஆவது அணி மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. புதிய மாணவர்களாக 26 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மொத்தம் 78 மாணவர்கள் கல்வியில் ஈடுபட்டுள்ளனர்.

மறைபோதகப் பணியில் பொதுநிலை மக்களுக்கும் இணைந்து பணியாற்றும் நோக்கிலும், மறையறிவிப்புக்கள் கலந்துரையாடல்களில் வளவாளர்களாகவும், இந்தப்பட்டதாரிகள் சேவையாற்ற முடியுமென தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி.ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் உட்பட அருட்பணி விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஏ-135)



யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை விளையாட்டுப்போட்டி பாடசாலை அதிபர் வாசுகி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

# வீசப்பட்டுள்ளன துண்டுப் பிரசுரங்கள்

சாவகச்சேரி, பெப்.10

தென்மராட்சிப் பிரதேச சாலையோரங்களில் பெருமளவு துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுக் காணப்படுகின்றன.

தேர்தல் பரப்புரைகள் கடந்த 7ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்ததால் விநியோகம் செய்ய முடியாமல் போன துண்டுப்பிரசுரங்களே சாலையோரங்களில் காணப்படுகின்றன. 'நகரங்களை சுத்தமாக வைத்திருப்போம்' என பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றிய அரசியல் கட்சிகள் நகர் பகுதிகளை அசிங்கப்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வீசியிருந்தமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (ஏ-9)

# நாட்டுக்கூத்து

போயிட்டி லூர்து அன்னை ஆலயத் திருவிழாவை முன்னிட்டு லூர்து அன்னை வளாகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு அண்ணாவியார் அ.மனோகரனின் நெறியாழ்கையில் சங்கிலியன் நாட்டுக்கூத்து மேடையேறவுள்ளது.

அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஏ-4)

# சுண்டிக்குளம் பகுதியில் இறால் பிடிப்பு சீசன்

யாழ்ப்பாணம், பெப்.10

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் ஏரியில் இறால் பிடிக்கும் மீனவர்களின் எண்ணிக்கை முன்னரைவிட அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடல்தொழில் திணைக்களத்திடம் அனுமதி பெறப்பட்ட பின்னரே இறால் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. பிடிக்கப்படும் இறால்கள் கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இறால் பிடிப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஏ-17)

# கரைவலை மீன்பிடி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.10

வடமராட்சி கிழக்கில் கரைவலை மீன்பிடித் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி கூடுதலான மீனவர்கள் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பால் ஆழ்கடல் மீன்பிடி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ஏ-17)

# கைதடி முதியோர் இல்லத்துக்கு மாணவியால் நிதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பழைய மாணவி ஒருவர் தான் சேர்த்த ஒரு தொகை நிதியை கைதடி முதியோர் இல்லத்தை சேர்ந்த முதியவர்களுக்கு வழங்கிய சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த மாணவி அண்மையில் வெளியாக ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். கைதடி முதியோர் இல்லத்தில் மிகவும் அன்பு பற்றுக்கொண்ட அந்த மாணவி தன்னால் சேர்த்து வைக்கப்பட்ட சுமார் 12ஆயிரம் ரூபா நிதியை இல்ல முதியோர்களுக்கு பொருள்களாக வழங்கி வைத்தார். குறித்த மாணவியின் முன்மாதிரியான இந்தச் சம்பவத்தை ஏனைய மாணவர்களும் பின்பற்றுவதே காலத்தின் தேவையாகும் என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். குறித்த மாணவியின் செயற்பாட்டை இட்டு இல்ல நிர்வாகம் பாராட்டுவதாக அத்தியட்சகர் மேலும் கூறினார். (ஏ-17)

*வெவ்வேறான சாலை விபத்துக்களால்*

# பெண் உட்பட எண்வருக்கு காயம்

தென்மராட்சி, பெப்.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சாலை விபத்துக்களில் காயமடைந்த பெண் உட்பட 8 பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சாவகச்சேரி கனகன் புளியடிச்சாலையில் பயணிகளுடன் சென்ற ஓட்டோவை முந்த முயன்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது.

இதனை அவதானித்த ஓட்டோ சாரதி ஓட்டோவை நிறுத்த முற்பட்ட வேளையில் அது புரண்டது. இந்த விபத்தில் காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சிகிச்சையின் பின்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவில் மத்தியைச் சேர்ந்த குணரத்தினம் சாமிலன்(வயது 25) கைதடி நவபுரத்தைச் சேர்ந்த குபேந்திரன் நியூசன் (வயது 18) ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மீசாலை கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக நின்ற் மோட்டார் சைக்கிளை சாலையின் மறுபக்கம் செலுத்திய வேளையில் ஏ-9 முதன்மைச் சாலையில் சென்ற மோட்டார் சைக்கிளில் மோதியதில் அதில் பயணித்த பெண் உட்பட நால்வர் காயமடைந்தனர். (ஏ-9)

# வழிகாட்டல் வகுப்பு நடைபெறமாட்டாது

யாழ்ப்பாணம், பெப்.10

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2018ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம்சைவப்புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு இன்று சனிக்கிழமை உள்ளூராட்சிசபைத் தேர்தல் காரணமாக நடைபெறமாட்டாது.

நாளை ஞாயிற்றுக்கிழமைவழமை போன்று யாழ்ப்பாணம்வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம்1 வரை நடைபெறும் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (ஏ-4)

# வேட்டைத் திருவிழாவுக்குப் பெயர் பெற்ற தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது நீர்வேலி கந்தசுவாமி கோவில்

யாழ்ப்பாணம், பெப்.10

இலங்கைத் திருத்தலங்களில் வேட்டைத் திருவிழாவுக்கு பெயர் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக நீர்வேலி கந்தசுவாமி கோவில் விளங்குகின்றது கலாநிதி ஆறு திருமுகன் தெரிவித்தார்.

நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அமைக்கப்பட்ட தோரண வாயிலை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

'ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் வேட்டைத் திருவிழா முக்கிய திருவிழாவாக அமைகின்றது. அந்த வகையில் நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இடம்பெறும் வேட்டைத்திருவிழா முக்கிய இடத்தை பிடிக்கின்றது. இந்த ஆலயத்தின் வேட்டைத் திருவிழாவைப் பார்ப்பதற்கு சகல பிரதேசங்களில் இருந்தும் மக்கள் ஆர்வத்துடன் வருகின்றனர். ஆலயத்தில் அதன் வரலாற்று தொன்மைகளை கொண்ட சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தற்போது அமைக்கப்பட்டிருக்கும் இந்த அலங்கார தோரணவாயில்கூட ஆலய வரலாற்றுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கின்றது' என்றார். (ஏ-17)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய 3 வாகனங்களுடன் ஏழு பேர் கைது

சாவகச்சேரி.பெப்.10
கசிப்பு உற்பத்தியாளர்களைப் பிடிக்கச்சென்ற பொலிஸார் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய மூன்று வாகனங்களைப் பிடித்ததுடன் வாகனங்களிலிருந்த ஏழுபேரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கேரதீவு அறுகுவெளியில் இடம் பெற்றுள்ளது. அறுகுவெளி காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது எனக் கிடைத்த தகவலையடுத்து சாவகச்சேரியில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அவ்வேளை அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய நிலையில் வந்த லொறி ஹன்டர் உழவு இயந்திரம் ஆகியவற்றை வழிமறித்து பொலிஸார் அவற்றில் வந்த ஏழு பேரைக் கைது செய்தனர்.

தொடர்ந்து கசிப்பு உற்பத்தி நிலையத்தை நோக்கிச் சென்ற வேளையின் பொலிஸாரைக்கண்ட கசிப்பு உற்பத்தியாளர்கள் உபகரணங்களைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

அதேஇடங்களில் கைவிடப்பட்ட கசிப்பு உற்பத்தி உபகரணங்களைக் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# வெற்றிலையுடன் புகையிலை சிறார்களுக்கு விற்றுவந்த வர்த்தகர்களுக்குத் தண்டம்

### கிளிநொச்சி நீதிமன்று விதித்தது

**யாழ்ப்பாணம், பெப். 10**
**சிறார்களுக்கு வெற்றிலையுடன் புகையிலையைச் சேர்த்து விற்ற வர்த்தகர்கள் 13 பேர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் சிக்கினர். அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் அறவிட்டு உத்தரவிட்டது கிளிநொச்சி நீதிவான் மன்று.**

கிளிநொச்சி. பரந்தன் மற்றும் தர்மபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் சிறார்களுக்கு வெற்றிலையுடன் புகையிலையைச் சேர்த்து விற்பனை செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் குறித்த இடங்களுக்குச் சென்று அதனை உறுதிப்படுத்தினர். குறித்த 13 வர்த்தகர்களுக்கும் எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. வர்த்தகர்கள்13 பேரும் மன்றில் முன்னிலையாகினர். தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் அறவிடப்பட்டது. (4)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம். பெப். 10
யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மை விளையாட்டுப்போட்டி பாடசாலை மைதானத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள போட்டியில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச்சமூகம் .கேட்டுள்ளது. (எ-4)

## தென்மராட்சியில் நெல் அறுவடைக்கு 30க்கும் மேற்பட்ட இயந்திரங்கள்

சாவகச்சேரி. பெப். 10
தென்மராட்சிப் பகுதியில் 30க்கும் மேற்பட்ட அறுவடை இயந்திரங்கள் அறுவடையில் ஈடுபட்டு வருகின்றன. இன்னும் பத்து நாள்களில் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை அறுவடை பூர்த்தியடைந்துவிடும் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த முறை வெளியிடங்களிலிருந்து பெருமளவு நெல் அறுவடை இயந்திரங்கள் தென்மராட்சிப்பிரதேசத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கடந்த வருடம் பரப்புக்கு 350 ரூபா என்று அறவிடப்பட்ட வட்டாரம் இந்த முறை பரப்புக்கு 300ரூபாவாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை காலரீதியாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை முழ்ந்த வயல்களில் சிறுதானியப் பயிர்களில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

## ஞானச்சுடரில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம். பெப். 10
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் பலர் பரிசுகளைப் பெற்றனர்.

அந்தவகையில், முதலாம் பரிசை மட்டக்களப்பு பயனியர் வீதியைச்சேர்ந்த வத்சன் சத்தியபவானியும் இரண்டாம் பரிசை தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கலையரசி லோகேஸ்வரனும் மூன்றாம் பரிசை கோண்டாவில் மேற்கு புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த செல்வி தாரணி சண்முகரத்தினம் பெற்றுள்ளனர். (4-173)

## ஆனந்தபுரத்தில் சாலை சீரமைப்பு

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி ஏ9 சாலையில் இருந்து ஆனந்தபுரம் ஊடாக கனகாம்பிகைக்குளம் சென்றடையும் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் கொண்ட காணன் சாலை நீர் வடிகான் தொகுதி அடங்கலாக சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சாலை சேதமடைந்து குண்டும் குழியுமாக பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்டது. மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் 90 லட்சம் ரூபா நிதிஒதுக்கீட்டில் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு, மக்கள் பாவனைக்கு சாலை கையளிக்கப்பட்டுள்ளது. (ய)



## சிறப்புத் தேவைக்குட்பட்டோர் அமைப்பால் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்கள் 120 பேருக்கு கிளிநொச்சி சிறப்புத் தேவைக்குட்பட்டோர் வலையமைப்பால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கனேடிய புலம்பெயர் உறவுகளின். உறங்கா விழிகள் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி சிவபாதகலையகம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் 60 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தின் திருமுறுகண்டி இந்து வித்தியாலய மாணவர்கள் 60 பேருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய-6)

## வட்டுவாகலில் குழுமோதல் தாயும், மகனும் காயம்

முல்லைத்தீவு, பெப்.10
முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த தாயும், மகனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வட்டுவாகல் பகுதியில் இறால் கொள்வனவு தொடர்பில் இரு குழுக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது சண்டையை விலக்குவதற்குச் சென்ற இளைஞர் ஒருவரின் தாயாரும் காயமடைந்தார். அவரது மகனும் சம்பவத்தில் காயமடைந்தார். அவர்கள் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ய-ரி3)



முல்லைத்தீவு நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.எஸ்.ஆர்.மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது (ய-21)

## அரச, தனியார் பேருந்து நடத்துனரிடையே மோதல்

### ஒருவர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு நகரில் நேற்றுமுன்தினம் அரச மற்றும் தனியார் பேருந்து நடத்துனர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்தார். அரசபேருந்து நடத்துனரே இவ்வாறு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:
சம்பவதினம் நண்பகல் பருத்தித்துறையில் இருந்து கொக்கிளாய் செல்லும் அரச பேருந்து முல்லைத்தீவு நகர பேருந்து தரிப்பிடத்தில் நின்றது. பின்னர் கொக்கிளாய் நோக்கிச்செல்ல முற்பட்டது. அப்போது தனியார் பேருந்து நடத்துனருக்கும் அரசபேருந்து நடத்துனருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நீதிமன்ற வளாகத்தைத் தாண்டி அரசபேருந்து சென்றபோது தனியார் பேருந்தில் இருந்து இறங்கிய நடத்துனர் அரச பேருந்து நடத்துனர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு டிப்போவில் பணிபுரியும் பருத்தித்துறையைச் சேர்ந்த ரி.சதீஸ்குமார் என்பவரே காயங்களுக்கு உள்ளானார். சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-ரி)

## வாக்குச்...

விரட்ட முடியாது ஓடித் திரிந்தனர். இந்தச் சம்பவம் நேற்று வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் நடந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்ரா வித்தியாலயத்தில் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கு எண்ணும் நிலையம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டன. அனைத்து ஏற்பாடுகளும் கச்சிதமாகக் செய்யப்பட்ட திருப்தியில் அலுவலர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். வழமையான மேற்பார்வைக் கடமைக்காக அங்கே உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை அவதானித்துக்கொண்டிருந்தார்.

அப்போது பெரிய நச்சுப் பாம்பு ஒன்று வாக்கு எண்ணும் நிலையத்துக்குள் புகுந்துகொண்டது. அதைக் கண்ட அலுவலர்கள் பரபரப்படைந்து அங்கு மிங்கும் ஓடித்திரிந்தனர். பாம்பை அங்கிருந்து வெளியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. பாம்பு சாவகாசமாக அங்கிருந்த பெட்டி ஒன்றுக்குள் சுருண்டு படுத்துக் கொண்டது.

வேறு வழியின்றி ஒருவர் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அந்தப் பெட்டியை நெருங்கி மெதுவாகத் தூக்கினார். அப்படியே கொண்டு ஓடிச் சென்று பாம்பை வீசியெறிந்தார். அதன் பின்னரே அங்கு பரபரப்புத் தணிந்தது. அலுவலர்கள் ஆசுவாசப் பெருமூச்சு விட்டனர். (ற.68)

## யாழ்...

கலைக் கழக ஆசிரியர் சங்கம் என்ற சொற்பிரயோகம் எந்த இடத்திலும் குறிப் பிடாதபோது உள்ளூர் பத்திரிகையில் 'யாழ்ப்பாணம் கல்வியாளர் ஒன்றியம் இல்லை' எனப் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தியானது எமது ஒன்றியத்தின் நன்மதிப்பைப் பாதிப்பதாக உள்ளது.

தலைவர்,-உபதலைவர் இருக்கின்ற போதும் அறுதிப் பெரும்பான்மையின்றி (குறைந்த எண்ணிக்கை 10 பேர் இருக்கவேண்டும்) ஆசிரியர் சங்கம் வெளியிட்ட உண்மைக்குமாறான தகவல் அரசியல் நோக்கம் கொண்டதாகவே கருதுகின்றோம் என்றுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கச் செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, யாழ்ப்பாணக் கல்வியாளர் ஒன்றியம் என்ற அமைப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இல்லை. அதன் பெயரில் அறிக்கை வெளிவந்தமையால் நாம் உடனடியாக நிர்வாகக் கூட்டத்தைக் கூட்டி பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணங்கவே அறிக்கை வெளியிடப்பட்டது. எமக்கு எந்த அரசியல் நோக்கமும் இல்லை - என்றார். (ற-5)

## தமிழர்...

றில் கலப்பு முறையில் தேர்தல் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

பிரதான அரசியல் கட்சிகளின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற மிக முக்கிய நாள் இன்றாகும். வாக்குரிமை என்ற பலம் பொருந்திய ஜனநாயக ஆயுதத்தின்மூலம் மக்கள் ஆணை வழங்கும் நாள் இன்றாகும். இலங்கை அரசியலில் 'அடுத்து என்ன?' என்பதைத் தீர்மானிக்கவுள்ளது இந்தத் தேர்தல்.

வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று தேர்தல் நடைபெறுகின்றது. வடக்கில் 32 உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி தேர்தல் நடைபெற்றிருந்தது. 7. ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது. (ற-5)

## இராணுவத்தின் கைகளில்..

அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. குழுவே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. சிறுவர் உரிமை தொடர்பான ஐ.நா. குழுவின் அமர்வு ஜனவரி 15ஆம் திகதி முதல் பெப்ரவரி 2ஆம் திகதிவரை ஜெனிவாவில் இடம்பெற்ற வேளை இலங்கை தொடர்பாக குறிப்பிட்ட குழுவினர் ஆராய்ந்துள்ளனர். அதன்பின்னர் ஐ.நா. குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை வலுவான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசை ஐ.நா. குழு கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுவர்களினதும், மோதல்கள் இடம்பெற்ற வேளை சிறுவர்களாகயிருந்தவர்களினதும் குரல்களுக்கு தேசிய நல்லிணக்க மற்றும் நிலைமாறுகால நீதி நடைமுறைகளில் உரிய இடம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் ஐ.நா. குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. அவர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகள் என்ற அந்தஸ்தை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

காணாமற்போனவர்கள் குறித்த முழுமையான சுயாதீன அலுவலகத்தை ஏற்படுத்தி அது இயங்குவதை இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும், அவ்வேளை, சிறுவர்களா கயிருந்து காணாமற்போனவர்கள் குறித்த சம்பவங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

அரசு, ஆயுதமோதல்களின்போது சிறுவர்களாகயிருந்தவர்களுக்குத் தண்டனை வழங்கக்கூடாது. முன்னாள் சிறுவர் போராளிகளுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்று அந்தக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற-5)

## 6,747 பேரில்...

ளைத் தெரிவு செய்வதற்காக வடக்கில் 8 லட்சத்து 28 ஆயிரத்து 867 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் இன்று இடம்பெறவுள்ளது. இதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன. இன்று காலை 7 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையில், வடக்கில் 997 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் வாக்கு எண்ணும் பணி 531 இடங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 521 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 239 இடங்களில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறவுள்ளது. 402 பேரைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 376 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 243 பேர் வட்டார ரீதியாகவும் ஏனையோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுக்க 4 லட்சத்து 68 ஆயிரத்து 482 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 117 இடங்களில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறவுள்ளது. 66 பேரைத் தெரிவு செய்வதற்காக 638 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 40 பேர் வட்டார ரீதியாகவும் ஏனையோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுக்க 86 ஆயிரத்து 731 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 134 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 70 இடங்களில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறவுள்ளது. 67 பேரைத் தெரிவு செய்வதற்காக, 757 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 41 பேர் வட்டார ரீதியாகவும் ஏனையோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுக்க 72 ஆயிரத்து 961 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 94 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 47 இடங்களில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறவுள்ளது. 88 பேரைத் தெரிவு செய்வதற்காக 904 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 52 பேர் வட்டார ரீதியாகவும் ஏனையோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுக்க 86 ஆயிரத்து 94 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 148 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 58 இடங்களில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறவுள்ளது. 103 பேரைத் தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 72 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களில் 52 பேர் வட்டார ரீதியாகவும் ஏனையோர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 599 பேர் வாக்களிக்கவுள்ளனர். (ற-5)

## காலையிலேயே...

**340 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்றது. நேற்று மாலையே அனைத்து வாக்குச்சாவடி**களுக்கும் வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. தேர்தல் அதிகாரிகளும் தமது கடமைகளை ஆரம்பித்திருந்தனர். பலத்த பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று மாலைவரை காத்திருக்காது வாக்காளர்கள் காலை வேளையிலேயே சென்று தமது கடமைகளை நிறைவுசெய்து தேர்தல் ஆணையகத்திற்கு ஒத்துழைக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்முறை வாக்குகள் அனைத்தும் வாக்குச் சாவடிகளில் எண்ணப்படவுள்ளதால் மக்களிடமிருந்து முழுமையான ஆதரவை தேர்தல்கள் ஆணையகம் எதிர்பார்ப்பதாகவும், நள்ளிரவுக்கு முன்னர் பெரும்பாலான தேர்தல் பெறுபேற்றை வெளியிடக் காத்திருக்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ற-5)

## எங்கள்...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் நேற்று 351 நாளாகவும் வவுனியாவில் தொடர்ந்தது. கடந்த ஆண்டு இவர்கள் சாகும்வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அலரி மாளிகைக்கு அவர்கள் அழைக்கப்பட்டு இந்தப் பிரச்சினை தொடர்பில் பேசப்பட்டது. நேற்றுடன் அந்தச் சந்திப்பு நடந்து ஒரு ஆண்டாகின்றது. இதுவரை தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆரம்பித்தனர். இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இன்றுமுதல் சுழற்சி முறையான உணவு தவிர்ப்புப் போராட்டமாகத் தொடரவுள்ளனர்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வவுனியா கந்தசாமி கோவிலுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டனர். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறிய கருத்துக்குக் கடும் கண்டனம் வெளியிட்ட அவர்கள் தேங்காய் உடைத்து வழிபட்டனர். தங்கள் உறவுகளை மீளத் தர வேண்டும் என்று அவர்கள் ஆலய வளாகத்தில் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். அந்தப் பகுதி சோகமயமானது.

"நாங்கள் விடும் கண்ணீரை பன்னாடுகள் பார்க்க வேண்டும். வயது முதிர்ந்த தாய்கள் பல நாள்களாக உணவைத் தவிர்த்துப் போராடுவதும், நித்தமும் கண்ணீர் விடுவதும் எவருக்கும் தெரியவில்லையா?. ஐரோப்பிய ஒன்றியம் எங்கள் பிரச்சினையில் உடன் தலையிட வேண்டும்." என்று அவர்கள் கண்ணீர் விட்டழுதனர்.

"எங்கள் பிள்ளைகளுக்குச் சதி செய்தவர்களுக்காகவே தேங்காய் உடைத்து வழிபட்டோம். அவர்கள் விரைவில் அழிந்து போவார்கள்" என்று அந்த வயதான தாய்மார் கண்ணீருடன் சாபமிட்டனர். (ற)

## வாக்காளர் அட்டைகளை...

கொண்டிருந்தது. இருப்பினும் வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்தில் தேங்கியிருந்தன. வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அதனை தபால் திணைக்களத்துக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.

பெருமளவான பொதுமக்கள் தபால் திணைக்களத்துக்குச் சென்று நேற்றுத் தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொண்டார்கள். அதேவேளை, வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் எவரும் வாக்காளர் அட்டை இல்லாவிடினும் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ற-5)

## பிரிகேடியருக்கு...

நடந்து கொண்ட பிரிகேடியருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று இராணுவத் தளபதி தெரிவித்திருந்தார். அவர் எந்தத் தவறும் செய்யவில்லை என்று அவர் கூறியிருந்த அதேவேளை, பிரிகேடியர் செய்த செயற்பாட்டை மெச்சுகின்றேன் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் கூறியிருந்தார்.

**இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் தெரிவித்ததாவது:**

நாம் இந்தச் சம்பவத்தை ஏற்கனவே வன்மையாகக் கண்டித்திருந்தோம். இராணுவத் தளபதியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் தெரிவித்துள்ள கருத்தையும் நாம் கண்டிக்கின்றோம்.

கழுத்தறுக்கும் சைகை காட்டுவதைச் சரி என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை எங்கு செய்திருந்தாலும் அவர் மோசமான செய்கையில் ஈடுபட்டிருக்கின்றார். இராணுவத் தளபதி கூறுவதையோ, இராஜாங்க அமைச்சர் கூறுவதையோ நாம் கடைசி வரையில் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (ற-5)

## கேப்பாப்பிலவு...

முல்லைத்தீவு, பெப்.10

இலங்கையின் சுதந்திர தினத்தைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாபிலவு மக்கள் மீது முள்ளியவளைப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். சமாதானத்துக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றத்தின் கீழே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 12 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலையாகு மாறு நீதிமன்றம் மக்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

சுதந்திரதினமான கடந்த 4ஆம் திகதி அன்று கேப்பாபிலவு மக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள கேப்பாபிலவுக் காணிகள் 8 வருடங்களாக முழுமையாக விடுவிக்கவில்லை என்று தெரிவித்து அவர்கள் சுதந்திர தினத்தைப் புறக்கணித்தனர். ஆர்ப்பாட்டம் நடத்தினர். மக்களின் ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் மக்களுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் பேச்சு நடத்தினார். மக்களின் கைகளில் இருந்த கறுப்புக் கொடிகள் மற்றும் பதாகைகளைக் கைவிட்டு மக்களை ஆலயத்துக்குள் சென்று போராட்டத்தில் ஈடுபடுமாறு பணித்தார். மக்களும் அதை ஏற்றுக் கொண்டனர்.

தற்போது போராட்டத்தில் ஈடுபட்ட ஐவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. முள்ளியவளை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு தலைமை தாங்கும் ஆறுமுகம் வேலாயுதபிள்ளை மற்றும் குடும்பப் பெண்கள் மூவர் உள்ளிட்ட ஐந்து பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போராட்டத்தைத் திசைதிருப்பும் நோக்கில் பொலிஸாரின் இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

"சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்கும் எந்த ஒருசெயலையம் நாங்கள் செய்யவில்லை. எங்கள் சொந்த மண்ணை மீட்கவே நாங்கள் போராட்டம் நடத்தினோம். கடந்த 14ஆம் திகதி நேர்த்திக் கடனை முடிக்கவே ஆலயம் நோக்கி வீதியால் எவருக்கும் இடையூறு ஏற்படாதவாறு சென்றோம். பொலிஸார்தான் எங்களை மறித்தார்கள். நாங்கள் படைமுகாமுக்குள்ளோ, அல்லது படையினருக்கு எதிராகவோ எதுவும் செய்யவில்லை. எங்கள் மண் விடுவிக்கப்படும் வரை நரங்க்ள் போராட்டத்தைத் தொடருவோம்." என்று அவர்கள் உறுதியுடன் தெரிவித்தனர். (ற-21,ரி3)

## வாக்காளர்...

கைது செய்யப்பட்டவரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வெலிஓயாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட வேட்பாளர் தென்பகுதிக் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. (ற-ரி3)

## இராணுவத்தின்...

**நடந்து கொண்ட விதம், இராணுவத்தின் பழைய மனோநிலையை எடுத்துக் காட்டுகின்றது. இறுதிப் போரின் கடைசிக் கட்டத்தில் இராணுவம் எப்படியாகச் செயற்பட்டது என்ற மனநிலையை வெளிப்படுத்தியுள்ளது.**

**நல்லிணக்கம் தொடர்பில் கரிசனை இருந்தால் இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" - என்றார்.**

**(ற-5)**



அட! அப்படியா சங்கதி!!

## ரணில் ‘அவுட்’

காலஞ்சென்ற பெல்லன்வில விமலரத்ன தேரரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள சென்றிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்வு முடியும் முன்னரே அங்கிருந்து வெளியேறினார் எனத் தகவல்.
தேரருக்கான இறுதி அஞ்சலியில் உரையாற்ற தலைமை அமைச்சருக்கு உரிய இடம் வழங்கப்படாமையே இதற்கான காரணமென உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் அங்கு உரையாற்ற இடமளிக்கப்பட்டிருந்ததாம். ஆனால், தலைமை அமைச்சருக்கு உரிய அந்தஸ்தை வழங்க ஏற்பாட்டாளர்கள் தவறியிருக்கின்றனர் எனச் சொல்லப்படுகிறது. எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.



## இராணுவத் தலைமை அதிகாரி நாட்டை விட்டு வெளியேறத் தடை

கொழும்பு, பெப். 10
இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு கொழும்பு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை அடுத்தே, கொழும்பு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
லசந்த விக்கிரமதுங்க கொலை நடந்த காலகட்டத்தில், இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## பிரியங்கவின் இராஜதந்திர சிறப்புரிமை பறிக்கப்படுமா?

கொழும்பு, பெப். 10
பிரிட்டனில் உள்ள தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, இராஜதந்திர சிறப்புரிமையை இழக்கும் ஆபத்தில் இருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
கடந்த 4ஆம் திகதி தூதரகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களை நோக்கி அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட, பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பிரிட்டனில் கோரிக்கைகள் எழுந்துள்ளன.
அயலுறவுத்துறை அமைச்சு முதலில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை பணி இடைநிறுத்தம் செய்திருந்தது. எனினும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதனை இல்லாமல் செய்ததுடன், அவரைப் பணியில் சேர்த்துக் கொள்ளவும் உத்தரவிட்டார்.
இந்த உத்தரவு அயலுறவுத்துறை அமைச்சின் ஊடாக, லண்டனில் உள்ள தூதரகத்துக்கு அனுப்பப்பட்டது.
இந்த விவகாரத்தை அரசு பெரிதாக எடுத்துக் கொள்ளாத போதிலும், பிரிட்டன் இதனைப் பாரதூரமான விடயமாக எடுத்துக் கொண்டுள்ளது.
பிரிட்டன் பொலிஸ் விசாரணைகளில், பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ தவறிழைத்தது கண்டறியப்பட்டால், பிரிட்டன் அரசு அவரது இராஜதந்திர சிறப்புரிமையை விலக்கிக் கொள்ளும் சாத்தியங்கள் உள்ளன.
இராஜதந்திர உறவுகள் தொடர்பாக வியன்னா உடன்பாட்டின் படி, அனுப்பும் நாடு ஒன்றினது, இராஜதந்திரிகளின் சிறப்புரிமைகளை நீக்கும் முடிவை பெறும் நாடு எடுக்க முடியும்.
பன்னாட்டுச் சட்டங்கள் தொடர்பான உள்நாட்டு நிபுணர்கள், அவ்வாறு பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ வெளியேற்றப்படுவதற்கு சாத்தியங்கள் குறைவு என்று கூறியுள்ளனர்.
பிரிட்டனில் வேண்டப்படாத நபராக அறிவிக்கப்பட்டே, இராஜதந்திர சிறப்புரிமைகளை நீக்கி நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்.
வியன்னா பிரகடனத்தின் படி, அவ்வாறு வேண்டப்படாத நபராக அறிவிப்பதற்கு, குறித்த இராஜதந்திரி, மோசமான குற்றமிழைத்தவராக அல்லது, பெறும் நாட்டின் உள் விவகாரங்களில் தேவையற்ற தலையீடு செய்தவராக இருக்க வேண்டும்.
எனினும், இந்த விவகாரத்தில் பிரிட்டன் அரசு, பிரிகேடியர் பிரியங்கவை அவ்வாறு வேண்டப்படாத நபராக பிரகடனம் செய்வதற்கு வாய்ப்பில்லை என்று சட்ட நிபுணர் நைஜெல் கீத் ஹட்ச் தெரிவித்துள்ளார். (5)

## நீதியான தேர்தல் நடக்க உதவுக

### சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, பெப். 10
நீதியும் நேர்மையுமான தேர்தலை நடத்த அதிகாரிகளுக்கு உதவுமாறு அனைத்து மக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
சட்டம், ஒழுங்கை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதன் மூலம் நீதியும் நேர்மையுமான தேர்தலை நடத்த அதிகாரிகளுக்கு உதவுமாறு அனைத்து மக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன்.
ஜனநாயக செயற்பாட்டில் தமக்குள்ள அர்ப்பணிப்பை நிரூபிக்கும் வகையில்-அனைத்து மக்களும் இந்தத் தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
ஒன்றிணைந்தவர்களாக எமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலம் வளமான இலங்கையை உருவாக்குவதில் எமக்குள்ள அர்ப்பணிப்பை வெளிக்காட்ட முன்வருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன், என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (5)

## ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்தி சாதனை செய்வோம்

### வாக்குரிமையைக் கட்டாயம் பயன்படுத்துமாறு ரணில் கோரிக்கை

கொழும்பு, பெப். 10
அனைத்து வாக்காளர்களும் காலை வேளையிலேயே சென்று தமது பெறுமதியான வாக்குகளை செலுத்த வேண்டும். தேர்தல் நிமித்தம் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டும். தேர்தல் பெறுபேறுகள் வெளியாகும்போதும் அமைதியைக் கடைப்பிடிக்கவேண்டும். இதனூடாக புதிய முறைமையின்கீழ் அமைதியான தேர்தலொன்றை நடத்தினோம் என்று உலகிற்கு நாம் எடுத்துரைக்கவேண்டும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு நேற்று வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
இன்று நடைபெறும் 340 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடிகளில் பிரதான கட்சிகள் தமது புலனாய்வாளர்களை களமிறக்கியுள்ளனர் என்று அறியமுடிகின்றது.
புதிய தேர்தல் முறைமையின்கீழ் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறுகின்றது. பல கட்சிகளின் அரசியல் எதிர்காலத்திற்கு சவால்விடும் தேர்தலாக இந்தத் தேர்தல் மாறியுள்ளதால் தமது கட்சிகளுக்கு வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாதவண்ணம் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட பிரதான கட்சிகள் சில குழுக்களையும் நபர்களையும் களமிறக்கியுள்ளன.
தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக வெளியாகியிருந்த கருத்துக்கணிப்புகள் சில கட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் இருந்துள்ளன. வாக்குச்சாவடிகளில் ஏதும் குளறுபடிகள் ஏற்படும் என்ற அச்சத்தில் இவ்வாறு புலனாய்வாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் அறியமுடிகின்றது.
இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் புதிய தேர்தல் முறைமையின்கீழ் நடைபெறுகின்றது. அனைத்துத் தொகுதிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். பெண்களுக்கும் 25 வீத பிரதிநிதித்துவம் கிடைக்கின்றது. விகிதாரசார முறையின் கீழும் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.
புதிய தேர்தல் முறைமையின்கீழ் வேட்புமனு கோரப்பட்டது முதல் அமைதியான முறையில் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. விகிதாசார முன்றயின்கீழ் கடந்த காலத்தில் நிலவிய சூழலை தற்போது காணமுடியவில்லை. உணவு வழங்கல் எங்கும் ஆரம்பிக்கப்படவில்லை. பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அதைவிட சிறந்த முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த முறைமையின்கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்று உள்ளது. தேர்தல் சட்டங்களை முறையாக ஆணைக்குழு பின்பற்றியுள்ளது. பொலிஸாருக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. அத்துடன், ஊடகங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.
இந்த முறைமையின்கீழ் அரசின் தேர்தல் பரப்புரைகளைக் கொண்டுசெல்ல அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. அதனால் வாக்காளர்களின் வாக்குக்கு பெறுமதியொன்று கிடைத்துள்ளது.
வேட்பாளர்கள் வாக்காளர்களுக்கு முகம்கொடுத்து வாக்குக் கேட்க முடிந்துள்ளது. அதன்மூலம் இருதரப்புக்கும் உறவொன்று கட்டியெழுப்பப்படும். வாக்காளர்கள் எதிர்பார்த்த தேர்தல் முறைமையாக இது காணப்படுகிறது என்றுள்ளது. (5)

## அலோசியஸ், பலிசேனவுக்கு பிணை வழங்க கடும் எதிர்ப்பு

### சட்டமா அதிபர் திணைக்களத்தின் எழுத்துமூல ஆட்சேபனை நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல்

கொழும்பு, பெப். 10
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகியோரின் சார்பிலான எழுத்துமூல பிணைக் கோரிக்கைக்கு எதிரான சட்டமா அதிபர் திணைக்களத்தின் எழுத்துமூல எதிர் ஆட்சேபனை கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.
இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 4ஆம் திகதி கைது செய்யப்பட்ட இருவரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் இருவருக்கும் பிணை கோரி, சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸ, சட்டத்தரணி நாலிந்த இந்ததிஸ்ஸ ஆகியோரால் கடந்த 7ஆம் திகதியன்று எழுத்துமூல பிணைக் கோரிக்கை தாக்கல்செய்யப்பட்டிருந்தது.
அக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு இரண்டுதினங்களில் முறைப்பாட்டாளர் தரப்பின் எதிர் ஆட்சேபனை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
அந்த உத்தரவுக்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த மூத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர, மூத்த அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம ஆகியோர் எதிர் ஆட்சேபனையைச் சமர்ப்பித்தனர்.
குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், அலோசியஸ், பலிசேன ஆகியோரை சந்தேக நபர்களாகக் குறிப்பிட்டு கடந்த 2ஆம் திகதியன்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
பிணைமுறி ஏலத்தில் சுமார் 688 மில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன மகேந்திரன் பொறுப்பாகவுள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 'பி' அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக மோசடி மற்றும் நம்பிக்கைக் கேடு ஆகிய குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்.
இக்குற்றங்களைப் புரிவதற்கு அர்ஜுன மகேந்திரனுடன் இணைந்து சதிசெய்தார் என்று அவருடைய மருமகனான அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராகவும் உடந்தையான இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கசுன் பலிசேனவுக்கு எதிராகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
இதேவேளை, அர்ஜுன மகேந்திரன் நாட்டுக்குத் திரும்பினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்கவேண்டும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.
அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதிக்குகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# மங்களவின் கையெழுத்துடன் போலிக் கடிதம்!

கொழும்பு, பெப். 10

தனது கையொப்பத்துடன் வெளியாகியுள்ள போலிக்கடிதம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். தனது உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அயலுறவுத்துறை அமைச்சின் கடிதத் தலைப்பில் தயாரித்துள்ள இந்த போலிக் கடிதத்தில் என்னுடைய கையொப்பத்தைச் சேர்த்துள்ள கும்பலானது தனது மூடத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. தற்போது நான் அயலுறவுத்துறை அமைச்சர் இல்லை என்பதை அவர்கள் அறியாதிருக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளேன், என்று கீச்சகப் பதிவில் கூறியுள்ளார்.

பிரிட்டன் தமிழர் பேரவைக்கு என்று எழுதியுள்ள இந்தக் கடிதமானது லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பெர்னாண்டோ நடந்து கொண்ட விதம் தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சின் நடவடிக்கை தொடர்பான விடயத்தை உள்ளடக்கியுள்ளது. பிரிகேடியர் பெர்னாண்டோ தொடர்பிலான விவகாரம் கடந்த நான்காம் திகதியே இடம்பெற்றது. எனினும், இரண்டாம் திகதி கடிதத்தை எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மங்கள சமரவீரவை அயலுறவுத்துறை அமைச்சர் என்று அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## போர்க் குற்றச்சாட்டிலிருந்து மகிந்தவை நாமே காத்தோம்

மங்கள பெருமிதம்

கொழும்பு, பெப். 10

ஜெனிவாவில் அரசே, போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து மகிந்த ராஜபக்சவை காப்பாற்றியது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் மாத்திரம் நாம் வெற்றி பெறவில்லை. ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை மீளப் பெற்றிருக்கிறோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் ஏற்றுமதி தடையை நீக்கச் செய்திருக்கிறோம் - என்றார். (5)

சுவிசில்

## இலங்கை இளைஞன் அடித்துக் கொலை!

சுவிற்சர்லாந்தில் 19 வயதுடைய இலங்கை ஏதிலி ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். சுவிற்சர்லாந்தில் ஏதிலிகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் முகாமில் கடந்த புதன்கிழமை காலை 9.25 மணியளவில். இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தக் கொலையை செய்தது இலங்கையைச்சேர்ந்தவர்தான் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தச் சம்பவம் எப்படி நடந்தது, என்ன காரணம் என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை. முழுமையான விசாரணைக்குப் பின்னரே தெரியவரும். (5)

# எல்லாம் முடிந்துவிட்டது சைகையின் விளக்கம் இதுதான்

இப்படிச் சொல்கிறார் பெர்னாண்டோ

கொழும்பு, பெப். 10

தமிழீழ விடுதலைப் புலி பயங்கரவாதிகள் 'பிரபாகரன் எங்கள் தலைவர்' என்று கூச்சலிட்டு போராட்டம் நடத்திய போது, கழுத்தில் கையை வைத்து 'அனைத்தும் முடிந்துவிட்டது' என்றே கூறியிருந்தேன். இவ்வாறு பிரிட்டனுக்கான இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு விளக்கம் கொடுத்த போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தின் அழைப்பை ஏற்று சுதந்திர தின நிகழ்வில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் 250 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர். நான் ஏற்கனவே புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளமை பற்றி அறிந்திருந்தேன். தூதரகத்துக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். சுதந்திர தின நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர், போராட்டக்காரர்கள் இருந்த காரணத்தினால் தூதரகத்தில் உள்ள தமிழர்களின் பாதுகாப்புக் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தோம். தமது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துமாறு அவர்கள் கோரியிருந்தனர். வெளியே செல்ல அச்சமடைந்த காரணத்தால் அவர்களை பின் கதவு வழியாக வெளியே அனுப்பினேன்.

இவர்களுக்கு ஏன் பயப்பட வேண்டுமெனக் கூறி சிங்கள இளைஞர்கள் முன் கதவு வழியாக வெளியே சென்றனர். இந்த இடத்தில் இனவாதம் கிடையாது. இலங்கையின் சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்படுகிறது எனவும், அரச தலைவர் தமிழில் அனுப்பி வைத்த சுதந்திர தினச் செய்தியையும் போராட்டக்காரர்களிடம் வழங்கியிருந்தேன். போராட்டக்காரர்களில் இருந்த அவர்களின் தலைவர் ஒருவர், இந்தச் செய்திகளை எடுத்து எரித்தார். தீயிட்டு எரித்த நபரை பிரிட்டன் தூதரக பொலிஸார் கைது செய்தனர். அதன் போது குழப்பமடைந்த போராட்டக்காரர்கள் தூதரகத்துக்கு அருகாமையில் ஓடி வந்தனர். சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்ற அனைவரினதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கிருந்தது. சீருடை அணிந்த நிலையில், நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது.

'பிரபாகரன் அவர் ஹீரோ' என்று கோசமிட்ட புலி ஆதரவாளர்களிடம் 'எல்லாம் முடிந்துவிட்டது' என்று நான் கூறினேன். 'தமிழ் ஈழம் அவ லாண்ட்' என்று கோசமிட்ட போது 'திஸ் இஸ் யுவர் லாண்ட்' என்று இலங்கை தேசியக் கொடியைக் காண்பித்தேன். நான் ஒரு தடவை விரலில் காண்பித்த சைகையை புலிகளுக்கு ஆதரவான ஊடகம் பல தடவை காண்பிப்பது போன்று கத்திரித்து ஊடங்களில் பரப்புரை செய்துள்ளது.

வடக்கில், வன்னியில் மட்டுமன்றி பிரிட்டனிலும் நான் தமிழ் மக்களுக்கு எவ்வளவு சேவையாற்றியிருக்கின்றேன் என்பது தெரியும். நீங்கள் இலங்கைக்குச் செல்லாது ஒவ்வொருவர் சொல்லுவதை வைத்துக் கொண்டு குற்றம் சுமத்த வேண்டாம் என்று நான் சீருடையை மாற்றிக் கொண்டு போராட்டக்காரர்களிடம் சென்று கூறினேன்.

நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து இலங்கை சென்று பார்க்குமாறு கூறினேன். அந்தத் தருணத்தில் இலங்கையர் என்ற ரீதியில் நான் செயற்பட்ட விதம் குறித்து பெருமிதம் கொள்கின்றேன்.

என்னை விடவும் நாடு முக்கியம் என்பதனை நான் கற்ற டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியிலிருந்து கற்றுக்கொண்டேன். அதன் அடிப்படையிலேயே நான் செயற்படுகின்றேன். கடந்த 7ஆம் திகதி அலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்திய அரசதலைவர், பணி இடைநிறுத்தம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது பதற்றமடைய வேண்டியதில்லை என்று கூறினார். (5)



## தொண்டையை சொறிந்தாராம் பிரிகேடியர்!

மகிந்த கூறும் விளக்கம்

கொழும்பு, பெப். 10

பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்ய முயற்சிக்கப்பட்டது, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்துவதற்காகவே என்றும், புலம்பெயர்ந்த புலிகள் ஆதரவுத் தமிழர்களின் இந்த நடவடிக்கையை இலங்கையிலுள்ள தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரிகேடியுர் பிரியங்க பெர்ணான்டோ தனது தொண்டையைச் சொறிந்தாரே தவிர ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தவில்லை எனவும், அவர் கூறியுள்ளார். (5)

## சு.கவின் பெண் வேட்பாளரை காணவில்லை

கொழும்பு, பெப். 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேலதிக பட்டியலில் வேட்பாளராக போட்டியிடும் பெண்ணொருவர் காணாமற் போயுள்ளதாக அவரது கணவர் வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

38 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயான வேட்பாளரையே காணவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வென்னப்புவ பிரதேச சபைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேலதிக பட்டியலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவர் சுகவீனம் காரணமாக கடந்த ஜனவரி 5 ஆம் திகதி மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் ஜனவரி 8ஆம் திகதி மதியம் முதல் காணாமற் போயுள்ளதாக கணவன் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடு செய்துள்ள பெண்ணின் கணவன், வென்னப்புவ பிரதேச சபைக்கு சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (5)

# ஏன் இந்தக் கோபம்?

கொழும்பு, பெப். 10



உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளின் போது, ஒருவர் மீது ஒருவர் கடுமையான குற்றச்சாட்டுகளையும், விமர்சனங்களையும் முன்வைத்த அரசியல் தலைவர்கள் மூவரும் நேற்று ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர்.

யானை தாக்கியதால் படுகாயமடைந்து, மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரரின் இறுதிச்சடங்கு சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் ஒரே மேடையில் அருகருகே அமர்ந்திருந்தனர்.

சில நாள்களுக்கு முன்னர், தேர்தல் பரப்புரைகளில் இவர்கள் கடுமையாக ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி விமர்சித்தனர். மேடையில் ஒருவரை ஒருவர் முகம் பார்க்காதே இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்குப் பெட்டிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெ.10

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் அனைத்தும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டன.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8 ஆயிரத்து 325 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் தேர்தலில் வாக்களிப்பதற்கு 1 கோடியே 57 இலட்சத்து 60ஆயிரத்து 50 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கென நாடுபூராகவும் 13 ஆயிரத்து 374 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்குரிய வாக்குப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 521 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 4 லட்சத்து 68 ஆயிரத்து 476 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 148 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் மாவட்டச் செயலகத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வவுனியாவில் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 599 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் 40 வட்டாரங்களிலுமிருந்து 86 ஆயிரத்து 734 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 94 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்க அனுப்பி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் 47 வட்டாரங்களிலும் வாக்களிப்பதற்கு 86 ஆயிரத்து 94 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 134 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகளும் மாவட்டச் செயலகத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 457 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மட்டக்களப்பில் 238 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக 901 பெண் பிரதிநிதிகள் உட்பட 2 ஆயிரத்து 736 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மட்டக்களப்பில் 3 லட்சத்து 89 ஆயிரத்து 582 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 504 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் காமினி.தேசிய கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் 306 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 5 லட்சத்து 62 ஆயிரத்து 25 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

(ற)


















# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



அமரர் திருவாட்டி

## தில்லைநாயகி குகநாகதாசன்

எமது குடும்பத் தலைவி கடந்த 11.01.2018 அன்று எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், நேரில் வருகை தந்து அன்னாரின் ஈமைக்கிரியைகளில் பங்கு கொண்டோர், உதவியோர், பனர்கள், அஞ்சலிப்பிர சுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர் 08.02.2018 அன்று கீரிமலையில் நடைபெற்ற இறுதி வேள்வி நிகழ்வில் பங்கு கொண்டோர் மற்றும் பல்வேறு வகையில் எமக்கு உதவி நின்றோர். அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (10.02.2018) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உயிரமைதி வழி பாட்டிலும் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

59, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

CS 13760.16.17

**குடும்பத்தினர்.**

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஸ்ரீமான்

## சின்னத்தம்பி தம்பிஐயா

(சிற்பாஸ்த்திரியார்)

தோற்றம்
19.04.1914

மறைவு
23.01.1998

திதி: 10.02.2018

ஆண்டுகள் இருபது கடந்தாலும்
எமை ஆளாக்கிய தந்தையின் நினைவு
நீங்காது என்றுமே எம் மனதில்

தங்கம்மா என்றுங்கள் மனையாளும்
தங்களது மக்களும், பேரன்களும், பேர்த்திகளும், பூட்டன் பூட்டிகளும்
என்னவரே, தந்தையே, தாத்தாவே பூட்டனே என்று சொல்லி
தங்களது புகைப்படத்தை பார்த்து நிற்க
உங்கள் நிழலிலே என்றும் வாழும் நாம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

காளிகோயிலடி,
அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னலட்சுமி சண்முகலிங்கம்



வேலணை மேற்கு, 08 ஆம் வட்டாத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களைவசிப்பிடமாகவும்கொண்டிருந்த திருமதி அன்னலட்சுமி சண்முகலிங்கம் (08.02.2018) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமநாதபிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை அமிர்தம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை சண்முகலிங்கம் அவர்களின் அன்புமனைவியும் கருணாகரன் (பிரான்ஸ்), கருணாவதி (ஜேர்மனி) காலஞ்சென்ற சாரதாம்பிகை (யாழ்ப்பாணம்), தயாபரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), பற்குணன் (கனடா), பற்பரா (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜகிதமாலா (பிரான்ஸ்), சிவநேசபிள்ளை (ஜேர்மனி) ,மகேந்திரன் (யாழ்ப்பாணம்), சந்திரகுமாரி (பிரான்ஸ்) காலஞ்சென்ற நளாயினி (பிரான்ஸ்), மணிமாலா (கனடா), ஸ்ரீமத்நடராஜன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்துரை, சீவரத்தினம், சிவ சுப்பிரமணியம், பாலசிங்கம், சிவலிங்கம், பாக்கியலட்சுமி மற்றும் முருகேசு (குணம் லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கண்ணம்மா, இரத்தினம், ஞானாம்பிகை மற்றும் மரகதம் (கனடா), பாக்கியலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணியளவில் 139, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மு. மகேந்திரன்
(ஓய்வு நிலை அதிபர், யா /வைத்தீஸ்வராக் கல்லூரி)
077 6914 229

139, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(cs 13757)(17.8)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





## இராமன் யோகராசா

(கிராமசேவையாளர் - JP)

தோற்றம் 27.05.1948 மறைவு 10.02.2013

## துரைராஜசிங்கம் துரேந்திரா

(H.N.B ஊழியர்)

தோற்றம் 23.01.1988 மறைவு 14.02.2013

வருடங்கள் ஐந்து ஓடியும் தண்ணீரில் தத்தளித்த எறும்பு - போல்
சோகத்தில் மூழ்கியிருக்கின்றோம்
உம் நினைவுகள் எம் மனதில் - என்றும் உள்ளது.

S/137480(11.17)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து விக்னேஸ்வரன்



பிறப்பு 17.04.1953 இறப்பு 09.02.2018

புலோலி வடக்கு, தாமரை ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் தற்போது சீரணி வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து விக்னேஸ்வரன் நேற்று (09.02.2018) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இரத்தினம் தம்பதிகளின் மகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் ராஜினி, விஜிதா, ராதிகா, அமுதா, கிரிகரன், ரவிக்குமார், விதுஷா, சாமினி, சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான முருகேசு - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (பருத்தித்துறை), செல்வம் (உடுப்பிட்டி), ஜோகனாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநாவுக்கரசு, திலகவதி, விநோதினி, நடராசா, மகேஸ்வரி, தனபாலசிங்கம், கமலநாதன், தேவராசா, மகாலிங்கம், ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சீரணி வீதி, சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0773607239,
0217912473

(CS 13759/15/17)

## பொன்னம்பலம் முருகேசம்பிள்ளை

*(ஓய்வுபெற்ற DIT - Srilanka Telecom)*



பிறப்பு 27.08.1929 இறப்பு 07.02.2018

யாழ். காரைநகர், களபூமி, கொம்பாவோடையைப் பிறப்பிடமாகவும் கலட்டி, சீனியர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் முருகேசம்பிள்ளை கடந்த (07.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா (Bank er) தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணி (பேபி) யின் அன்புக் கணவரும் நிர்மலா, ரோகினி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற கோமதி, சாந்தி (நோர்வே), தவமணி (பிரான்ஸ்), சோதி, நரேந்திரன் (லண்டன்), முருகானந்தன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சரவணபவன், சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரட்ணம், பரமசாமி (பராசு), மகேந்திரன், ரவீந்திரன் (ஜேர்மனி), தவேந்திரன் (நோர்வே), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (கட்டார்), சாந்தகுமாரி (லண்டன்), ஹேமலதா (ஜேர்மனி), ஹிசாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கிருஸ்ணப்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா, இலக்சுமி, காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, கமலாதேவி மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கனகசபை, மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகலனும் தர்சினி, நிசாந்தி, மயூரதி (லண்டன்), பவித்ரா (லண்டன்), கார்த்திகா(கனடா), அஜந்தன், சுதர்சன்(சிங்கப்பூர்), யசோதினி, லயவாணி, அபிராமி(நோர்வே), நிரோசன் (பிரான்ஸ்), நிருஜா (பிரான்ஸ்), தேவப்பிரியன், ஹேஜன், அகல்யா, வித்யாகர் (லண்டன்), நர்மதி (லண்டன்), ராகவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹர்சன், கல்யாணி, திலக் ஷனா, நிஹேஷ் (லண்டன்), ஸ்ரீஅபிநயா (லண்டன்), சேயோன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

56, சீனியர் லேன், கலட்டி,
யாழ்ப்பாணம். 021 222 3816

(C 13756/15/17)

தகவல்: குடும்பத்தினர்.

## சிவனுடைய இராத்திரியா எங்கள் இராத்திரியா?

ஆசிரியர் கற்பித்ததை தன் சொந்த முயற்சியின் மூலமே மாணவன் தன்னுடையதாக்கிக் கொள்கிறான். அதன் பின், கற்றதனால் மேல் நிலை அடைகிறான். அந்த அறிவால் பயன் அடைபவன் மாணவனே தவிர, ஆசிரியர் அல்ல. அது போல, பரம்பொருளிடம் இருந்து பிரம்மஞானத்தைப் பெற்றுக் கொண்ட ஆத்மாக்கள், ஆன்ம ஈடேற்றம் அடைவதற்காகத் தமக்கென முயற்சி எடுத்த காலமே சிவராத்திரி. அதனால் சிவராத்திரி என்பது உண்மையில் சிவனுக்குரிய இராத்திரி என்பதை விடவும், அவரது இனிய குழந்தைகளாகிய ஜீவாத்மாக்களின் இராத்திரி என்பதும் சாலப் பொருந்தும்.

13ஆம் திகதி(செவ்வாய்) மாலை 6.00 மணி முதல் அடுத்த நாள் காலை 6.00 மணி வரை சுகதாமம் மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் 12 மணித்தியால நிகழ்வுகளில் அக்கால கட்டத்தில் உண்மையில் இடம்பெற்றதைத் தெரிந்து கொள்ளலாம்.

*(பிரம்மகுமாரிகள் இராஜ யோக தியான நிலையம், இல 211, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (கலட்டி சந்தி அருகில்) தொடர்புகளுக்கு 077 9234562.*

# இயந்திர அறுவடையால் வைக்கோல் தட்டுப்பாடு

## கால்நடையாளர்கள் சிக்கலில்

**யாழ்ப்பாணம், பெப். 10**

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் வைக்கோலுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. வைக்கோலைப் பெற்றுக் கொள்வதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாகப் பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். வைக்கோல் தட்டுப்பாடு காரணமாக அதன் விலை அதிகரித்த நிலையில் காணப்படுகிறது. இயந்திரங்களைப் பயன்படுத்தி நெல் அறுவடை செய்வதால் வைக்கோலுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

முன்னர் கூலியாள்களைக் கொண்டு நெல் அருவி வெட்டுவது வழமையாக இருந்தது. பின்னர் அருவி வெட்டும் இயந்திரம் வடக்கில் பயன்பாட்டுக்கு வந்தது. அன்றிலிருந்து கூலியாள்களைக் கொண்டு நெல் அருவி வெட்டுவது குறையத் தொடங்கியது.

இயந்திரம் மூலமாக நெல் அறுவடை இடம்பெறுவதால் வைக்கோலைப் பெற்றுக்கொள்வதில் சிக்கலை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

கடந்த வருடம் போன்று இந்தமுறையும் கால்நடைகளுக்கு வைக்கோல் தட்டுப்பாடு ஏற்படும் என்றுதான் கருதவேண்டியுள்ளது. அறுவடை முற்றுமுழுதாக நிறைவுறாதபோதும் வைக்கோல் விலை தற்போது சுமார் 10 ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது என்று கூறப்படுகிறது.

பெரும் போக நெற்செய்கை அறுவடை கூடுதலாக இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் வைக்கோலாக எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்படுவதால் நெற்கதிர்கள் துகழ்களாகவே காணப்படுகின்றன. அவை வயல்களில் கைவிடப்படுகிறது. அவற்றை எடுத்துப் பக்குவப்படுத்துவது சாத்தியமில்லை. அதனால் அதற்கான கேள்வியும் அதிகரித்துள்ளது. இதன் காரணத்தால் அரிவால் மூலம் அறுவடை செய்யப்படும் வைக்கோலுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் வைக்கோலை பெற்றுக்கொள்வதற்கு சிரமப்பட்டு வருகின்றனர். சிலர் வன்னிப் பகுதிக்குச் சென்று குடாநாட்டுக்கு எடுத்து வருகின்றனர். கால்நடைகள் மூலமாகப் பயன்பெறுகிறோம். அவற்றுக்கு வைக்கோல் உள்ளிட்டவற்றைக் கொடுத்தால்தான் பயனைத் தொடர்ந்து பெறலாம். அவற்றையும் பாதுகாக்கலாம் என்று கால்நடையாளர்கள் தெரிவித்தனர். (எ-4-17)

## வடக்கில் 10 மருத்துவர்களின் ஒப்பந்த காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.10

வடக்கு மாகாணத்தில் தேவையின் நிமித்தம் 10 மருத்துவ உத்தியோகத்தர்களின் ஒப்பந்த காலம் ஒருவருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் நீண்ட காலமாக மருத்துவர்களின் வெற்றிடம் நிலவுகின்றது. இதனை கருத்தில் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். வடக்கு மாகாணத்தில் மருத்தவர்களின் அனுமதிக்கப்பட்ட 882 ஆளணியில் 237 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில் நிரந்தரமாக ஒரு மருத்துவர் இல்லாத நிலையமும் காணப்படுகின்றது. ஆகவே தேவையின் நிமித்தம் நடப்பு வருடத்தில் இவ்வாறு 10 மருத்துவ உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## கொட்டடியில் காணி சபை அமர்வு இன்று இல்லை

வடமராட்சி,பெப்.10

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம்பெறமாட்டாது என உப தவிசாளர் வை.தனநாதன் அறிவித்துள்ளார். எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி அல்வாய் முத்துத்தம்பி வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-50)

## வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதிகள்

யாழ்ப்பாணம் பெப் 10

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வடமராட்சி பருத்தித்துறைப் பிரதேசத்தில் வசிக்கும் வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கற்கோளம் மெதடிஸ்த மிசன் பாடசாலை - முனை- பருத்தித்துறை - வியாபாரிமூலை - பொலிகண்டி -வல்வெட்டித்துறை தொண்டமனாறு(கடற்கரை வீதி)வீதி ஊடாக போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (எ-4)



வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் உதவித் திட்டமாக மாடுகள் அண்மையில் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மாடுகள் வழங்கப்பட்டன. மொத்தமாக 50 பயனாளிகளுக்கு 5 மில்லியன் செலவில் கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் கீழ் அவை வாங்கி வைக்கப்பட்டன. (எ-ரி)

## அமைச்சின் மேலதிக செயலராக நந்தினி ஸ்ரான்லி பதவியுயர்வு




'மன்னார்,பெப்.10

மன்னார் மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றும் நந்தினி ஸ்ரான்லி டி மெல் என்பவர் மலையகப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி, அமைச்சின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஆறு வருடங்களாக மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வருகிறார். இலங்கை நிர்வாக சேவை சிறப்புத்தரத்துக்கு உயர்த்தப்பட்டதை அடுத்து பொதுச் சேவை ஆணைக்குழுவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரையில் மன்னார் கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளராக இவர் கடமையாற்றினார். 2005ஆம் ஆண்டில் இருந்து கடந்த 2012ஆம் ஆண்டு வரையில் மன்னார் பிரதேச செயலாளராக பணியாற்றினார்.

2012ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வருகிறார். இவர் தமது புதிய கடமைகளை எதிர்வரும் 16ஆம் திகதி பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-56)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிறப்பு நிதியை ஒதுக்க வேண்டும்

## மாகாண மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்குவதைப் போன்று ஒரே தொகையுடைய நிதியை கொழும்பு அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் ஒதுக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார் மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் இந்த வருடத்துக்கான முதலாவது ஆலோசனைக் குழுக்கூட்டம் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதன் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் ஆகிய அமைச்சின் கீழான திணைக்களங்கள் ரீதியான செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வது குறித்த ஆலோசிக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு கிழக்கில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொருளாதார இழப்புகளைச் சந்தித்தவர்கள் என எவராகிலும் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போரின் விளைவாகவே பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

ஆகவே, ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்குவதைப் போன்றல்லாமல் சிறப்புக் கவனத்துக்கு உட்பட்ட வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயல்திட்டங்களை அந்தந்த மாகாண சபையினூடாக முன்னெடுக்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். எனினும் அது குறித்து இதுவரை கருத்தில் எடுக்கப்படவில்லை - என்றார்.

ஆலோசனைக் குழுக்கூட்டத்தில், ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக விளங்கும் மாகாண சபை உறுப்பினர்கள், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், மாகாணத் தொழில்துறைத் திணைக்களப் பணிப்பாளர் உஷா சுபலிங்கம், மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ். வனஜா ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-8)

## திருக்கேதீஸ்வரத்துக்கு சிறப்பு பேருந்து சேவை

வடமராட்சி,பெப்.10
மகா சிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பயணிகளின் வருகைக்கேற்ப பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு சிறப்பு பேருந்து சேவைகள் நடைபெறும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் பருத்தித்துறைக் கிளை தெரிவித்துள்ளது.
இதற்கான ஆசனப் பதிவுகளை இன்று சனிக்கிழமை தொடக்கம் மேற்கொள்ளலாம்.
மேலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கீரிமலைக்கும் சிறப்பு சேவைகள் நடைபெறும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-4)

# மாணவனின் கண் பாதிப்படைய மருத்துவ தவறுதான் காரணமா?


## பெற்றோர் விசாரணை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், பெப். 10
**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிறுவன் ஒருவனுக்கு சத்திரசிகிச்சை நிபுணர்களால் கண்ணில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது என குற்றஞ்சாட்டியுள்ள சிறுவனின் பெற்றோர் அது தொடர்பில் விளக்கம்கோரி வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடமும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

இது தொடர்பில் குறித்த பெற்றோர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு வள்ளிபுனம் அரசினர் தமிழ்க்கலைவன் பாடசாலையில் கடந்த 23ஆம் திகதி ஒரு மணியளவில் சக மாணவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது கண்ணில் ஏற்பட்ட சிறு பாதிப்பைத் தொடர்ந்து சிறுவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.
மாவட்ட மருத்துவமனையில் கண்ணைப் பார்வையிட துறைசார்ந்த மருத்துவர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் சத்திர சிகிச்சை பிரிவில் நின்ற மருத்துவர்கள் மாணவனுக்கு கண்சிகிச்சை கொடுத்தனர். சிறுவன் அன்று இரவு 9 மணிக்கு யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான்.
அங்கிருந்து கடந்த 3ஆம் திகதி இரவு கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான். அங்கு மாணவனைப் பார்வையிட்ட மருத்துவர்கள் கண் தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படுத்தமுடியாது என்று தெரிவித்துள்ளனர்.
மாவட்ட மருத்துவமனையில் கண் தொடர்பில் சத்திரசிகிச்சை செய்ய தகுதி பெறாத மருத்துவர் ஒருவரே சிகிச்சை மேற்கொண்டார். யாழ்ப்பாணம் மருத்துவமனையிலும் துறை சார்ந்த மருத்துவர் பார்வையிடவில்லை;-என்றனர்.
இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா வளாகத்தை தொடர்புகொண்டபோது, 'இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது. பிராந்திய சுகதார சேவைகள் பணிப்பாளரிடம் விளக்கம் கோரியுள்ளோம். அது பற்றிய விசாரணை இடம்பெறுகிறது' என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ-ரி3)

## முதலமைச்சர் அமைச்சின் நிதியை பயன்படுத்த அமைச்சர்சபை அனுமதி

யாழ்ப்பாணம்.பெப்.10
ஆளுநர் சுயேச்சை நிதியத்திலிருந்து முதலமைச்சர் அமைச்சுக்கு மாற்றப்பட்ட நிதியில் வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு அமைச்சர்சபை அனுமதி வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் அபிவிருத்தி வேலைகளுக்கு திணைக்களங்களில் இருந்து ஆளுனரால் நிதி பெறப்பட்டது. இந்த நிதி பலரின் வேண்டுகோளுக்கு அமைவாக பகுதி பகுதியாக விடுவிக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் ஆளுநர் சுயேச்சை நிதியத்திலிருந்து முதலமைச்சர் அமைச்சுக்கு வழங்கப்பட்ட 4.7 மில்லியன் நிதியை பயன்படுத்துவது தொடர்பில் அமைச்சர் சபையில் கலந்துரையாடப்பட்டது. நிதியை, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சிறப்புத் தேவையுடையவர்கள் என்போருக்கு வழங்க அனுமதி கிடைத்தது. முதலைச்சரின் அமைச்சால் தற்போது பயனாளிகள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பட்டியல் சபையில் சமர்பிக்கப்பட்டு சபையின் அனுமதியின் பின்னர் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர் சபை தற்போது அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-ரி)



முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளபோதும் கொள்வனவு செய்வாரின்றி மரங்களின்கீழ் பரவிக்கிடக்கின்றது. விலை வீழ்ச்சி காரணமாக சந்தைப்படுத்த முடியாத நிலையில் உற்பத்தியாளர்கள் கவலை அடைந்துள்ளனர். (ஏ-500)

## பொலனறுவை சிவாலயத்தில் மகாசிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 10
பொலனறுவை புராதன சிவாலயத்தில் மகாசிவராத்திரி புனித தினத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளை நடத்த பொலனறுவை சமன்பிட்டிகாமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றத்தின் தலைவர் பாலன் சுதாகரன், இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்துள்ளார்.
இந்த நிகழ்வுகளில் மாமன்றப் பிரதிநிதிகளாக, மாமன்றத்தின் சார்பில் த.மனோகரன், ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், சி.த.சி.அருளானந்தன் உள்ளிட்டோர் கலந்து கொள்ளுகின்றனர்.
அதேவேளை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பரம்பொருளாம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சன்னிதியிலும் நான்கு சாமங்களும் அபிடேகங்களுடன் மகாசிவராத்திரி பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன என்று அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார். (ஏ-4)

## சமூக சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.10
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் தரம் 2 இக்கான வெற்றிடங்கள் 8 காணப்படுகின்றன.
அதற்கு அமைவாக தற்போது இந்த வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதியுள்ளது.
இவர்களை உள்வாங்குவதற்கான திறந்த மற்றும் மட்டுபடுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஆளுநரின் அனுமதியின் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-ரி)

## தேர்தல் கடமையில் பேருந்துகள் ஈடுபடுவதால் போக்குவரத்தில் மக்கள் அவதி!

முல்லைத்தீவு,பெப்.10
முல்லைத்தீவு மாவட்ட சாலைக்குச் சொந்தமான அனைத்து அரச பேருந்துக்களும் தேர்தல் செயற்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதால் அரச பேருந்துக்களின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
முல்லைத்தீவு மாவட்ட சாலைக்குச் சொந்தமான 22 பேருந்துக்கள் மாவட்டத்தின் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நேற்றும் சேவையில் ஈடுபட்டன. இன்றும் தேர்தல் சேவையில் ஈடுபடுவதால் மக்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட சாலைக்கு மிகக்குறைந்தளவிலான பேருந்துக்களே காணப்படுகின்றன. அவையும் கூட தேர்தல் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் மக்கள் சேவைசெய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 134 வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் வாக்கெடுப்பு பெட்டிகளுடன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களை நேற்று பேருந்துக்கள் ஏற்றிச் சென்றன எனவும் அவற்றில் 22 அரச பேருந்துக்களும் ஏனைய தனியார் பேருந்துக்களும் ஈடுபடுத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-ரி3)

# கிளிநொச்சியில் 86,734 பேர் இன்று வாக்களிக்கத் தகுதி

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.10
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க 86ஆயிரத்து 734 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சியில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசசபைகளுக்கு வட்டாரத்தில் நேரடியாகவும், பட்டியலூடாகவும் 66 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 638 பேர் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றனர். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தேர்தல் கடமைகளில் ஆயிரத்து 500 அரச உத்தியோகத்தர்களும், 300 காவல்துறையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு சிறப்பு அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்பு படையினர் ஆகியோரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுப்பட்டுள்ளனர்.
வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இன்றுவரை (நேற்று) 71 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லும்போது அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால் முறைபாடு செய்வதற்கும் சிறப்பு நடுவர் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் 02139 00154 என்ற இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.
வாக்களார்கள் முடியுமானவரை காலையிலேயே சென்று தங்களது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் -என்றார். (ஏ-35)

# மாணவர் முன்னேற்றம் பெற்றோரின் கைகளில்

## மட்டு .கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

**மட்டக்களப்பு,பெப்.10**

**மாணவர்களை முன்னேற்றமடையச்செய்ய வேண்டிய பெரிய பொறுப்பு பெற்றோர்களாகிய உங்களின் கையில்தான் உள்ளது என்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அருள் பிரகாசம் தெரிவித்தார்.**

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நேற்று கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் த.அருமைத்துரை தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"இந்த மாணவர்களை இன்னும் திறன்பட வைக்கக்கூடிய பெரிய பொறுப்புக்கள் பெற்றோர்களாகிய உங்களின் கையில்தான் உள்ளது. ஆசிரியர்களின் பங்களிப்புக்கள் அதிகமாக இருந்த போதிலும், பெற்றோர்களாகிய நீங்கள் அவர்களின் பக்கம் அதிக கரிசனை செலுத்தினால் மாத்திரமே முன்னேற்றப் பாதையை எட்டமுடியும்.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை வடக்கு கோட்ட பாடசாலைகளில் கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம் தான் சாதனை நிலைநாட்டுகின்ற பாடசாலையாகத் திகழ்கின்றது. இந்தப் பாடசாலையின் நற்பெயரை தொடர்ந்தும் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

எமது பிள்ளைகளுக்கு முன்னால் இருக்கும்போது கணவன் மனைவியாக ஒருபோதும் நீங்கள் இருந்துவிடக்கூடாது. அவர்களின் தாய், தந்தையாகத்தான் இருக்கவேண்டும். இவ்வாறு இருந்தால் மாத்திரமே எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை நல்லதாக கொண்டு செல்லமுடியும். பெற்றோர் - மாணவர்கள் இணைந்து வீட்டிலும் மாணவர்கள் - ஆசிரியர்கள் இணைந்து பாடசாலையிலும் கல்விச் சூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதான் வினைத்திறன் மிக்கதொரு கல்வியை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இதனூடாகத்தான் மாணவர்கள் பன்முக ஆளுமையை விருத்தி செய்து கொள்வதுடன் அவர்களின் எதிர்கால அடைவுகளையும் எட்டமுடியும்" என்றார். (ற-ரி5)



# முனைக்காட்டில் வாகனம் எரிப்பு

மட்டக்களப்பு,பெப்.10

கொக்கட்டிச்சோலை காவல் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் வைத்து வாகனமொன்று எரிந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முனைக்காடு கிராமத்தில் தொலைத் தொடர்பு கோபுரமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கோபுர அமைப்பு பணியில் ஈடுபடுகின்றவர்களின் வாகனமே இவ்வாறு எரிந்தது. வாகனம் இனந்தெரியாதவர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதா? தானாக தீப்பற்றியுள்ளதா? எனத் தெரியாத நிலையில், இது தொடர்பிலான விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸாரும், மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு,பெப்.10

தம்புள்ள நகருக்கு மத்தியிலுள்ள பிரதான வீதிக்கு அருகில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலத்தை பரிசோதித்த போது தலை பகுதியில் பெரிய காயம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதுடன் சடலத்துக்கு அருகில் சில ஆடைகளுடன் கூடிய பொதி ஒன்றும் மீட்கப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படவில்லை எனவும், உயிரிழந்தவர் சுமார் 40 வயது மதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தம்புள்ள தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# படுகொலை செய்யப்பட்டோரின் 13ஆவது நினைவேந்தல் நிகழ்வு



அம்பாறை.பெப்.10

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கப்டன் அரியநாயகம் சந்திரநேரு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்ரினன் கேணல் கௌசல்யன் உட்பட படுகொலை செய்யப்பட்ட 7பேரின் 13வது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் திருக்கோவிலில் கடைப்பிடிக்கப்பட்டது.

நினைவேந்தலானது மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான சந்திரநேரு சந்திரகாந்தனின் தலைமையில் அம்பாறை திருக்கோவில்2 சுப்பர்ஸ்டார் விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து நினைவுச் சுடரை ஏற்றியதைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் மலர்தூவி உணர்வு பூர்வமாக மாமனிதர் கப்டன் அரியநாயகம் சந்திரநேரு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்ரினன் கேணல் கௌசல்யன் உட்பட 7பேருக்கும் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ற-ரி5)

# கழிவுத் தேயிலையுடன் இளைஞர் கைது

கொழும்பு, பெப்.10

வெலிமடை - பூஹுல்பொல பிரதேசத்தில் கப் வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்ட 267 கிலோ கிராம் கழிவுத் தேயிலையை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. கருதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வெலிமடை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார் எனத்தெரிவிக்கப்பட்டது. (றரி5)



# மோட்டார் சைக்கிளுக்கு தீவைப்பு



மட்டக்களப்பு, பெப்.10

பெரியநீலாவணைப் பகுதியில், மோட்டார் சைக்கிளொன்று, இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் அதிகாலை தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதென, கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

அக்பர் கிராமப் பகுதியில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளே, தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் நிலையத்தில், மோட்டார் சைக்கிள் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2)

# தொடருந்து கடவையில் உயிரிழந்த வயோதிபர்

கொழும்பு,பெப்.10

கொழும்பு - சிலாபம் பிரதான வீதியின் நீர்கொழும்பு - கல்கந்த தொடருந்து கடவைக்கு அருகாமையில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கனரக வாகனம் ஒன்று வீதியில் பயணித்த ஒருவர் மீது மோதியமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் 65 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கனரக வாகன செலுத்துனர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# வன்புணர்வு குற்றச்சாட்டு கொன்ஸ்டபிள் கைது

மாத்தளை, பெப்.10

பெண்ணொருவரை வன்புணர்வுசெய்த குற்றச்சாட்டில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மாத்தளை, கலேவல வெலகந்த பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் வீட்டில் இல்லாத வேளை சிவில் உடையில் வீட்டுக்கு சென்ற பொலிஸ் கொன்ஸ்டபிள் பெண்ணை வன்புணர்வு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவரால் பொலிஸ் அவசர பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸ் கொன்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார்.

இவர் எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என கலேவல பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)





# போர்க் குற்றம் புரிந்தது அமெ.

## கூட்டுப்படையின் தாக்குதல் குறித்து சிரிய அரசதரப்பு கடும் கொதிப்பு

வொஷிங்டன், பெப். 10

சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப்படை நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் சுமார் 100 சிரிய அரச படையினர் உயிரிழந்தனர். இதற்கு சிரிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் 'அமெரிக்கா புரிந்துள்ள போர்க்குற்றம் இது' என்றும் அது எச்சரித்துள்ளது.

சிரிய அதிபர் அல் அசாத் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று தெரிவித்து சிரிய அரசுக்க எதிராக கிளர்ச்சிக்குழு போராடிவருகிறது. கிளர்ச்சிக் குழுவுக்கு அமெரிக்காவும் சிரிய அரசுக்கு ரஷ்யாவும் உதவிசெய்து வருகின்றன. சமீப காலமாக கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர். மீட்புப்பணிகளுக்கும் அங்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்தது. ரஷ்யாவினதும் சிரியாவினதும் தாக்குதலுக்கு அமெரிக்காவும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கவும் ட்ரம்ப் பரிசீலித்து வந்தார். இந்தப் பின்னணியிலேயே அமெரிக்கா நேற்றுமுன்தினம் இந்தத்தாக்குதலை நடத்தியது. இந்தத்தாக்குதல் அமெரிக்கா புரிந்த போர்க் குற்றம் என்று சிரியா அறிவித்தது. 'அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையே சட்டவிரோதமானது. அதைக் கலைக்க வேண்டும். படுகொலையை பன்னாட்டுச்சமூகம் கண்டிக்க வேண்டும். அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதல் ஒரு போர் குற்றம். ஐ.நா. சபை இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்' என்று சிரிய அரசு ஐ.நா. சபைக்குதகவல் தெரிவித்துள்ளது. (ம)

## உலகத்தரம் வாய்ந்த இராணுவம் வடகொரியாவிடம் தற்போதுள்ளது

### அதிபர் கிம் யோங் உன் பெருமிதம்



பியாங்யாங், பெப். 10

வடகொரியா நேற்றுமுன்தினம் மிகப்பெரும் இராணுவ அணிவகுப்பை நடத்தியது. இந்த அணிவகுப்பை நேரில் பார்வையிட்ட அந்த நாட்டு அதிபர் கிம் யோங் உன், 'உலகில் சிறந்த இராணுவத்தை வடகொரியா கொண்டுள்ளது' என்று தெரிவித்தார்.

வடகொரிய இராணுவத்தின் 70ஆவது ஆண்டை கொண்டாடும் விதமாக இந்த அணிவகுப்பு நடந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவ அணிவகுப்பில் பல்வேறு ஏவுகணைகள் அணிவகுக்கப்பட்டிருந்த ஒளிப்படங்களை வடகொரியஊடகங்கள்வெளியிட்டுள்ளன.

முன்னதாக, கடந்த ஆண்டு பெப்ரவரிமாதம்முதல்உலகநாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில்நடத்தப்பட்டன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வந்தன. ஆனால் எதிர்ப்புகளைச் சற்றும் பொருட்படுத்தாமல்வடகொரியாதொடர்ந்து அணுவாயுத ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது. இதையடுத்து வடகொரியா மீது கடும் பொருளாதாரத்தடைகள்தற்போது விதிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

> “ கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன.



பொலிவியாவின் திரிபாய மாகாணத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த கனமழை காரணமாக அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட நாயொன்றைமீட்டுச்செல்கிறார்நபரொருவர். பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப்படத்தை வெளியிட்டுள்ளது. (ம)



## குழந்தைகள் மீது துர்நடத்தைக்காக தேசிய மன்னிப்புக் கேட்கிறது ஆஸி.

சிட்னி, பெப். 10

பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளான பல்லாயிரம் குழந்தைகளிடம் தேசிய மன்னிப்பு கோரவுள்ளதாக ஆஸ்திரேலியத்தலைமை அமைச்சர் மல்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய நிறுவனங்களில் குழந்தைகள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளானதாக எழுந்த குற்றச்சாட்டு மீது நடந்தநான்காண்டுகாலவிசாரணையில் பல்லாயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து தேசிய மன்னிப்புக் குறித்த அவரது அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தேவாலயங்கள், பள்ளிகள், விளையாட்டு மன்றங்கள் உள்ளிட்ட நிறுவனங்களில் பலதசாப்தங்களாக இந்தத் தொந்தரவுகள்நிகழ்ந்துள்ளன. தேசிய மன்னிப்பு இந்த ஆண்டு இறுதியில் கோரப்படும் என்று டர்ன்புல் அறிவித்துள்ளார். "குழந்தைகளுக்கு உரிய கண்ணியத்தை அவர்களைப் பாதுகாக்கவேண்டியவர்களேமறுத்துள்ளனர். இந்த சம்பவங்களை ஏதோ சில அழுகியஅப்பிள்கள்என்றுபுறக்கணித்து விட முடியாது. சமூகத்தின் பெரிய நிறுவனங்கள்மோசமாகத்தோல்வியடைந்துள்ளன" என்றும்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ் கரம்பனை பிறப்பிடமாகவும் யாழ். இனுவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த

அன்னை மடியில்
14 . 02 . 1953



ஆண்டவன் அடியில்
01 . 02 . 2008

## அமரர் கிறிஸ்தோப்பர் கொலின் தேவராஜா

(வருமான வரி மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேசசபை)

அவர்களின் தசாப்த ஆண்டு நினைவஞ்சலி

திதி : அபரபக்க தசமி

**தேன் சிந்தும் பேச்சாலும்
வளைந்து கொடுக்கும் பண்பாலும்
ராஜா போல் உலகிற்கு
உத்தமனாய் வாழ்ந்து
சென்றீர்களே அன்று
இன்று......
ஈரைந்து ஆண்டுகள்
உருண்டோடிப்போனாலும்
இதயங்கள் இங்கு கனக்கிறது
ஈரவிழிகள் காய மறக்கின்றன**

**பண்பின் திருவுருவாய்
பாசமிகு கணவனாய்
பாசமிகு தந்தையாய்
பாசமிகு மாமனாய்
பாசமிகு பேரனாய்
பாசமிகு சகோதரனாய்
பாசமிகு நண்பனாய்
பழகிய நாள்களை
எண்ணும் போது
அருகில் நீங்களில்லை – ஆனால்**

**எம் அனைவரையும் உங்கள் இதயத்தில்
அணைத்தே இருக்கிறீர்கள்
இறவாப் பெருவாழ்வினுள்
புகுந்து விட்ட உங்களுக்கு
மலர்தூவி வாழ்த்திடுவோம்
காலமெல்லாம் போற்றிடுவோம்
மண்ணகம் விட்டுப் பிரிந்து
எம் உள்ளங்களிலே
நினைவாய் வாழும்
பத்தாம் வருடம்**

மண்ணில் உதித்து, மாந்தருள் மாணிக்கமாக, ஊரார் மெச்ச வாழ்ந்து, மக்களின் மனங்களில் அழியாது, மங்காது நிறைந்திருக்கும் அமரராகி விட்ட எங்கள் குல விளக்காய் விளங்கிய பாசத்திற்குரிய உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும் நாம் இறைவனிடத்தில் உங்களுக்காக பிரார்த்திக் கின்றோம்.

அன்புக்குரியவரே ! பாசத்தின் உறைவிடமாகவும் அன்பின் இலக்கணமாகவும் வாழ்ந்த நீவிர் இம் மண்ணை விட்டு மறைந்தாலும் எம் அனைவரினதும் மனங்களை விட்டு மறையாது வாழ்வீர்கள் நீங்கள் விண்ணிலிருந்து எம்மை வாழ்த்தி நிற்பதால் நாம் மண்ணிலிருந்து உம் புகழ் கூறி நீங்கள் காட்டிய வழியில் உங்கள் பெயர் தழைக்க வாழ்ந்திடுவோம்.

புவியில் ஐம்பூதங்கள் நிலைத்திருக்கும் வரை நீங்கள் எம் மனங்களிலெல்லாம் நிலைத்திருப்பீர்கள் ஆண்டுகள் பத்து கடந்தாலும் உங்களின் பசுமையான நினைவலைகளை சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் அன்பு மனைவி; மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஹரிகரன் கொலின் தேவராஜா (மகன் குடும்பம் - லண்டன்)
00447456710501

(AJA 9365)(14.17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இன்றைய விதைப்பே எதிர்கால அறுவடை

கத்தோலிக்கர்கள் தமது புனித நூலாகக் கருதும் வேதாகமத்தில் அற்புதமான வாசகம் ஒன்று உள்ளது. 'ஒருவர் தான் விதைப்பதையே அறுவடை செய்வார்' (கலாத்தியர் 6:7) என்ற வாசகமே அது. இந்த வாசகம் தேர்தல் காலங்களிலும் கச்சிதமாகப் பொருந்தும். அது வாக்காளர்களாக இருந்தாலும் சரி, வேட்பாளர்களாக இருந்தாலும் சரி. இன்று நடைபெறுகின்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கும் இந்த வாசகம் மிகப் பொருத்தமாக அமையத்தான் செய்கிறது.


தேர்தலுக்கு முன்னதான பரப்புரைகளில் தாம் முழங்கித் தள்ளியவற்றின் அடிப்படையிலும் இதுவரைகாலமும் தாம் என்னென்ன காரியங்கள் ஆற்றின என்பது தொடர்பிலும் அறுவடை செய்ய அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் காத்துள்ளன. பருவகாலக் குற்றச்சாட்டுக்கள், கண்டனங்கள், மிகைப்படுத்தப்பட்ட முழக்கங்கள், வழங்கிய வாக்குறுதிகள், விடுத்திருந்த அறிக்கைகள், தொடர்மேடைப் பேச்சுக்கள், வெளிப்படுத்திய சாத்தியப்படக்கூடிய திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இன்று அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தத்தமக்குரிய அறுவடையைப் பெற்றுக் கொள்ளப் போகின்றன. மக்கள் இந்த அறுவடையை வழங்கப்போகிறார்கள். விளைச்சல் அமோகமானதா, சுமாரானதா, மோசமானதா, படுமோசமானதா என்பது தொடர்பில் தீர்மானிக்கும் சக்தியும் மக்களிடமே உள்ளது. இது தவிர்க்கப்பட முடியாதது. இதுவே ஜனநாயகம். ஜனநாயக அரசில் அரங்கில் மக்களே எல்லாமும்.

'அறுவடை' என்கின்ற எண்ணக்கரு அரசியல் கட்சிகளுக்கோ அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கோ மட்டுமானது இல்லை. அது வாக்காளப் பெருமக்களுக்கும் பொருந்தும். இன்று அவர்கள் விதைக்கும் வாக்குகளில் தான் எதிர்கால அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும். விதைப்பு சரியாக அமைகிறதா என்பதை மக்கள் விழிப்புணர்வுடன் பார்த்துக்கொள்ளல் மிகமிக அவசியம். விதைப்பை இன்று திறம்படச் செய்யாமல் விட்டுவிட்டு எதிர்காலத்தில் அறுவடை சரியில்லை என்று அழுது புலம்புவதால் எவருக்கு என்ன பயன். ஆக, வாக்குகள் என்ற நாற்றுக்களை வாக்காளப் பெருமக்கள் இன்று திறம்படக் கையாள வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் மிகநெருங்கிய தொடர்பு உள்ளது. வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் உறவுநிலைத் தொடர்பும்கூட அவசியம் இருக்கத்தான் செய்யும். எனது அண்ணன், தங்கை, மாமா, மைத்துனன் உள்ளிட்ட பற்பல உறவு நிலைகளுக்குள் வாக்குகளைத் தொலைத்துவிட வேண்டாம். உறவுநிலையை, தெரிந்தவர் பழகியவர் என்ற பாகுபாடுகளை ஓரம் வைத்துவிட்டு சரியான நபர் என்று இனங்கண்டுகொள்பவருக்கு வாக்காளர்கள் தமது வாக்குகளை வழங்க வேண்டும். அது சரி. அதுவே அரசியல் நேர்மை. அதுவே தர்மம்.

மக்களே! வாக்களிப்பதற்கு மாலை 4 மணிவரை கால அவகாசம் உள்ளதுதானே என்று உள்ளூர நினைத்துவிட்டு பிந்திச்செல்லாதீர்கள். உங்களுக்கு என்று குறித்து ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடிகளுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்லுங்கள். வாக்களிக்கும் உங்கள் கடமையை நேரகாலத்துடன் செய்யுங்கள். தேர்தல் முறைகேடுகள், மோசடிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருங்கள். உங்கள் உரிமையை இறுகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். இன்றைய நாளின் கனதித்தன்மையை உணர்ந்துகொள்ளுங்கள். இன்றைய நாளின் நாயகர்கள் நீங்களே என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்ளுங்கள். அந்தப் பெருமிதத்துடன் எதிர்காலத்தில் பெருமைப்படும்படியானவர்களைத் தெரிந்தெடுங்கள். விதைப்பைச் சரியாகச் செய்து முடியுங்கள். அதை திறம்படச்செய்தால் எதிர்கால அறுவடை அமோகமாக அமையும்.

# பேரம் பேசுதல் இல்லாமல் சிறுபான்மைச் சமூகங்களின் அபிவிருத்தி சாத்தியமற்றதே

அன்ரனிபீற்றர்



மனித வாழ்வின் பெரும்பாலான விடயங்கள் பேரம் பேசுதல் முறையிலேயே நடைபெறுகின்றன என்பதை எமது நடைமுறைச் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் இலகுவாகப் புரிந்துகொள்ள இயலும். ஒரு திருமணத்தை முடிவு செய்வதாக இருந்தாலென்ன, தொழில், கொடுக்கல் வாங்கல், வர்த்தகம், அரசியல், கல்வி, சுகாதாரம் சமய சம்பந்தமான செயற்பாடுகள் என்பவற்றில் பேரம்பேசுதல் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். இவ்வளவு வேலை செய்தால் இவ்வளவு கூலி, இன்ன விலைக்குத்தான் இன்ன பொருளைத் தரலாம், எங்கள் கட்சியை ஆதரித்தால் இன்ன இன்ன வசதிகளைப் பெற்றுக் கொடுப்போம், இவ்வளவு பாடமும் கற்க வேண்டுமானால், இவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும், என்ன வருத்தம் உள்ளது என்று ஆலோசனை சொல்ல இவ்வளவு பணம் அறவிடப்படும், இந்த மதத்துக்கு மாறினால் இப்படியான சலுகைகள் உண்டு என்ற விதத்தில் எங்கும் எல்லாம் பேரம் பேசுதல் மயமே.

**பேரம் பேசுதலில் தோல்விகளே பின்னடைவு**

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் கல்வி அறிவிலே உயர்ந்தவர்களாக இருந்தார்கள். தன்மான, வீரர்களாகவும் இருந்தார்கள். சட்டநுணுக்கங்களைத் தெரிந்திருந்தார்கள். பெரும்பான்மையினரைப் போல சமத்தவமாக வாழும் உரிமையைக் கோரினார்கள். ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஆனாலும் இணங்கிப் போதல் இழுக்கு; சட்டப்படி பெற்றே தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற அரசியல் செருக்கு எம்மிடையே காணப்பட்டது என்று கூடச் சொல்லலாம். இப்படியான நிலையே அரசியல் போக்காக அமைந்திருந்தது. அரசியல் ரீதியாகச் சிந்தித்தார்களே ஒழிய, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்தது. எதிர்ப்பு அரசியல் மூலம் அரசுகள் தாம் நினைத்ததை தமிழ்ப் பிரதேசங்களில் செய்தார்களே அன்றி, தமிழ்த் தலைவர்கள் பேரம்பேசி எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை. (அரசுடன் இணைந்திருந்தவர்கள் ஓரளவு திட்டங்களைச் செய்திருந்தார்கள்) இன்றும்கூட, இந்த இணக்க அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புக்கள் இருந்து கொண்டே இருக்கின்றன.

**பேரம் பேசுதல் மூலமே உலக அரசியல் நடப்பும்**

ஒரு நாடோ அல்லது ஒரு அரசோ தமது நாட்டுக்கான அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்ள செல்வந்த நாடுகளுடன் பேரம் பேசியே ஒப்பந்தங்களைச் செய்து தமது பொருள்களை அவர்களுக்கு விற்றோ அல்லது தமது நாட்டுக்கு அவர்களின் பொருள்களை கடனாகப் பெற்றோ வருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளன. தமது எதிர்ப்பையோ, ஆதரவையோ வல்லரசு நாடுகளுக்குத் தெரிவித்தோ, தத்தமது நாட்டை முன்னேற்றப் பாதையில் பயணிக்க வைக்க தமது இணக்கத்தை தெரிவித்து அல்லது உருவாக்கி மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு அரசியல் செய்கின்றார்கள். இவ்வாறு உள்நாட்டு அரசியலும், கட்சிகளும், அரசும், அல்லது அரசும் சிறுபான்மை மக்களும் அல்லது கட்சிகளும் மக்களும் ஓர் இணக்கப்பாட்டுடனேயே தமது அரசியல் பணிகளை முன்னெ டுக்கின்றனர்.

**தமிழ்க் கட்சிகளும் தலைவர்களும்**


இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியின் பின்னர் தொடங்கி இன்றுவரை தமிழ்த் தலைவர்களும் கட்சிகளும் ஒன்றுபட்டு நீண்டதொரு கால இடைவெளிக்குத் தமது அரசியல் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்காத நிலைகளும் நாடாளுமன்றம் செல்வதுதான் அரசியல் உரிமை என்பதுபோலச் செயற்பட்ட நிலைகளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவே நெடுங்காலம் எதிர்ப்புக்களை, பிரச்சினைகளை, பாதிப்புக்களை எடுத்துக் கூறிக் கொண்டு இருந்தார்களே ஒழிய, பிரதேச அபிவிருத்திக்கு இவர்களால் ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுக்கவோ, அரசை வலியுறுத்தி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவோ முடியாமல் இருந்தது. அரசுடன் இணக்கப்பாடின்மையால் இவர்களின் கோரிக்கைகளை அரசு,தான் விரும்பினால் செய்ததே ஒழிய இவர்களின் கோரிக்கைகள் கோரிக்கைகளாகவே இருந்தன. இது எமது பிரதிநிதிகளின் விடாப்பிடியான போக்கினால் உருவானவைகளே. (அரசுடன் சேர்ந்து சில கட்சிகளின் பிரதிநிதிகள் சில காலங்கள் செயற்பட்டார்கள் . அப்போது அரசுகளின் உதவித் திட்டங்கள் இவர்கள் மூலமாக முன்னெடுக்கப்பட்டன என்பதும் நோக்கற்பாலதாகும்)

**இன்றும் இனியுமுள்ள நிலை**

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே இன வேற்றுமை, பெரும்பான்மை இனம், பெரும்பான்மைச் சமயம் என்ற வகையிலே சிங்கள பௌத்தமே அரசியல் அதிகாரத் தலைமைகளாக மாறி மாறி ஆட்சி செய்து வந்துள்ளன. தமிழர், முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்தாலும், முஸ்லிம்கள் மாறி மாறி வந்த அரசுகளுடன் இணைந்து பேரம் பேசியே தமது பிரதேசங்களையும் தமது மக்களையும் வளர்த்து வருகின்றமையும் நோக்கத்தக்கதாகும். ஆனால் தமிழ்த் தலைமைகள், பிரதிநிதிகள், குரல் கொடுப்பதோடு மட்டும் எதிர்ப்பு அரசியல் நாடாளுமன்ற பதிவுகளைச் செய்தார்களே ஒழிய, அவர்களால் மக்களுக்குச் சேவை செய்ய முடியாமல் தமக்குக் கிடைக்கும் சிறுதொகை ஒதுக்கீடுகளால் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாமலே காலங்கள் கழிந்தன. ஆக, இன்றுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக, நல்லாட்சி என்னும் இருபேரினவாத கட்சிகளும் இணைந்து ஆட்சி செய்யும் அரசுக்கு, இணக்கப்பாட்டுடனான நிபந்தனையுடனான ஆதரவை புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளுக்கும் வழங்குகின்றது. இது சரி பிழை என்பதற்கு அப்பால் இனி வருங்காலத்தில் எந்த அரசுடனும் தமிழ்க் கட்சிகள் பெரும்பான்மைப் பலத்துடன் எம்மினத்தின் எம் பிரதேசத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் பேரம் பேசுதலுடனான இணக்கப்பாட்டு அரசியல் மூலமே (சரணாகதி அரசியல் அல்ல) எமது பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுப்பதன் மூலமாக, தவறவிடப்பட்ட அபிவிருத்தியை விவேகத்துடனும் சட்டமுறைமைகளுடனும் முன்னெடுப்பதின் மூலமே நிறைவேற்று வார்கள். எதிர்க்க வேண்டிய வேளைகளில் எதிர்க்கவும் ஆதரவு கொடுக்கவேண்டிய வேளைகளில், ஆதரவு கொடுப்பதன் ஊடாக எம் பிரதேசங்கள் பாதுகாக்கப்படவும், எமது மொழி, மக்களின் தொழில்துறைகள் வளர்ச்சி பெறவும் பேரம் பேசும் அரசியல் முன்னெடுப்புகளாலே முடிவுமென்ற நிலை தமிழ் மக்களிடமும் உருவாகும் போதே இவைகள் சாத்தியமாக முடியும். வேற்றுமைகள் அல்ல. ஒற்றுமையே உயர்வுக்கு வழியாகும்.

சேரலாதன்

# வெற்றிக்கு வித்திடும் நம்பிக்கை



மனிதன் எதை நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. நம்பிக்கை என்பது மனிதனின் வாழ்வில் மிக முக்கியமானதொன்று. இதனால்தான் "யானைக்குத் தும்பிக்கை, மனிதர்களுக்கு நம்பிக்கை" என்ற கருத்து உருவானது.

மனித வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வருபவை. ஒருவனுக்கு எப்போதுமே வெற்றி கிடைப்பதில்லை. அதைப்போன்று தோல்வியும் தொடர்கதையாகி விடுவதில்லை. வெற்றி கிடைக்கும்போது குதூகலிப்பதும், தோல்வியைக் கண்டு துவளுவதும் மனிதனின் மாறுபட்ட இயல்புகள். ஆனால் தோல்வியினால் துவண்டு போகின்றவர்கள் தோல்விக்குப் பின்னர் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்து விடக் கூடாது. எமது செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது நம்பிக்கை ஒன்றுதான். நாம் நம்பிக்கையை இழந்துவிட்டால் எல்லாமே இழக்கப்பட்டு விடும்.

### எந்தக் காரியம் குறித்தும் ஈடுபாடும் நம்பிக்கையும் முக்கியம்

நாம் எந்தக் காரியத்தைச் செய்யும்போதும் அதில் ஈடுபாட்டுடன் கூடிய நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஈடுபாடும் நம்பிக்கையும் இணைந்துகொள்ளும்போது வெற்றிக் கனி தானாகவே கைக்குள் வந்துவிடும். பரீட்சையாக இருந்தாலும் சரி, செய் தொழிலாக இருந்தாலும் சரி அதில் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையுடன் களம் இறங்குபவர்கள் ஒருபோதுமே தோல்வியைத் தழுவியதில்லை. ஏனோ தானோவென்ற மனப்பான்மையுடன் நம்பிக்கையையும் இழந்து எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் வெற்றியென்பது குதிரைக் கொம்பாகவே முடிந்துவிடும்.

சிறு வயதில் ரயில் நிலைய நடைபாதையில் தேநீரை அங்குமிங்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்த நரேந்திரமோடிதான் இன்றைய இந்தியப் பிரதமர். தொடரான தோல்விகளைக் கண்டும் துவண்டு விடாது நம்பிக்கையுடன் போராடிய ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்க நாட்டின் அரச தலைவர் பதவியை அலங்கரிக்க முடிந்தது.

மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து அரசியலில் நம்பிக்கையுடன் போராடிய ஆர்.பிரேமதாச நாட்டின் தலைமைப்பொறுப்பை வகித்தார். இவ்வாறு ஏராளமான உதாரணங்களைக் கூற முடியும். நம்பிக்கை என்ற மந்திரம் பலரை வாழ்வின் உச்ச நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.


### தடங்கல்களைக் கண்டு மனம் சோர்ந்துபோவது எம்மில் பலரது வழக்கம்

தமது முயற்சிகளில் சிறு தடங்கல் ஏற்பட்டாலும் எம்மில் சிலர் நம்பிக்கை இழந்து விடுவார்கள். மேற்கொண்டு முயற்சி செய்வதையும் கைவிட்டு விடுவார்கள். இதன் பின்னர் வெற்றி கிடைக்குமென இவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? தோல்வியின் முகம் இவர்களைத் துரத்த ஆரம்பித்து விடும்.

பெற்றோர்கள் சிறுவயதில் இருந்தே தமது குழந்தைகளுக்கு நம்பிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூற வேண்டும். கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் இவர்கள் நம்பிக்கையுடன் களமிறங்கும்போதுதான் வெற்றிகளைக் குவிக்க முடியும். சிறுவயதில் இவர்களின் மனதில் நம்பிக்கை விதைக்கப்படுமாயின், இவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும்போது அது பெருவிருட்சமாக வளர்ந்து பயனைக்கொடுக்கும். ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் இதைச் செய்வதற்குத் தவறி விடுகின்றார்கள். பிள்ளைகளைப் படி, படியென அவர்கள் வற்புறுத்துகிறார்களே தவிர, வெற்றிக்குத் தேவையான நம்பிக்கையை அவர்களிடம் வளர்த்தெடுப்பதற்குத் தவறி விடுகின்றனர். இந்த உலகம் சவால்கள் நிறைந்தது. போட்டியும், பொறாமையும் கொண்ட மனிதர்களைக் கொண்டது. சந்தர்ப்பம் பார்த்து எமது காலை வாரி விடுவதற்கென்றே இங்கு பலர் உள்ளனர். தம்மைத் தவிர வேறு எவரும் முன்னேறி விடக் கூடாது என்பதில் அதீத அக்கறை கொண்டவர்கள் இவர்கள். இவர்களின் செயல்களால் எம்மிடமுள்ள நம்பிக்கை சிறிது சிறிதாகக் கலைந்துவிடும். ஆனால் அதற்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது. எம்மிடமுள்ள நம்பிக்கை தகர்ந்துவிட்டால் எம்மால் எதையும் சாதித்து விடமுடியாது. எமது செயற்பாடுகள் முடக்கப்பட்டுவிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் என்பதை எம்மால் காண முடியாது.

வாஸ்கொடகாமா போன்ற கடலோடிகள் தமது உயிரைத் துச்சமாக மதித்து கடற்பயணங்களை மேற்கொண்டதன் காரணமாகவே இன்று பல நாடுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவர்களின் பயணத்தின்போது, கூடச் சென்ற பலர் உயிரிழந்துள்ளனர். பலர் இடை நடுவில் விலகிச் சென்றுள்ளனர். ஆனால் அவர்களில் ஒரு சிலரே தமது நம்பிக்கையை இழக்காது பயணத்தை தொடர்ந்து தமது நோக்கத்தை நிறைவேற்றியுள்ளனர். நம்பிக்கையை மட்டும் இவர்கள் இழந்திருந்தால் இவர்களின் நோக்கம் நிறைவேறியிருக்க மாட்டாது.

நாட்டில் நீண்ட கொடிய போர் ஒன்று இடம்பெற்ற நிலையிலும் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள் என்றால், அதற்குப் பின்னால் வலுவான ஒரு காரணம் இருக்க வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போரை எதிர்கொள்வதென்பது சாதாரணவிடயமல்ல. விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவை குறைவின்றி இடம்பெற்ற பிரதேசங்களில் இவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தமது கண்முன்னாலேயே உறவுகள் பலரை இழந்திருக்கிறார்கள். சாவு தொடர்பான பயத்துடன் தினமும் வேதனையை அனுபவித்திருக்கிறார்கள். இறுதிப்போரின்போது இவர்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் மிகக் கொடியவை. ஆனால் இவற்றிலிருந்துமீண்டுஇவர்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதென்பது ஓர் இமாலய சாதனை என்றே கூறவேண்டும். இதைச் சாதிப்பதற்கு இவர்களிடம் குடிகொண்டிருந்த வாழ்வின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையே காரணமாகும். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரபல திரைப்பட இயக்குநரான பாரதிராஜா கூறி வார்த்தைகள் இந்த வேளையில் கவனத்தில் கொள்ளத் தக்கவை.



"நான் யாழ்ப்பாணத்தைக் கண்டு வியந்துபோய் விட்டேன். கொடிய போர் ஒன்றுக்கு முகம்கொடுத்த அந்தப் பூமி, இவ்வளவு விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பி விடுமென நான் எண்ணவில்லை. இங்கு வாழ்கின்ற எமது உறவுகளின் மனவுறுதியும் நம்பிக்கையும் பாராட்டுதற்குரியவை" அவரது இந்த வார்த்தைகள் நம்பிக்கையின் பெருமையை எடுத்துக் கூறி நிற்கின்றன.

### நம்பிக்கையுடன் முயல்பவர்கள் தோல்வி காண்பதில்லை

வாழ்க்கையில் நம்பிக்கையுடன் போராடுபவர்களுக்குத் தோல்வி என்பதே இல்லை. மனதில் விரிந்து கிடக்கும் நம்பிக்கை அவர்களை வெற்றிப்படிகளுக்கு அழைத்துச் சென்றுவிடும்.

பெரிய காடுகளில் வாழ்கின்ற கொடிய விலங்குகள் பிற மிருகங்களை வேட்டையாடிப் பசியாறுவதையே தமது வழக்கமாகக் கொண்டுள்ளன. சில வேளைகளில் இரைகிடைக்காது இந்த மிருகங்கள் வாரக் கணக்கில் கூடப் பட்டினியை அனுபவிப்பது வழக்கமாகும். ஆனால் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் இவை தினமும் தமது இரைக்காகக் காத்திருக்கின்றன. அதேபோன்றுதான் கொடிய விலங்குகளால் வேட்டையாடப்படுகின்றன. அப்பாவி மிருகங்கள் தமது உயிருக்கு ஆபத்தெனத் தெரிந்தும் தமது உயிரின் மீதுள்ள நம்பிக்கையால் அந்தக் காடுகளில் வாழ்ந்து வருகின்றன. ஆகவே வாழ்க்கையின் அத்திபாரமே நம்பிக்கைதான் என்பதை நாம் புரிந்துகொண்டு செயற்படவேண்டும். நம்பிக்கையில்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல.

## ஆசிரியருக்கான கடிதம்

# ஜனநாயகத் தேர்தல்களில் வன்முறைகளுக்கு இடமில்லை

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சில வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை வேதனை அளிக்கின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் இடம்பெறுவது வழமையான நிகழ்வேயாகும். அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தொடக்கம் உள்ளூராட்சித் தேர்தல்வரை தேர்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டு மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி பல்வேறு மட்டங்களிலும் தமக்கு விருப்பமானவர்களைத் தெரிவு செய்கின்றனர். இதுவொரு மிகப் பெரிய ஜனநாயகக் கடமையுமாகும்.

ஆனால் இந்தத் தேர்தல்கள் நீதியாகவும் நியாயமாகவும் எவருக்கும் அச்சம் ஏற்படாத வகையிலும் இடம்பெறும்போதுதான் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும்.

வேட்பாளர்கள் தாக்கப்படுவதும் அவர்களது வீடுகள் மற்றும்-வாகனங்கள் சேதமாக்கப்படுவதும், அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதும், பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெறும்போது தாக்குதலில் ஈடுபடுவதும் ஏற்க முடியாத செயற்களாகும். இத்தகைய செயல்கள் ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைத்து விடுமென்பதில் சந்தேகமில்லை. யாழ்ப்பாணத்தில் கூட இத்தகைய சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை இங்குள்ள ஜனநாயக விரும்பிகளை வேதனையுறச் செய்துவிட்டது. பரப்புரை மேடைகளில் பொய்யுரை மேற்கொண்டு மக்களை ஏமாற்றி வாக்குச் சேகரிப்பது கூட ஏற்க முடியாத செயலாகும். பெரும்பாலான அரசியல்வாதிகள் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் இவர்களுக்குத் தமது வாக்குச் சீட்டின் மூலமாக உரிய பதிலை வழங்க வேண்டும்.

அமைதியான சூழ்நிலையில் தேர்தல் இடம்பெறுவதையே யாழ்ப்பாண மக்கள் விரும்புகிறார்கள். இதற்குக் குந்தகம் ஏற்படுவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

பொ.சிவபாதசுந்தம், நெல்லியடி

# மகா சிவராத்திரி
## செய்யவேண்டியதும், செய்யக்கூடாததும்...!

மாசி மாதம் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளையே `மகா சிவராத்திரியாகப் போற்றிக் கடைப்பிடிக்கப்படுகிறது. 'ராத்திரி' என்ற சொல்லுக்கு 'அனைத்தும் செயலற்று ஒடுங்குதல்' என்று பொருள். அதாவது, உயிர்கள் செயலற்று ஈசன் நினைவாக ஒடுங்கும் காலமே சிவராத்திரி.

ஆகவே, இந்த புண்ணிய காலத்தில் சிவனின் திருநாமம் சொல்லி, நான்கு கால பூஜைகள் செய்து வழிபடுவது விசேஷம்.


இந்த நாளின் மூன்றாம் காலத்தில் ஈசனை வழிபட்டால் எத்தகையப் பாவங்கள் செய்திருந்தாலும் அது எம்மை விட்டுவிலகிப் போகும். இதனால், இந்த ஜென்மம் மட்டுமல்லாது மறுஜென்மத்திலும் நிறைவான வாழ்வையும் பெற முடியும் அந்த அளவிற்கு மகத்துவம் மிக்க நாள் அது.

அத்தகைய நாளில் என்ன செய்ய வேண்டும்... என்ன செய்யக்கூடாது என்பது குறித்துப் பார்ப்போம்



### சிவராத்திரி விரதம் இருப்பது எப்படி?

1. முதல் நாளன்று ஒரு வேளை உணவு உண்டு, சுகபோகங்களை தவிர்த்து, மனதார சிவனை நினைத்து வழிபடவேண்டும்.
2. சிவராத்திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதயத்தின் போது காலையில் செய்ய வேண்டிய பூஜைகளை செய்து முடிக்க வேண்டும்.
3. அதன் பின்னர் சிவாலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்யலாம்.
4. ஆலய தரிசனம் முடிந்து வீட்டுக்கு வந்தவுடன், அங்கு சிவராத்திரி பூஜைக்கு உரிய இடத்தைச் சுத்தம் செய்து, மாலை, தோரணங்கள் ஆகியவற்றால் அலங்காரம் செய்ய வேண்டும்.
5. பகலில் நீராடி, உச்சி கால பூஜைகளை முடித்துவிடவேண்டும்.
6. அதன் பின், ஆலயத்திற்கு சென்று அங்கு நடைபெற வேண்டிய சிவராத்திரி பூஜைக்காக , மலர்கள், பழங்கள், இளநீர் முதலானவற்றில் இயன்றவற்றை தந்து வீடு திரும்பவேண்டும்.
7. வீடு திரும்பியதும் மறுபடியும் நீராடி, மாலை நேர பூஜைகளை முடித்துவிட்டு, ஏற்கெனவே தூய்மை செய்து அலங்கரிக்கப்பட்ட இடத்தில் ஓர் உயர்ந்த பீடத்தில் சிவலிங்கத்தை வைத்து நான்கு ஜாமங்களிலும் பூஜை செய்யலாம்.
8. இந்த நான்கு கால சிவபூஜையில் அந்தெந்த பூஜைக்கேற்றவாறு வஸ்திரம், மலர்கள், மாலை, நைவேத்தியங்களை லிங்கத்திற்கு படைத்து பூஜை செய்ய வேண்டும்.




2009 - தொடர்பாடல் செய்மதிகளான இரிடியம்- 33, கொஸ்மொஸ் 2251 விண்சுற்றுப் பாதையில் ஒன்றுடன் ஒன்று மோதி இரண்டும் அழிவடைந்தன.

### சிவனுக்கு உகந்த ஐந்து சிவராத்திரி

**மகா சிவராத்திரி:** மாசி மாதத்தில் தேய்பிறையில், கிருஷ்ணபட்ச சதுர்த்தசி அன்று வருவது மகா சிவராத்திரி எனப்படும். அன்றைய தினம் விரதம் இருப்பவர்கள் முக்தியை அடைவார்கள் என்பது இதற்கான பலனாகும்.

**யோக சிவராத்திரி:** திங்கட்கிழமை முழுவதும் வரும் அமாவாசையானது யோக சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது.

**நித்திய சிவராத்திரி:** ஆண்டின் 12 மாதங்களிலும் வரும் தேய்பிறை சதுர்த்தசி 12, வளர்பிறை சதுர்த்தசி 12 என இருபத்து நான்கு சிவராத்திரிகளும், நித்திய சிவராத்திரி எனப்படும்.

**பட்ச சிவராத்திரி:** தை மாதத்தில் தேய்பிறையில் வரும் பிரதமை திதியில் இருந்து 13 நாள் வரையில், நியமத்துடன் ஒரு பொழுது மட்டும் உணவு உண்டு, 14வது நாளான சதுர்த்தசி அன்று உபவாசம் இருப்பது பட்ச சிவராத்திரியாகும்.

**மாத சிவராத்திரி:** மாதம் தோறும் அமாவாசைக்கு முன்தினம் வரும் சதுர்த்தசி திதியில் வருவது மாத சிவராத்திரி ஆகும்.



### வரலாற்றில் இன்றைய தினம் 10.02.2018

1258 - பாக்தாத் மொங்கோலியரிடம் வீழ்ந்தது.
1870 - நியூயோர்க் நகரில் வைஎம்சிஏ உருவாக்கப்பட்டது.
1940 - கிழக்குப் போலந்திலிருந்து சைபீரியாவுக்குப் பெருமளவு போலந்துப் பிரஜைகளை சோவியத் ஒன்றியம் நாடு கடத்தத் தொடங்கியது.
1964 - வானூர்தித் தாங்கிக் கப்பலான எச்.எம்.எஸ்., போர்க் கப்பலான வொஜேயர் நாசகாரி கப்பலுடன் மோதி மூழ்கியதில் 82 பேர் உயிரிழந்தனர்.
1984 - வடகிழக்கு கென்யாவில் 5 ஆயிரம் வரையான சோமாலியர்களை வெட்டிச் சாய்த்து கென்யப்படையினர் மிக மோசமான மனித உரிமை மீறலை மேற்கொண்டனர்.

### நாளை

**11.02.2018**

ஞாயிற்றுக்கிழமை

**தை - 29**

திதி: ஏகாதசி மு.இ. 07.46
நட்சத்திரம்: மூலம் பி.இ. 07.46 வரை
சுபநேரம்: 09.34–11.04 வரை
ராகுகாலம்: 05.04–06.34 வரை

## பத்தி எழுத்து

### புத்தபிரானும் இவர்களை மன்னிக்கமாட்டார்

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் சிங்கள மக்களும் பிரியங்க பெர்னாண்டோவை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டுமென பௌத்த தேரர் ஒருவர் கூறியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

லண்டனில் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்த புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களைப் பார்த்து கழுத்தை அறுத்துக் கொன்று விடுவேன் என அங்குள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றும் பிரிகேடியர் பிரியந்த பெர்னாண்டோ சைகை மூலமாக அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இது காணொலி மூலமாக உலகெங்கும் பரவிப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. பிரிட்டனில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு குறிப்பிட்ட பிரிக்கேடியரை நாடு கடத்துமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அவரை உடனடியாகவே நாடு திரும்புறுமா அறிவுறுத்தியது. இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் நாடு திரும்பினார், ஆனால் அரச தலைவரின் உத்தரவின் பிரகாரம் பிரியங்க பெர்னாண்டோ மீண்டும் லண்டன் சென்று தமது பதவியில் இணைந்து கொண்டார். இதற்குக் கடுமையான எதிர்ப்பு தற்போது கிளம்பியுள்ளது. இந்த நிலையில்தான் பௌத்ததேரரின் மேற்படி சர்ச்சைக்குரிய கருத்து வெளியாகியுள்ளது. இதன் மூலமாக மற்றவர்களின் கழுத்தை அறுத்துக் கொலை செய்வதை இந்தப் பௌத்ததேரர் ஏற்றுக் கொள்கின்றார் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

புத்தபெருமான் அகிம்சையின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர். அன்பையும் கருணையையும் போதித்தவர். ஆனால் இவரது வழியைப் பின்பற்றி நடப்பதாகக் கூறும் பௌத்ததேரர்கள் போரை ஊக்குவிப்பதும் இனவாதத்தைக் கக்குவதும் மக்களின் மனதில் குரூரமான உணர்வுகளைத் தூண்டுவதும் ஏற்கத்தக்கதல்ல.

இந்த நாட்டின் இனப்பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்து நிற்பதற்கு பௌத்ததேரர்களும் முக்கிய காரணமாக விளங்குகின்றனர். தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட போது அவை கிழித்தெறியப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களும் இந்தத் தேரர்கள்தான்.

அவர்களின் செயல்களை புத்தபிரான் கூட மன்னிக்க மாட்டார். தமது பெயரைக் கூறிக் கொண்டு இவர்கள் புரிகின்ற அக்கிரமங்களை அவரால் எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்?

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.01.2018
வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவி

அமரர்
## சாந்தநாயகி தணிகாசலம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.02.2018) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்க-ளும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்-தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்

528, 151/1, பலாலிவீதி,
திருநெல்வேலி.

(CS/13715)(11,17)

குடும்பத்தினர்.
077 762 4475



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF AGRICULTURE,
## ARIVIYAL NAGAR, KILINOCHCHI

University of Jaffna will entertain applications up to **22.02.2018** from qualified persons for the under mentioned posts **on Temporary basis**.

**FACULTY OF AGRICULTURE**

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator **in Animal Science/ Agricultural Biology/ Agricultural Chemistry**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator **in Accounting/ Commerce/ Financial Management/ Human Resource Management/ Marketing**

**FACULTY OF SCIENCE**

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in **Botany/ Chemistry/ Physics / Zoology / Fisheries**
Temporary Assistant Lecturer / Temporary Instructor in **Mathematics/ Statistics / Computer Science**
Temporary Instructor in **Computing**

**Qualification:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator only.**

**Salary Scale**

Temporary Assistant Lecturer Rs. 40,324 p.m (Fixed)
Temporary Demonstrator Rs.33,100p.m (Fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** position should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
**08.02.2018**

(CS/31894)(10)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
## பல்கலைக்கழக அனுமதி - 2017/2018

- நுண்கலைமாணி(சங்கீதம்)
- நுண்கலைமாணி(நடனம்) / (பரதநாட்டியம் )
- நுண்கலைமாணி(சித்திரமும் வடிவமைப்பும்)

**ஆகியவற்றில் இளநுண்கலைமாணிப் பட்டப்படிப்புகளைப் பயில்வதற்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்பு மற்றும் செயல்முறைப் பரீட்சைகள்.**

- மேற்படி நான்கு வருடப் பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 21.02.2018 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நியந்தனைகள்**
**அனுமதிக்கான தகைமைகள்**

- சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனு மொன்றைத் தெரிவுசெய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2017ஆம் ஆண்டு நடை பெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவுசெய்ய விரும்பும் பட்டபாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல் லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

- மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள் ளடங்கிய பரீட்சைக்கு (AptitudeTest) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தோற் றுதல் வேண்டும்.
- இப்பரீட்சைகள் 21.03.2018 திங்கள் தொடக்கம் பத்து நாள்கள்வரை நடைபெறும்.

**விண்ணப்பங்களைசமர்ப்பித்தல்**

- விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்து தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ஏதாவது. ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. **1621 0016 0000 880** இற்கு ரூபா 300/= செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப் படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லதுபெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப் பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23 cmx10cm அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை / நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.
- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 21.02.2018 ஆம் திகதிக்கு முன்ன தாக **சிரேஸ்ட உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரங்களின் உறுதி செய்யப் பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதியில் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### இராமநாதன் நுண்கலைக்கழகம்
### பல்கலைக்கழக அனுமதி – 2017 / 2018
### இளநுண்கலைமாணி

### உளச்சார்பு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம்

- விண்ணப்பிக்கும் பாடநெறி: (தெரிவிற்கு√ இடுக)
- இசை ☐ / நடனம் ☐ / சித்திரமும் வடிவமைப்பும் ☐

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசிய அடையாள அட்டையிலக்கம்:-

நிரந்தரமுகவரி (ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-

2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2017:-

சுட்டிலக்கம்: Z புள்ளி:

பொதுச்சாதாரணபரீட்சைப்புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:
முகவரி: (ஆங்கிலத்தில்):-

**சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்:**

1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2011 க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விவரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

......................
திகதி

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.**

திகதி..................

**பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.**
(பதவி முத்திரை பதிக்கவும்)

(IN/5823)(10)

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் மனோகரன்



கோப்பாய் வடக்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மயில் வாகனம் மனோகரன் கடந்த (07.02.2018) புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிறிபாலராணி (வதனி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுஜிகரன் மற்றும் மதுரிக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் ருக்குமணி, பத்மாவதி, மகேந்திரன், புஸ்பராணி, தவேந்திரன், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் வதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகராணி, நாகராசா, சிறிபாலக்கிஸ்ணன், சிறிக்காந்தன், சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2018) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 0774561280 (AJA 9383/15/17) தகவல்: சோமசுந்தரம், நாகேந்திரராசா, நாகராசா

---



மலர்வு 06.10.1959 — உதிர்வு 01.02.2018

### திருமதி அனுசா சௌதாமினி சர்வாநாதன்
(அனுஷா ரீச்சர்)

யாழ்.நாரந்தனை வடக்கு, பெரியபுலம் வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் முத்திரைச்சந்தையை வசிப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுசா சௌதாமினி சர்வாநாதன் 01.02.2018 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யேம்ஸ் - றுத்து தம்பதிகளின் அன்பு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான அருமைநாதன் - றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சர்வாநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஆரணி, ஆரபி, ஆரிகா, குகானி ஆகியோரின் ஆருயிர்த் தாயும், யனேந்திரன், ஞானேந்திரன், பாலேந்திரன், யூரேந்திரன், அகிலாவதி, குமரேந்திரன், றூபாவதி, கிரிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இளங்குபேரன், கார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தவநாதன், நித்தியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அகனன், அயிலகி, தியானகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை லண்டனிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக City of London Cemetery of Crematorium Aldersbroch Rd. Monor Park, London E12 500.-UK இற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை, ஊர்காவற்றுறை. (CS/13746)(11,17) தகவல்:- நாதன்

---

### சதாசிவம் மார்க்கண்டேயர்
(முன்னாள் ஆசிரியர் - யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)



யாழ் சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பையும் நைஜீரியாவையும் வசிப்பிடமாகவும் மார்க்கம் கனடாவை வதிவிடமாகக் கொண்டவரும் "மார்க்" கல்வி நிலையத்தின் அதிபருமான சதாசிவம் மார்க்கண்டேயர் 06.02.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் 'சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயலஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கனடாவில் வாழும் நேசமணி தம்பதிகளின் மருமகனும் இலங்கையில் வசிக்கும் ஜெகநாதன், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்(மலேசியா), செல்லமுத்து(இலங்கை), சீனிவாசகம்(இலங்கை), பூலோகசிங்கம்(மலேசியா), குமாரசிங்கம்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சன், மோகன், பாரதி, யுவா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானி, தர்ஷினி, ஆத்மி, ஜெய் ஆகியோரின் மாமனாரும் சாயகி, அரன், டிலன், டரன், ஆஷா, அக்ஷ்யன், சித்தாரா, லீலா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விவரம்

**பார்வைக்கு :**
ஞாயிறு 11.02.2018 5.00pm to 9.00pm
திங்கள் 12.02.2018 8.00am to 9.00am
Chapel Ridge Funeral Home
8911 Woodbine Avenue
Markham, ON,L3R 5G1

**கிரியைகள் :**
திங்கள் 12.02.2018 9.00am to 10.45am
Chapel Ridge Funeral Home
8911 Woodbine Avenue
Markham, ON,L3R 5G1

**தகனம் :** திங்கள் 12.02.2018 11.15am to 11.45am
Highland Hills Crematorium
12492 Woodbine Avenue, Gormley, ON,L0H 5G0

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், மாணாக்கர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரஞ்சன் +1(416)7161293 / மோகன் +1(416)4505027
பாரதி +1(416)8173655 / யுவா +1(416)9393425
சிவகுருநாதன் +94(21)2211919

(CS 13726) (14,17)

---

## ஈர விழிகளுடன்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 06.08.1990 — ஆண்டவன் அடியில் 11.01.2018

### திருமதி சிவரூபி தர்சன் வெலிங்டன்

*மாறாது உன் தூய அன்புச் சிரிப்பு*
*வாராது கோடி கொடுத்தாலும் உன் அன்பு*
*பாசமாய் எம்முடன் பழகி*
*நெஞ்சு நிறைந்த நேசத்தை எமக்களித்து*
*இன்புற்றிருந்த வேளை வாழ்ந்தது போதுமென்று*
*வானகம் சென்றதேனோ....? உன் பிரிவு எம்மை வருத்துதடி*
*நெஞ்சுக்குள்ளே மூச்சு முட்டுதடி*
*மீளாத்துயில் கொண்டவளே - உன்*
*ஆத்மா சாந்தியடையட்டும்.*

கல்லடி மூட்டு ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CS 00323)(14.17)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலேஸ்வரி பத்மலிங்கம்



மண்ணுலகில் 19.08.1943 விண்ணுலகில் 07.02.2018

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி பத்மலிங்கம் 07.02.2018 புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செம்பொற்சோதி தம்பதிகளின் அன்பு மருமகளும், க.பத்மலிங்கத்தின் (பட்டு) அன்பு மனைவியும், யோகேஸ்வரன், மதிவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகம்மா, சுந்தரலிங்கம், சண்முகலிங்கம் காலஞ்சென்ற மனோகரி ஆகியோரின் மைத்துனியும், முகுந்தன் (இந்தியா), அரவிந்தன் (மைக்கல் - டென்மார்க்), அகிலன் (பிரான்ஸ்), பாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுசா, பூரிணிமா, ரவிக்குலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரவீனா, அஜேய், சந்தோஸ், யஸ்வின், சச்சின், சர்வின், தஸ்வின், அஞ்சலி, மாயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுஜாதா, லாவன்யா, சரவணப்பிரியன் ஆகியோரின் பெரியம்மாவும், மயூரன், காயத்திரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் செங்குந்தா வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
0770461396

---

### திருமதி அருந்ததி இராஜதுரை
(நேசமணி)



மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி இராஜதுரை 06.02.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் பாச மிகு சிரேஸ்ர புத்திரியும், காலஞ்சென்ற கதிரவேலு இராஜதுரை யின் அன்பு மனைவியும், தங்கராசா, அரியமணி, காந்திமலர், மகேந்திரராசா, தங்கமலர் ஆகி யோரின் அன்புச் சகோதரியும், இராஜகாந்தன், நேசகாந்தினி, இராஜசூரியர், இராஜசங்கர், இராஜசேகர் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவபாதலிங்கம், ஞானமலர், சுலோஜனா, மைதிலி, ரசிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், சோனியா, ஜெசிக்கா, சரண்ராஜ், சாகித்தியன், டினோஜன், லக் ஷிகா, ஆதித்தன், லம்போகரன், துளசிகன், சுவேதா, பாணுஜன், கபிலன், திலக்சிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதடவுல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய்,
வடகிழக்கு, மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

077 684 5842

---


## வேலைவாய்ப்பு

பயிற்சி பெற்ற **தாதியர்** தேவை
077 873 0129

## வேலையாள்கள் தேவை

யாழ். தட்டாதெருச் சந்தியிலுள்ள **பூங்கன்று** விற்பனை நிலையத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
917, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு, ஆசிரியர்கள் தேவை. மானிப்பாய், சுன்னாகம், ஆவரங்கால், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பாட சாலைகளில் கற்பிக்க கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(1375,16,17)
077 468 2951, 077 408 3656

## HOTELROLEX
## வேலையாள்கள் தேவை

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- பார்சல் கட்டுபவர்கள்

(தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் மட்டும்)
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்
077 907 9888/021 222 2808

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் சகல அடிப்படை வசதிகளையும் உள்ளடக்கிய ஆறு அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு வழங்கப்படும்.
நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் பிற்கல் 1 மணிக்கும் இடையில் நேரில் வந்து பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு: 077 111 9733 (CS/13732) (10)

## பெயர் மாற்றம்

இன்றிலிருந்து எனது அனைத்து ஆவணாங்களிலும் எனது பெயரை வ.முகுந்தராஜ் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக் கமைவாக உறுதி செய்துகொள்கின்றேன்.
தகவல்:
வ.முகுந்தராஜ்
(AKN/371) (10)

## சட்டமாணி அனுமதிப் பரீட்சை - 2018

போட்டிப் பரீட்சையில் ஆங்கிலம் சார் Case Law எதிர்பார்க்கப்படுவதினால் சட்டத்துறைசார் நிபுணத்துவ வழிகாட்டல்.
சட்டக்கல்லூரி அனுமதிக்கான சிறப்பு வழிகாட்டல்
ஆரம்பம் - 11.02.2018 - 3.00 Pm
077 982 4284
DCM கல்லூரி (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

## ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | | 8 | 2 | 9 | 3 |
| | | | | 3 | | 7 | | |
| | | 8 | | 1 | 2 | | | |
| 1 | 4 | | 3 | 2 | 5 | | | 7 |
| 2 | 9 | | | | 7 | 1 | | |
| | 8 | | | 9 | | | | 2 |
| 4 | | | | 5 | | | 2 | |
| | | 1 | | | | | | |
| | | 2 | 6 | | 9 | | 5 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 7 | 1 | 9 | 3 | 2 | 6 | 8 |
| 8 | 3 | 1 | 2 | 6 | 7 | 5 | 9 | 4 |
| 6 | 9 | 2 | 5 | 8 | 4 | 1 | 7 | 3 |
| 3 | 6 | 8 | 4 | 5 | 1 | 9 | 2 | 7 |
| 2 | 7 | 5 | 9 | 3 | 6 | 4 | 8 | 1 |
| 4 | 1 | 9 | 7 | 2 | 8 | 6 | 3 | 5 |
| 9 | 8 | 3 | 6 | 4 | 5 | 7 | 1 | 2 |
| 7 | 5 | 6 | 3 | 1 | 2 | 8 | 4 | 9 |
| 1 | 2 | 4 | 8 | 7 | 9 | 3 | 5 | 6 |

நேற்றைய விடை

## சிந்தனைக்கு...

ஒரு பள்ளி சிறுவன் உணவு இடைவேளை விடும்போது தன்நண்பர்களுடன் அமர்ந்து சாப்பிடுவதை வழக்கமாக கொண்டிருந்தான். ஏனைய சிறுவர்கள் பேசிக்கொண்டும் தமக்குள்ள சண்டை போட்டுக்கொண்டும் உணவை கீழே சிந்திக் கொண்டும் சாபிட்டார்கள்.

அவர்கள் அதை பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் இந்தச்சிறுவன் அமைதியாக ஒரு பருக்கை கூட கீழே சிந்தாமல் கவனமாகச் சாபிட்டான். ஒன்றிரண்டு சோற்று பருக்கை டிபன் தூக்கில் ஒட்டி கொண்டு இருந்தாலும்அதையும்எடுத்துசாப்பிட்டுவது அவன் பழக்கம்.

இதை பார்த்த அவன் நண்பர்கள் அவனை "பிச்சைகாரன்" என்று கேலி செய்தனர். அவன் அதற்காக கவலைப்படவில்லை. இதைகூர்ந்துகவனித்த அவன்நண்பனொருவன்ஒருநாள் இதைபற்றிகேட்டபொழுது அந்த சிறுவன் அதற்கு பின்வருமாறு விளக்கம் கொடுத்தான்.

"இதோ பார் நண்பா ..நான் ஒரு பருக்கைக் கூட வீணாகாமல் சாப்பிடுவது என் பெற்றோர்களுக்குநான்காட்டும்மரியாதை. என் அன்னைஅதிகாலையில்எழுந்துகுளிர்பனி என்று பாராமல் எனக்கு பிடித்த உணவை அன்புடன் செய்து கொடுத்து என்னை பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார். என் தந்தை இரவு பகல் என்று பாராமல் வெளியே உழைத்து வீட்டை நடத்தி செல்ல பொருள் ஈட்டி கொண்டு வருகின்றார்.

அதுமட்டும்அல்ல. நாம்கீழேசிந்திவீணாக்கும்ஒவ்வோர்பருக்கையும்எம்தாய்தந்தையரோடு.மழைவெயில்பாராதுதனதுநெற்றிவேர்வை நிலத்தில் விழப் பாடுபடும் விவசாயிகளையும் அவமதிப்பதாகும். உலகில் எவ்வளவோ பேர்கள் உண்ண உணவில்லாது அவதிபடுகிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நான் சிறிது கூட சிந்தாமல் வீணாகாமல் சாப்பிடுகிறேன்" என்று பதில் அளித்தான்.

*நாம் எல்லோரும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம்தான்..*



## 'பியார் பிரேமா காதல்' போஸ்டர் இன்று ரிலீஸ்

புதுமுகஇயக்குநர்இளன்இயக்கத்தில்பிக்பாஸ்பிரபலங்கள் ஹரிஸ் கல்யாண் மற்றும் ரைசா வில்சன் நடிப்பில் உருவாகிவரும் 'பியார் பிரேமா காதல்' படத்தின் போஸ்டர் ஒன்றை இன்று திரைக்குவிட படக்குழு முடிவு செய்துள்ளது.

காதல் கலந்த நகைச்சுவைப் படமாக இந்தப் படம் உருவாகிவருகிறது. யுவன் இசையமைக்கிறார். காதலர் தினத்தை முன்னிட்டே இந்தப் போஸ்டர் வெளியிடப்படவுள்ளது என்று படக்குழு அறிவித்துள்ளது.

எந்தநேரமும் போன
நோண்டறது... டிவி பாக்கிறது
படவா....படிடா...



நவரச ரசனையுடைய பொண்ணு
வேணும்னு தேடி அலையுறவனுக்கு...



புளிரசம் கூட ஒழுங்கா வைக்கத்
தெரியாத பொண்டாட்டிதான்
அமைவா... விதி வலியது...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிறரை நம்பி எவருக்கும் வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் உழைப்பு அவசியம். சராசரி பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவீர்கள். நண்பரின் ஆலோசனையால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு பெருமிதம் காண்பீர்கள். சுபநிகழ்வு நடத்தும் சூழல் குடும்பத்தில் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புகழ் பெறுவீகர்கள்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய இனங்களில், திடீர் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** முக்கிய பணி ஒன்றை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுப்படுத்தி உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும்.

**கன்னி:** பூர்வபுண்ணிய நற்பலன் துணை நிற்கும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும்.உபரி பணவருமானம் வந்து சேரும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**துலாம்:** போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில்,வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். இலாபம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும்.

**தனுசு:** இரக்க குணத்தால் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. குறைந்த அளவில் பணவரவு இருக்கும்.

**மகரம்:** தொல்லை கொடுத்தவர், இடம் மாறிப் போகிற சூழ்நிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் திருப்தியளிக்கும்.

**கும்பம்:** உங்கள் மனதில் ஆன்மிக எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி, தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.

எங்களுக்கு ஒரு பெண்
இரண்டு சன்



ஆனால் இப்பொழுது
கைகொடுப்பதோ பென்சன்



# அறிவுரைகள் என்பவை முடிவுகள் அல்ல

ஒரு குதிரையும் அதன் குட்டியும் தாம் வாழும் கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குச் செல்ல நினைத்தன. குதிரை முதலில் தனது குட்டியை மற்றக் கிராமத்துக்குப் போகும்படி கூறியது. குட்டியும் புறப்பட்டுச் சென்றது. குட்டி செல்லும் வழியில் ஒரு சிறிய ஆறு இருந்தது. அந்த ஆற்றில் இறங்கிச் செல்ல குட்டி பயந்தது.

அது அங்கே ஆற்றின் ஓரமாக நின்ற எருதைப் பார்த்து "எருதுமாமா இந்த ஆற்றினை என்னால் கடக்க முடியுமா?" என்று கேட்டது. அதற்கு எருது "ஆற்றினை உன்னால் கடக்க முடியும். நான் நேற்று ஆற்றைக் கடந்த போது நீரின் ஆழம் முழங்கால் வரை இருந்தது" என்றது. இதனைக் கேட்ட குட்டி ஆற்றில் இறங்க முயற்சித்தது. அப்போது அங்கே மரமொன்றில் இருந்த அணில் "ஓ! ஆற்றில் இறங்காதே! நீர் ஆழமானது. எனது நண்பன் ஒருவன் நேற்று இதில் மூழ்கிப் போனான்" என்றது. இதனைக் கேட்ட குட்டி ஆற்றில் இறங்கும் எண்ணத்தைக் கைவிட்டது. எருது ஆற்றில் இறங்கலாம் என்றது. அணிலோ இறங்குவது ஆபத்து என்கிறது. இதில் உண்மை எதுவாக இருக்கும் என்று சிந்தித்தது. அதனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. இதனால் உண்மையை அறியத் தாயிடம் ஓடிச் சென்றது.

குட்டியைக் கண்ட குதிரை "ஏன் திரும்பி வந்து விட்டாய்" என்று கேட்டது. அதற்கு குட்டி "அம்மா! வழியில் ஆறு ஒன்று இருந்தது. அதனை நான் இறங்கிக் கடந்து செல்ல நினைக்கையில் அங்கிருந்த எருதும் அணிலும் ஆற்றின் ஆழத்தைக் குறித்து சொன்னவைகளில் எனக்குச் சந்தோகம் இருக்கிறது. உண்மையை அறிந்து போகவே திரும்பி உங்களிடம் வந்தேன்" என்றது. ஆறு ஆழமானதா? உன்னால் அதனைக் கடக்க முடியுமா? என்பதை அவர்கள் இருவரும் கூறியவற்றைக் கொண்டு நீயாகவே அறிய முயற்சிக்கவில்லையா?" என்று கேட்டது குதிரை. "சிந்தித்தேன். ஆனால் எனக்குப் புரியவில்லை" என்றது குட்டி.




எருதின் உயரமும் பருமனும் ஆற்றைக் கடக்கும் வகையில் இருந்தன. ஆனால் அணிலின் பருமனும் உயரமும் சிறிதாகையால் அது ஆற்றினுள்ளே மூழ்கி விடும். இவை ஒவ்வொன்றும் எருதினதும் அணிலினதும் தனிப்பட்ட கருத்துக்கள். நீ குதிரைக் குட்டி ஆகவே நீ தான் உன் நிலையைக் குறித்துச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். புரிகிறதா? என்றது குதிரை. இப்போது குதிரைக் குட்டி திரும்பி ஆற்றங்கரைக்குச் சென்றது.

அங்கே எருதும் அணிலும் தாம் சொன்னவைகளே நியாயம் என மீண்டும் குதிரைக் குட்டிக்குச் சொல்லி வாதிட்டன. இப்போது குதிரைக் குட்டியோ தானாகவே ஆற்றைக் கடக்க முயன்றது. அப்பொழுதுதான் எருது உயரமானதால் அதற்கு ஆறு ஆழமின்றியும்". அணில் மிகச் சிறியதானாதால் அதற்கு ஆறு மூழ்கும் படியாகவும் இருந்ததை உணர்ந்தது. குதிரைக் குட்டியோ எருதிலும் உயரம் சற்றுக் குறைவானது. ஆனால் அணிலும் பார்க்க உயரம் கூடியது. அவைகள் இரண்டினைப் பார்க்கிலும் குட்டியின் உயரம் நடுத்தரமானதாக இருந்தமையால் அது ஆற்றை வெற்றி கரமாகக் கடந்து சென்றது.


குதிரைக்குட்டி செய்ய வேண்டியது என்னவெனத் தெரியாதபோது ஏனையோரிடம் கேட்டு அறிய முயற்சித்தது. பின்னர் நிலமைகளை அவதானித்தும், தானாகவே சிந்தித்தும் முடிவுகளை எடுத்தது. செயற்பட்டது. வெற்றி கண்டது.

# வழிகாட்டுவோம்





# திரைப்படம்




தொழில் நுட்பச் சாதனங்களில் ஒன்றான திரைப்படம் இன்று மிக முக்கிய கலைவடிவமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தலை சிறந்த கலைஞர்களின் பங்களிப்புடன் உலகமெங்கும் திரைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன.

இசை, நடனம், ஓவியம், நாடகம், இலக்கியம் என பல திறன்சார் கவின் கலைகள் இணைந்தே திரைப்படமாக உருவாகின்றன. சினிமாத் துறையில் கலந்து கொள்ளும் கலைஞர்களின் பங்களிப்புகள் திறன்கள் சிறப்பான நெறியாளுகை மூலம் வெளிக் கொணரப்படுகின்றன.

1895ஆம் ஆண்டில் லூமியர் சகோதரரின் "பகற்போசனைவேளை" என்ற குறும்படம் தயாரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது பேசாப்படமாகவே இருந்தது. 1927ஆம்ஆண்டில் ஜாஸ் பாடகன் என்னும் படமே பேசும் படமாகத் தயாரிக்கப்பட்டு வெளிவந்தது. 1913ஆம் ஆண்டில் ராஜா ஹரிச் சந்திராஎன்ற முதலாவது இந்தியப்படம் மும்பை நகரில் வெளியிடப்பட்டது. இது ஒரு மௌனப்படம் இதனை வெளியிட்டவர் தாதாசாகேப் பால்கே என்பவர். இந்தியாவில் முதலாவது பேசும் படமான 'ஆலம்ஈரா'1931மார்ச் மாதத்தில் வெளிவந்தது. 1916ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 'சீசகவதம்' என்ற பேசாப்படம் நடராஜ முதலியாரால் வெளியிடப்பட்டது. இங்கு 'காளிதாஸ்' என்னும் பேசும்படம் 1931ஒக்டோபரில் வெளிவந்தது. இந்த திரைப்படத்துறையில் ஈடுபட்டு உழைக்கும் பலரின் தயாரிப்பாளரும் நெறியாளர்களும் நடிகர்களும் பிரசித்தி பெற்றுயர்தற்கு ஏனையோர் மிகவும் ஒத்துழைப்பு வழங்கி வருவது பெருமைக்குரியதாகும்.



# தரப்பட்ட படங்களுக்குரிய பெயர்களை எழுதுங்கள்



# உயிர்களிடத்தில் அன்பு வைப்போம்



சித்தார்த்தன் அரண்மனையில் பிறந்த சிறுவன் இப்போது இயற்கை அழகை விரும்பி ரசிக்கும் இளைஞன். பூந்தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களைக் கண்டு மகிழ்வான். ஒரு நாள் அவன் எதிரில் ஒரு புறா மண்ணில் விழுந்தது. அதன் பட்டுடலில் கூர்மையான அம்பு ஒன்று நுழைத்திருக்க அது துடி துடித்தது. சித்தார்த்தன் பதறினான். புறாவைப் பக்குவமாகத் தூக்கி எடுத்து அதனை அன்போடு வருடிக் கொடுத்து மெதுவாக அம்பை வெளியே எடுத்தான். குருதி பீறிட்டுப் பாய்ந்தது. அந்த இடத்தில் பச்சிலைகளை வைத்துக் கட்டினான். "எந்தப் பாவி இப்படிச் செய்தானோ? என்று கூறி கண்ணீர் சொரிந்தான்.

இந்த நேரம் பார்த்து புறாவை வேட்டையாடிய தேவ தத்தன் என்பவன் அங்கே வந்தான். "நான் தான் இதன் மேல் அம்பு எய்தேன். புறாவை என்னிடம் தந்து விடு" என்றான். உயிர்களிடத்தில் அன்புகொண்ட சித்தார்த்தன் புறாவைக் கொடுக்க மறுத்தான்.

இருவருக்கும் விவாதம் எழுந்தது. இப்போது அந்த வழியால் வந்த முனிவர் தீர்வு கூறினார். "உன்னால் உண்டாக்க முடியாத உயிரை மாய்க்க உனக்கு அதிகாரம் கிடையாது. எனவே புறாவைக் காப்பாற்றிய சித்தார்த்தனுக்கே புறா உரியது" என்றார். புறாவின் காயம் ஆறிய பின்னர் அதனைச் சுதந்திரமாகப் பறக்க விட்டான் சித்தார்த்தன். அந்த சித்தார்த்தனே கௌதமபுத்தர் ஆனார்.

**யாரும் யாருக்கும் அடிமையில்லை.**

# விதிகளாக வீதிகளா?

அன்ரனி பீற்றர்



ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையில் தொழிற்சாலைகள், சந்தைவாய்ப்பு, போக்குவரத்துவசதி, மக்களின் பங்களிப்பு ஆகியன பொதுக்காரணிகளாக அமைகின்றன. இவை ஒவ்வொன்றின் பங்களிப்பும் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் கனதியான சக்திகளாக இருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம்

**மக்கள் பங்களிப்பு**

முதல் மூலப்பொருள்கள் போன்ற காரணிகள் இருந்த போதும் மக்கள் பங்களிப்பே அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் காரணிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது எனவே மனித வளம் என்பது ஏனைய எல்லாவற்றையும் விட முதன்மை வாய்ந்ததாக இருப்பதை எம்மில் உணர்ந்து கொள்வதில்லை. மனித வளம் ஒன்றே ஏனைய வளங்களைப் பெற்றுக் கொள்ளவும் ஏனைய வளங்களை உருவாக்கவும் உதவியாக இருக்கின்றது என்பதை எம்மில் பலர் அறிந்திருப்பதில்லை. ஆனால் அதுவே உண்மை. அதுவே யாதார்த்தம்.

**போக்குவரத்து வசதி**

வளர்ச்சியடைந்த நாடுகளிலே போக்குவரத்து வசதி, மூலமாகப் பல வகையான பயன்களை அந்த நாடுகள் அடைந்துள்ளன. என்னதான் உற்பத்தி இருந்தாலும் போக்குவரத்தின் முலமே சந்தை வாய்ப்பும் விற்பனையும் துரிதப்படுத்தப்படுகின்றது. போக்குவரத்து விதிமுறைகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப் படுவதால் இடையூறுகள் குறைகின்றன, போக்குவரத்துக் குற்றங்கள் குறைகின்றன. குற்றம் செய்வோர் வேறுபாடின்றித் தண்டிக்கப்படுவதன் முலமும் இறுக்கமான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதாலும் மனித வள இழப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன இதுவே அபிவிருத்திக்கு வளம் சேர்க்கும் செயற்பாடாகும்.

**எமது நாட்டில்**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வரிசையில் எமது நாடும் அடங்குவதால் போக்குவரத்து வசதிகள் மிகவும் நெருக்கடியான நிலையிலே இருக்கின்றன. வீதிகள் வசதிகள் செய்யப்பட்ட போதும் அதிகரித்துள்ள வாகன இறக்குமதியும், அதன் பயன்பாட்டால் வந்த நெரிசலும் போக்குவரத்து நடைமுறைகளும் இறுக்கமின்மையும் பொறுப்பற்றுச் செயற்படும் வாகனச் சாரதிகளும் உரிய போக்குவரத்து விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாமையும் குற்றம் செய்வோர் கண்டு கொள்ளப்படாமையும் இலஞ்சம் மூலம் தப்பித்துக் கொள்ளுதலும் வாகனச் சாரதிகளுக்கிடையேயான போட்டித்தன்மைகளும் வீதியிலே மக்கள் நிம்மதியுடன் தமது பயணத்தை மேற்கொள்வதற்குத் குந்தகம் விளைவித்துள்ளன. நாளாந்தம் உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்வதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் முடுக்கி விடப்படாமையால் பெறுமதி வாய்ந்த மனித வளமான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவது நாளாந்த நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

எமது பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் போரின் முடிவின் பின்னரான காலப் பகுதியில், பன்மடங்கான வாகனப் போக்குவரத்தை நாம் காண்கின்றோம். 70 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் விதிமுறைகளை மீறியே வாகனங்களைச் செலுத்துகின்றனர் என்று விமர்சிக்கப்படுகிறது. வேகக் கட்டுப்பாடின்றியே மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. எத்தனை உயிர்களை நாம் காவு கொடுத்துள்ளோம். அத்தனையும் மனித வளம்தானே? அபிவிருத்திக்குப் பயன்பட வேண்டிய மனித வளம்தானே. எவரும் இவற்றைச் சிந்திப்பதாகத் தெரியவில்லை?

**அபிவிருத்தியை நோக்காத வளவிரையம்**

போக்குவரத்து மிகவும் தேவையான ஒன்றாகும். ஆனால் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு போக்கும் வரத்தும் எமக்குப் பயன்மிக்கவையாக அமையவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற பல இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களில் பயன்நோக்கோடு பாவனைக்கு பயன்படுத்துபவை எத்தனை? பயனின்றிய பாவனையிலேதான் அதிகமானவை பயன்படுத்துகின்றன. சில போக்குவரத்துக்கள் வருமானத் தேடல்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலானவை பொழுது போக்குக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன.

உழைப்பின் மூலம் பெறப்பட்டவைகள் பயன்நோக்கி உபயோகிக்கப்படுகின்றன. பொழுது போக்கிற்காக, போக்குவரத்து விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படாமல் செலுத்தப்படுபவைகளாலேயே அதிக உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. போதைப் பாவனையும் இவர்களைத் தேவை உணராதவர்களாக, பொறுப்புணராதவர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றது.

**குடும்பத்திலும்**

ஆக குடும்பப் பொறுப்புக்களைத் தாய், தந்தையர்கள் உரியமுறையில் பிள்ளைகளுக்குக் கொடுக்காமையாலும், உழைப்பின் மகத்துவத்தை அவர்களுக்கு உணர்த்தாமலும், பிள்ளைகளை வீட்டுக் கடமைகளில் ஈடுபடுத்தாமையும் வறுமையை, கஸ்ரத்தை உணரச் செய்யாமையும் பிள்ளைகள் தத்தம் வழியிலே தான் தோன்றித்தனமாகச் செல்லவும், தேவைகளை நிறைவு செய்ய பெற்றோரைக் கட்டுப்படுத்தவும் காரணங்களாக இருக்கின்றன. இனிவருங் காலத்திலாவது எம்மை நாம் மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும். வீதிகளில் எமது விதிகள் முடிவுக்கு வருவதை அனுமதிக்காதிருத்தல் வேண்டும். எமதும் மற்றவர்களதும் சிறப்பான போக்குவரத்துக்கு உறுதிபூண்டு நடந்துகொள்வோம்.




போக்குவரத்து மிகவும் தேவையான ஒன்றாகும். ஆனால் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு போக்கும் வரத்தும் எமக்குப் பயன்மிக்கவையாக அமையவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற பல இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களில் பயன்நோக்கோடு பாவனைக்குப் பயன்படுத்துபவை எத்தனை? பயனின்றிய பாவனையிலேதான் அதிகமானவை பயன்படுத்துகின்றன. சில போக்குவரத்துக்கள் வருமானத் தேடல்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலானவை பொழுதுபோக்குக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன.




# வேண்டும்

கே.எஸ். சிவஞானராஜா

விபத்துக்கள் இல்லாத வீதிகள் எமக்கு
வரமாகக் கிடைக்க வேண்டும்;
வில்லங்கம் இல்லாத நடை உடைபாவனை
வீட்டிலே ஆரம்பிக்க வேண்டும்;

அபத்தமே இல்லாத அரசியலமைப்பு இங்கு
அடிப்படையாக வர வேண்டும்;
ஆதிமுறைப்படி ஆன்மீக ஒழுக்கங்கள்
அகலாமல் பாதுகாக்க வேண்டும்;

சுபகாரியங்கள் ஏழைகள் வீட்டிலும்
சோராமல் நடக்க வேண்டும்;
சுத்தமான தலைமைகள் இருக்கவே நாட்டில்
தூய மதங்களும் போதிக்க வேண்டும்;
அபகார நிந்தைபட் டுழலாமல் ஆன்மிகம்
ஆலயங்களில் தொனிக்க வேண்டும்;

**ஆண்டு தோறும் முற்றத்தில் பொங்கும் போதுதான்**
**ஆன தைப்பொங்கல் உரிமையைத் தூண்டும்**

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 252
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.02.09
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 84,274,428/-
Z 05 12 21 48
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 163
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.02.09
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,611,115/-
வெற்றி இலக்கங்கள்
16 23 53 73 R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SHANTHIHAM
Association for Health & Counselling

**Vacancy - Secretary to the Director**

Shanthiham, Association for Health and Counselling is a NonGovernmental organization, based in Jaffna, committed to support the wellbeing and positive mental health of persons, families and communities through providing psychological and community based psychosocial services including trainings, publications and capacity building.

Shanthiham is interested to receive applications for the above position.

The suitable candidate should have a sound knowledge in English and Tamil, should be able to carry out office work, coordinate and communicate with staff of Shanthiham for the day to day administration. Experience in secretarial work will be an advantage.


Remuneration (including the employee benefits) could be negotiated based on experience and knowledge.

Duration - 1 year contract subject to renewal.

Applications for the above post should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 17.02.2018. The candidate may also send his or her application via email but the original should be sent by post.

**The Director, Shanthiham,**
**No. 8, Katpaha Vinayagar Lane, Off Kachcheri Nallur Road, Jaffna.**
**Email address: shanthiham@yahoo.com**

# பித்தவெடிப்பு ஏற்பட காரணம் என்ன?



கால்களில் சருமத்தின் உலர்ந்த தன்மை, குதிக்கால் தோல் தடித்துக் கடினமாகக் காணப்படுதல், உடல் நிறைச் சுட்டி அதிகரித்தல், நீண்ட நேரம் நிற்றல், நடத்தல், தோலின் வளையும் தன்மை குறைவாக இருத்தல், குதிக்கால் மூடப்படாத செருப்பு வகைகளை அணிதல், அருந்தும் நீரின் அளவு குறைதல், குளிரான காலநிலை, தைரொயிட் சுரப்பி நோய்கள், நீரிழிவு நோய், தோல் நோய்களான "சொறாசிஸ்", "எக்சிமா" போன்றவை உங்கள் கால்களில் பித்த வெடிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகும். பித்த வெடிப்பை கட்டுப்படுத்துவதற்கு அல்லது முற்றாக குணமாக்குவதற்கு நீங்கள், மென்மைத் தன்மையைக் கொடுக்கும் பாதணிகளை, கால்களை மூடக்கூடிய விதத்தில் சரியாக அணிதல் வேண்டும். நாளாந்தம் அதிகளவு நீர் அருந்துதல் வேண்டும்.

உங்கள் கால்களைப் பற்தூரிகை கொண்டு சவர்க்கார நீரினால் கழுவி, நன்றாகத் துடைத்து, படுக்கைக்குப் போகுமுன் சிறிதளவு எண்ணெய் அல்லது ஈரப்பதன் தரக்கூடிய கிறீம் வகைகளைப் பூசி, படுக்கைக்குச் செல்லவும். மேலும் நீங்கள் உடல் எடை கூடியவர் எனின் உடல் நிறையைக் குறைக்கும் வழி முறைகளைக் கைக்கொள்ளவும். உங்களுக்கு தைரொயிட் சுரப்பி வருத்தம், நீரிழிவு, தோல் சம்பந்தமான வியாதிகள் காணப்படின் தோல் சிகிச்சை நிபுணரின் ஆலோசனைகளை நாடுங்கள்.

**வீடு வாடகைக்கு உண்டு**
சிறிய குடும்பத்திற்கு (2 அல்லது 3)
யாழ். நகரில் வீடு வாடகைக்கு உண்டு.
உடன் தொடர்புக்கு - 076 379 1672
(CS 13763/15/17)

**பணிப்பெண் தேவை**
யாழ். நகரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. - 075 039 9441
(CS 13762/15/17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 765
சீட்டிழுப்பு திகதி 2018.02.08 வியாழக்கிழமை
Q 03 31 38 71
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 54,760,164/-
தொ.பே: 011 4062002 / 011 4062082 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 10.02.2018ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 09.02.2018 | வெற்றி வாரம் 2248 | வர்ணம் சிவப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 13 39 40 59
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 1, 05, 62, 688/=
2018.02.11 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**இரண்டு அடுக்கு மாளிகை வீடு விற்பனைக்குண்டு**



பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தில் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயிலுக்கு வடக்கே 200 m தூரத்தில் இரண்டு அடுக்கு வீடு, 5 அறைகள், 02 குளியல் அறைகள், Kitchen, Storeroom, 8 1/2 பரப்புகாணி, சுற்றிவர மதில், தென்னை மரங்கள், மாமரங்கள், நெல்லிமரம் போன்ற சோலைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 077 926 3491, 001 64799 27240, 077 299 8854
(CS 5826/15/17)




கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, பழைய காளி கோயில் என விளங்கும்
**திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்**
13ஆம் ஆண்டு **மஹோற்சவம் - 2018**

அம்பிகை அடியார்களே!

இற்றைக்கு 200 வருடம் பழைமை வாய்ந்த ஆலயத்தில் மங்கலகரமாக நிகழும் ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 03 ஆம் நாள் (15.02.2018) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி மாசி மகத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். முதல் ஐந்து நாள்களும் விநாயகர், சுப்பிரமணியருக்கும் மிகுதி பத்து நாள்களும் அம்பாளின் அனுக்கிரகப்படி அம்பாளின் மகோற்சவம் நடைபெறும். தினமும் மாலை 20 நாள்களும் லக்ஷார்ச்சனை நடைபெறும்.

**மஹோற்சவ விவரம்**



| | | | | |
|---|---|---|---|---|
| 15.02.2018 | - | வியாழக்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு | கொடியோற்றம் |
| 24.02.2018 | - | சனிக்கிழமை | இரவு | திருமஞ்சம் |
| 27.02.2018 | - | செவ்வாய்க்கிழமை | இரவு | சப்பறம் |
| 28.02.2018 | - | புதன்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு | பஞ்சரதபவனி |
| 01.03.2018 | - | வியாழக்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு | தீர்த்தோற்சவம் |
| | | இரவு | | கொடியிறக்கம் |



குறிப்பு:
- சிவராத்திரி அன்று (13.02.2018) செவ்வாய்க்கிழமை இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக்காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வர லிங்கத்திற்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம். (பால் காவடியும் எடுக்கலாம்)
- காத்தவராயர் மடை (05.03.2018) திங்கட்கிழமை பழைய மரபு முறைப்படி அடியார்கள் பங்குபற்றும் விதத்தில் சுளகுமடை நடைபெறும்.

அடியார்கள் இக்காலத்தில் ஆசாரசீலர்களாய் வருகை தந்து அம்பாளைத் தரிசித்தும், இந்நிகழ்வுகளில் பங்கு கொண்டும், அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் பேரின்பப்பெருவாழ்வு வாழ்வீர்களாக.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"
அனைவரும் வருக அன்னையின் திருவருள் பெறுக

அம்பாளின் தொண்டில் அறங்காவலர்

(snp.102) (13.17)

# கர்ப்ப காலத்தில் பெண்கள் கவனிக்க வேண்டியவை



பெண்கள் கர்ப்ப காலத்தில் உடலின் எடை அதிகரிப்பதை கவனமாகக் கண்காணிக்க வேண்டும். பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் அதிகரிக்க வேண்டிய எடையை விட கூடுதலாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ எடை இருக்க கூடாது.

சராசரி எடை கொண்ட பெண்கள் 10 முதல் 16 கிலோகிராம் வரை எடை கூடலாம். முதல் மூன்று மாதங்களில் 1 முதல் 1.5 கிலோ, அடுத்த மூன்று மாதங்களில் 5 முதல் 7 கிலோ வரை எடை அதிகரிக்கலாம். இறுதி மூன்று மாதங்களில் கூடுதலாக 2 முதல் 3 கிலோ வரை எடை அதி கரிக்கலாம்.

உடல் பருமனான பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் 7 முதல் 11 கிலோ வரை எடை அதிகரிக்கலாம். உடல் எடை மிகவும் குறைவாக உள்ள பெண்கள் கரிப்ப காலத்தில் 12 முதல் 18 கிலோ வரை எடை ஏறலாம். கர்ப்பிணிப் பெண்களின் எடையைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். எடை மிகவும் அதிகரித்தாலோ, அல்லது சரியாக அதிகரிக்காமல் இருந்தாலோ மருத்துவரின் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளலாம். அதுவும் உணவை மூன்று வேளையாக மட்டும் சாப்பிடாமல் 6 வேளையாக பிரித்து சாப்பிடுவது நலம்.

**சாப்பிடவேண்டியவை**

கர்ப்ப காலத்தில் பெண்கள் நல்ல, சுத்தமான, ஆரோக்கியமான சத்துணவுகளைச் சாப்பிட வேண்டும். தானியங்கள், பருப்புகள், பயிறுவகைக்ள், காய்கறி, பழங்கள், கீரைகள், பால், தயிர், வெண்ணெய், நெய், முந்திரி, காய்ந்த திராட்சை, வேர்க்கடலை, முட்டை, மீன், ஆடு, கோழி இறைச்சி, ஆட்டு ஈரல் சத்தான வற்றை உணவாக எடுத்துக் கொள்ளல் அவசியம்.

கல்சியம் அதிகரிக்க தயிர், கேழ்வரகு, கருவேப்பிலை, மணத்தக்காளி கீரை, மீன், நல்லெண்ணெய் போன்றவற்றை அதிகம் உணவில் சேர்த்து கொள்ள வேண்டும்.

இதனுடன் மருத்துவர்கள் தரும் சத்து மாத்திரைகளை தவறாமல் சாப்பிட வேண்டும்.

உடலுக்கு அதிகம் சூடு தரும் பப்பாளி, அன்னாசி பழம், எள்ளுருண்டை போன்றவற்றை குறைவாக சாப்பிடுவது நல்லது. நன்கு பழுத்த பப்பாளி சாப்பிடலாம்.

கர்ப்ப காலத்தில் பெண்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். குறைந்தபட்சம் 8 முதல் 12 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். கர்பிணிகளுக்கு மலச்சிக்கல் ஏற்படுவது சகஜம். அதனால் காய்கறி, பழங்கள் மற்றும் பயிறுவகைகள் போன்ற நார்சத்து அதிகமுள்ள உணவுகளை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக மசக்கையால் பெண்கள் அதிகமாக வாந்தி எடுக்கும் சமயத்தில் எளிதாக சமிபாடடையும் உணவை சிறிது சிறிதாக சாப்பிட வேண்டும். பலர் எட்டு மாதங்கள் வரை வாந்தி எடுப்பர். பெண்கள் அதற்காக பயப்பட தேவையில்லை. அந்த சமயங்களில் தேவையான உணவை சாப்பிடத் தவறக்கூடாது.




## மருத்துவ குணம் நிறைந்த மலர்கள்

தலையில் பூ வைப்பது பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளவும். அந்த வாசனையால் தங்கள் மனதைப் புத்துணர்ச்சியுடன் வைத்துக்கொள்ளவும் மட்டும் தான் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்

இதற்குக் காரணம் எமக்கு 'மலர் மருத்துவம்' பற்றி தெரியாமல் இருப்பது தான். உலகில் கோடிக்கணக்கான மலர்கள் உள்ளன. அவற்றில் 25 சதவீத மலர்கள் மருத்துவத்துக்காகப் பயன்படுகின்றன. பெண்கள் தலையில் பூச்சூடுவதால் மனம் புத்துணர்ச்சி அடைவதுடன் பல்வேறு நோய்களையும் தீர்த்து வைக்கிறது. ரோஜாப்பூ தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும். மல்லிகைப்பூ மன அமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும். செண்பகப்பூ வாதத்தைக் குணப்படுத்தும். பார்வைத் திறனை மேம்படுத்தும். பாதிரிப்பூ காது கோளாறுகளைக் குணப்படுத்தும்; செரிமானச் சக்தியை மேம்படுத்தும்; காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைச் சரிசெய்யும். செம்பருத்திப் பூ தலைமுடி தொடர்பான பிரச்சினைகளை சரிசெய்யும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும். மகிழம்பூ தலை சம்பந்தப்பட்ட பிரச்சினை களைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும். வில்வப்பூ சுவாசத்தைச் சீராக்கும். காசநோயைக் குணப்படுத்தும். சித்தகத்திப்பூ தலை வலியைக் போக்கும்; மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும். தாழம்பூ நறுமணம் வீசுவதோடு சீரான தூக்கத்துக்கு உதவும்; உடல் சோர்வை நீக்கும். தாமரைப்பூ தலை எரிச்சல், தலை சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும் மனஉளைச்சலை நீக்கி மனஅமைதிக்கு வழிவகுக்கும் தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும். கனகாம்பரம்பூ தலைவலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும். தாழம்பூ, மகிழம்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ செண்பகப்பூ போன்ற மலர்கள் வாதம், கபம் போன்றவற்றைச் சரிசெய்யும். அதேபோல மலர்கள் சூடுவது உடலுக்கு ஆரோக்கியம் என்று நினைத்து எல்லா மலர்களையும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தலையில் வைத்திருக்கக்கூடாது. ஒவ்வொரு மலரையும் குறிப்பிட்ட நேரம் வரை மட்டுமே தலையில் சூட வேண்டும். முல்லைப்பூ 18 மணி நேரம், அல்லிப்பூ 3 நாள்கள் வரை, தாழம்பூ 5 நாள்கள் வரை, ரோஜாப்பூ 2 நாட்கள் வரை, மல்லிகைப்பூ அரை நாள் வரை, செண்பகப்பூ 15 நாள்கள் வரை, சந்தனப்பூ ஒரு நாள் மட்டும், மகிழம்பூ மற்றும் குருக்கத்திப் பூ சாப்பிடும்போது மட்டும் சூடிக்கொள்ளலாம். மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, மாசிப்பூக்களை வாசனை இருக்கும் வரை மட்டும் சூடிக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நேசம்மா பாலசுப்ரமணியம்



தோற்றம் 23.09.1919 மறைவு 07.02.2018

அராலி வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா பாலசுப்ரமணியம் கடந்த (07.02.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம்மா, செல்வராசா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதாகிருஷ்ணன் (கனடா), பாஸ்கரன் (இலங்கை), நாகேஸ்வரி (கனடா), மகேஸ்வரன் (USA) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் இரத்தினம்மா (கனடா), தர்மசுந்தரி (இலங்கை), சியாமளா (USA) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கங்கா - பாலமுருகன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், மயூரன் - சஜி, செந்தூரன் - ராஜி, ஆரணி - பிறேம்ஆனந், சங்கீதா, அபிராமி - Luke, சிவகாமி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், அம்பிகா, கார்த்திக், அபினேஸ், சாய்பிரிதி, உமா, நிலவன், அர்ச்சுனுன், வினோத், அஸ்சிக்கா, ஒபிஸ்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2018) சனிக்கிழமை பி.ப. 5.00 மணி முதல் மாலை 9.00 மணிவரையும் 4164, Sheppard Avenue East, Scarborough, ON MIS IT3 இல் அமைந்துள்ள Orden Funeral Home மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப் பட்டு 12.02.2018 திங்கட்கிழமை பி.ப. 12.30 மணிமுதல் பி.ப. 2.30 மணிவரை 635, Parliament Street, Totonto, M4X IRI இல் அமைந்துள்ள St. James Cemetery&Crematoriumஇல்கிரியைகள்இடம்பெற்றுபின்னர்தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ராதாகிருஸ்ணன் : +4164544677**
**நாகேஸ்வரி : +4166164954**
**கங்கா : +4166489262**

(C 5827/15/17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 90 | 60 | 80 | 20 |
| கத்தரி | 50 | 130 | 50 | 60 | 40 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 80 | 150 | 100 | 60 | 120 |
| பாகல் | 130 | 200 | 80 | 100 | 140 |
| க.கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 30 |
| பெ.வெங்காயம் | 80 | 140 | 160 | 100 | 120 |
| சி.வெங்காயம் | 180 | 350 | 150 | 180 | 140 |
| பூசணி | 30 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 60 | 80 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 70 | 70 | 80 | 60 | 60 |
| கீரை | 20 | 40 | 20 | 10 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | 40 | 30 |
| ப.மிளகாய் | 70 | 120 | 60 | 80 | 60 |
| புடோல் | 70 | 70 | 80 | 80 | 40 |
| கோவா | 80 | 70 | 60 | 80 | 40 |
| வெண்டி | 80 | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 100 | 170 | 180 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 220 | 200 |
| தேங்காய் | 75 | 80 | 80 | 100 | 90 |
| உ.கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 60 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 350 | 180 | 180 | 160 | 100 |
| கரட் | 300 | 150 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 600 | - | 600 | 500 | - |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 400 | 300 |
| கணவாய் | 600 | 800 | 700 | 1000 |
| பாரை | 600 | 600 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 500 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 450 | 450 | 600 |
| முரல் | 400 | 400 | 300 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 400 | 300 | 500 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 350 | – |
| சூடை | 150 | 150 | 120 | 150 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 200 |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 300 | 400 |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 250 | 300 | 400 | – |
| வாளை | 200 | 250 | 300 | 400 |

## மன். பிரதேச செயலக அணிகள் பூப்பந்தாட்டத்தில் சாதித்தன


யாழ்ப்பாணம், பெப். 10
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள், பெண்கள் என்று இரண்டு பிரிவிலும் மன்னார் பிரதேச செயலக அணிகள் சம்பியனாகின.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## உதயசூரியன் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 10
உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் உடுவில் உதயசூரியன் அணி கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## யூனியன், இருதயராஜா அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 10
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன் அணி, மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி ஆகியன வெற்றிபெற்றன.
கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:3 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:4 என்ற கோல்கணக்கில் இருதயராஜா அணி வெற்றிபெற்றது. (ம-23)




மைதானத்தின் எந்தப் பகுதிக்கும் பந்தை விரட்டுவதில் வல்லவர் வில்லியர்ஸ். இதனால் இவரை 'மிஸ்டர் 360 டிகிரி' என்று அழைப்பார்கள்.

# களத்தில் 360 டிகிரி

இந்தியாவுக்கு எதிராக எஞ்சியுள்ள மூன்று ஒருநாள் ஆட்டங்களிலும் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் வில்லியர்ஸ் களமிறங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஆறு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வில்லியர்ஸ் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளது இந்திய அணி. நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. ஜோகன்ஸ்பார்க் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.
**வருகிறார் வில்லியர்ஸ்**
மைதானத்தின் எந்தப் பகுதிக்கும் பந்தை விரட்டுவதில் வல்லவர் வில்லியர்ஸ். இதனால் இவரை மிஸ்டர் 360 டிகிரி என்று அழைப்பார்கள். கடந்த மூன்று ஆட்டங்களிலும் தென்னாபிரிக்க அணியில் மிகையாக உணரப்பட்டது. இந்த நிலையில் இன்றைய ஆட்டத்தில் வில்லியர்ஸ் களமிறங்குகின்றமை தென்னாபிரிக்காவுக்குச் சாதகம். இன்றைய ஆட்டத்திலும் எஞ்சியுள்ள ஏனைய இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே தென்னாபிரிக்க அணியால் குறைந்த பட்சம் தொடரை 3:3 என்று சமநிலைப்படுத்த முடியும். (ம)

## சிறிமுருகன் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 10
உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் மல்லாகம் சிறிமுருகன் அணி கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மல்லாகம் சிறிமுருகன் அணியை எதிர்த்து நியூவொரியஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சிறிமுருகன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இலங்கை பளுதூக்கல் அணியில் தமிழர்கள் மூவர் இடம்பிடித்தனர்




யாழ்ப்பாணம், பெப். 10
இலங்கை தேசிய இளையோர் பளுதூக்கல் அணியில் தமிழர்கள் மூவருக்கு இடம் கிடைத்துள்ளது. ஒரு வீராங்கனை, இரு வீரர்கள் என அந்தப் பிரதிநிதித்துவம் அமைந்துள்ளது.
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி. அசிகா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் விஸ்ணுகாந். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் யு. சியாந்தன் ஆகிய மூவருக்குமே அவ்வாறு இடம்கிடைத்துள்ளது. (ம-23)




## குல்தீப், சாகலை சமாளிக்கத் திட்டம் தேவை

### டுமினியின் புலம்பல் இது

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீவ் யாதவ், சாகல் இருவரையும் சமாளிக்க வேறு திட்டம் தேவை என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான டுமினி.
இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
தொடர் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே டுமினி இவ்வாறு தெரிவித்தார்.
இங்குள்ள "ஆடுகளத்தன்மை மற்றும் சீதோஷ்ண நிலையை எங்களைவிட இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் நன்றாகப் பயன்படுத்துகிறார்கள். எவ்வளவு வேகத்தில், எந்த அளவில் பந்துவீசினால் நன்றாக இருக்கும் என்பதைக் கணித்து அதற்கு ஏற்ப வீசுகிறார்கள். ஒன்று, இரண்டு ஓட்டங்கள் வீதம் எடுப்பதையும் கட்டுப்படுத்துகிறார்கள். குல்தீவ், சாகல் இருவரின் பந்துவீச்சையும் எதிர்கொள்ளும் உத்தியைக் கண்டறிய வேண்டும் அதுவே தற்போதைய தேவையும்" என டுமினி மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஷஸ் தொடரில் இல்லை சூதாட்டம்

### ஐ.சி.சி. அறிவிப்பு

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் கடந்த வருடம் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் சூதாட்டம் இடம்பெற்றது என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், அவ்வாறு சூதாட்டம் எதுவும் இடம்பெறவில்லை என்று அதிகாரபூர்வமாக அறிவித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.
கடந்த ஆஷஸ் தொடரை 4:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியது. பேர்த்தில் நடைபெற்ற



மூன்றாவது ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றிபெற்ற தன் பின்னணியில் சூதாட்டம் உள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் அது தொடர்பில் விசாரணை நடத்திய பன்னாட்டு கிரிக்கெட் சபை, அவ்வாறு சூதாட்டம் எதுவும் இடம்பெறவில்லை என்று அறிவித்துள்ளது. (ம)

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் கிண்ணம் வெல்ல இலங்கைக்கு வாய்ப்புக்கள்

பங்களாதேஷ் இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெறுவதற்கு அதிகளவான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

இலங்கை அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.




நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 222 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக குசல் மென்டிஸ் 68 ஓட்டங்களையும், றோசன் சில்வா 56 ஓட்டங்களையும், டில்ருவான் பெரேரா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசாக், தயுல் இஸ்லாம் இருவரும் தலா 4 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டாஸ் 24 ஓட்டங்களுடனும், மிராஸ் 5 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 25 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் டாஸ். மிராஸ் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் இலக்குகள் சரிய 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ் அணி.

பந்துவீச்சில் லக்மல், தனஞ்சய இருவரும் தலா 3 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

112 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணிக்கு 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் குசல் மென்டிஸ். கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா இருவரும் கூட்டணி அமைத்தனர். அணி 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தனஞ்சய டி சில்வா. 32 ஓட்டங்களுடன் கருணாரத்னவின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. றோசன் சில்வா மத்திய வரிசையில் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தார். நாள்



முடிவில் இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதுவரையிலுமான நிலவரத்தின்படி இலங்கை அணி 312 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. றோசன் சில்வா 58 ஓட்டங்களுடனும், லக்மல் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)


## இந்த வாரம்











கண்டுபிடிக்கப்படாத காணாமலாக்கப்பட்டோர்

மறுக்கப்பட்ட நீதி : குமாரபுரம் படுகொலை!

நீந்திக் கடந்த நெருப்பாறு

காதலர் தினம் இப்படியும் கொண்டாடலாம்

எல்விஸ் திமோதி பொனிபஸ்

சாதனைகளால் நிமிரும் மகாஜனக் கல்லூரி

எங்கு நோக்கிலும் டெங்கு பீதி!



அனைத்து முகவர்களி[illegible] பெற்றுக்கொள்ளலா[illegible]

தொடர்புகளுக்கு: 021 493 2222

# மற்றுமொரு இறுதியாட்டத்தில் பார்சிலோனா அணி



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கோப்பா டெல் ரே தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பார்சிலோனா அணி. நடப்பு வருடத்துடன் சேர்த்து தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாக இறுதியாட்டத்துக்குச் சென்றுள்ளது பார்சிலோனா.

நேற்று இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் பார்சிலோனாவை எதிர்த்து வலென்சியா அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் அதாவது ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் சுவாரஸ் வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்தி பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கவுன்டினோ. 1:0 என்ற கோல் கணக்கில் நீண்டநேரம் ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா. 82ஆவது நிமிடத்தில் ராகிடிக் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பார்சிலோனா அணி.

(ம)


## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் சுன்னாகம் வீதியில் கண்ணகை அம்மன் கோயிலுக்கு அருகில் 15 + 18 பரப்புக் காணி வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (CS 13601) (14.17)

தொடர்பு: 077 706 5366
பி.ப 3.00 - 6.00


# வாரத்துக்கு 38 கோடி ரூபா ஒப்பந்தத்தை பார்சிலோனாவுக்காக மறுத்தார் மெஸ்ஸி

சீனாவைச் சேர்ந்த கால்பந்தாட்டக் கழகமொன்று இலங்கை மதிப்பில் வாரத்துக்கு சுமார் 38 கோடி ரூபாவை மெஸ்ஸிக்கு சம்பளமாக வழங்க முன்வந்த போதிலும் அந்த ஒப்பந்தத்தை மறுத்துள்ளார் மெஸ்ஸி. பார்சிலோனாவில் தொடரும் விருப்பத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் மெஸ்ஸியும் ஒருவர். ஆர்ஜென்ரினா அணியின் தலைவராக உள்ள அவர், கழகத்தைப் பொறுத்தமட்டில் ஸ்பெய்னின் பார்சிலோனாவுக்காகவும் விளையாடி வருகிறார். பார்சிலோனாவில் இருந்து மெஸ்ஸியை வாங்குவதற்கு அவ்வப்போது சில கழகங்கள் முயற்சி செய்வதுண்டு. அந்த வகையில் சீனாவைச் சேர்ந்த கழகமொன்று வாரத்துக்கு 38 கோடி ரூபாவை சம்பளமாக வழங்கி ஒப்பந்தம் செய்ய மெஸ்ஸியை அணுகியுள்ளது. எனினும் இந்த ஒப்பந்தத்தை மெஸ்ஸி நிராகரித்துள்ளார்.

(ம)




## காசி யாத்திரை

ஆரம்பம் : 09.03.2018 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

**தரிசிக்கும் இடங்கள்:**

டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும். (IN 5828)(14.17)

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154



## ஒடியல் கூழ்

சைவம் - அசைவம்

பைறட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்

Fried Chickan - Rice & Bites

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800 (C58237) (13.17)



## காணவில்லை

கடந்த (05.02.2018) திங்கட்கிழமை கமராவிற்குப் பயன்படுத்தப்படும் Memory Card (32GB) யாழ்ப்பாணத்திற்கு அண்மித்த பகுதியில் (ரவுண்) தொலைந்து விட்டது. முக்கிய ஆவண படங்கள் அதில் பதிவேற்றப் பட்டதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
**சன்மானம் வழங்கப்படும்.** (CS 13733) 04.97

சாயின் போட்டோ
077 611 0804/ 071 777 8550
நயினாதீவு



## காணவில்லை

மாட்டுப்பதிவு இல.2195 கொண்ட பொன்னாலை வீதி, மானிப்பாய் முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள மாட்டுப்பண்ணையில் இரு நல்லினப் பசுக்கன்றுகள் காணாமல் போயுள்ளன. தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 035 5456



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 08 . 1935

மறைவு 22 . 01 . 2017



**இராசதுரை செல்வக்கணேசபிள்ளை**

திதி:- அபரபட்ச தசமி

பண்பாலும் படிப்பாலும் எமக்குப் பாதையமைத்து தந்தவரே!
உங்கள் நினைவுகளின் அரவணைப்பில்
நெஞ்சம் கனக்க ஈரவிழிகளுடன் இதய அஞ்சலிகள்

119/5, முன் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (J/9368)(11.17)


# அடுத்த உலகக்கிண்ணத்தில் குல்தீப், சாகல் துருப்புச்சீட்டு

## கோக்லி பெருமிதம்

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் குல்தீப் யாதவ், சாகல் இருவரும் முக்கிய துருப்புச்சீட்டாக இருப்பார்கள் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி. உலகக்கிண்ணத் தொடரில் அஸ்வின், ஜடேயா இருவரும் களமிறங்க வாய்ப்புக்கள் மிகவும் அரிது என்பதையும் கோக்லி சொல்லாமல் சொல்லியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி இன்று களமிறங்குகிறது. இந்தத் தொடர் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

மணிக்கட்டை அதிகமாகப் பயன்படுத்தி சுழற்பந்து வீசக்கூடிய யுஸ்வேந்திர சாகல், குல்தீப் யாதவ் கடந்த ஆட்டத்திலும் அசத்திவிட்டனர். அவர்களுக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடும் வாய்ப்பு, குறிப்பாக வெளிநாட்டு மண்ணில் டெஸ்டில் ஆடுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்று கேட்கிறீர்கள். இப்போது அது பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இங்குள்ள சூழலில் அவர்கள் பந்து வீசும் விதமும், இலக்குகளைக் கைப்பற்றும் திறனும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதற்குரிய வாய்ப்பை பிரகாசப்படுத்தி வருவது போல்தான் தோன்றுகிறது.

இரண்டு பேரும் தங்களது சுழற்பந்து வீச்சு மூலம் எதிரணியை முற்றிலும் முடக்குவதைப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது. துணிச்சலாக பந்து வீசுகிறார்கள். விதம் விதமாக சவால் கொடுக்கிறார்கள். இது போன்ற பந்துவீச்சை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. இவ்வாறான ஒரு பலத்துடன்தான் 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை எதிர்கொள்ளவுள்ளோம். அந்தத் தொடரில் இவர்கள் இருவரும் துருப்புச் சீட்டாக இருப்பார்கள்" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.